# தமிழரசு

திங்கள் இருமுறை ஜூலை 1 1972 35 காசு





# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்







செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசிய மானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டுப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டுப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

# குறளரசு

*முதல்வரின்*
குறளோவியம்

சிறைச்சாலைகள் அல்ல
மறுவாழ்வு இல்லங்கள் !

கண்ணிற் சிறந்ததோர் உறுப்பில்லை
கவலை தீர்த்தார்க்கு நிகரில்லை!

திருமழிசையில் சித்தரஞ்சன்

கேளுங்கள் கொடுக்கப்படும்

வீடு கிடைத்தது: வேதனை தீர்ந்தது

தஞ்சை மாவட்ட உழவர்களுக்குத்
தகுந்த சில பரிந்துரைகள்

எதிர்கால வாழ்வுக்கு எளிதான வழி

வேண்டுதல் பதிகம்

உண்மையின் சந்நிதி (தொடர்கதை)

கல்லெழுத்துக் கற்க.....

வாழ்வோர் யார்? (கவிதை)

முத்து மாலை (சிறுவர் கதை)

ஆராய்ச்சி மணி (படக்கதை)

வெண்பாப் போட்டி

குறுவைச் சாகுபடிக் குறிப்புகள்

மலர் 3
இதழ் 1
1. 7. 1972



முகப்பில் .
குறளோவியம்
தரும் ஓவியம்.

# குறளோவியம்

தமிழக முதல்வர் கலைஞர்



யானை ஒன்று தண்ணீர் குடிப்பதற்காக ஆற்றிலே இறங்குகிறது. அப்போது அந்த யானையை முதலையொன்று பிடித்துக் கொள்கிறது. யானை உயிர் தப்ப முடியாமல் தவிக்கிறது. அலறுகிறது. கடைசியாக அந்த யானை, நாராயணா! நாராயணா!! என்று கத்துகிறது. உடனே மகாவிஷ்ணுவான நாராயணன் தோன்றி அந்த யானையை முதலையிடமிருந்து விடுவிக்கிறான். இதைத்தான் புராணிகர் "கஜேந்திர மோட்சம்" என்று சொல்வார்கள்.

மலை போன்ற யானையும் நீரில் கால் வைத்துவிட்டால் முதலையிடம் சிக்கிவிட வேண்டியிருக்கிறது என்பதை விளக்கவும் அதுபோலவே தரையிலே பலமில்லாத முதலை தண்ணீரில் இருந்தால், யானையை இழுக்கக்கூடிய பலம் பெறுவதாகவும் சொல்லப்படுவதை எடுத்துக் காட்டவும் நிகழ்ச்சிச் சித்திரம் தீட்டிய புராணிகக் கற்பனையாளர், இறுதியில் அந்த அபயக் குரல் எழுப்ப வைத்து, அனந்தசயனனையும் அங்கே வரவழைத்து — கஜேந்திர மோட்சம் என்ற கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

தண்ணீரில் இறங்கி முதலை வாயில் காலைக் கொடுத்துப் பரந்தாமனை அழைத்துப் பரகதி அடைந்த யானை, புராணிகருடைய யானை!

இதோ, இன்னொரு யானையை நமது வள்ளுவப் பெருந்தகையார் அறிமுகப்படுத்துகிறார், பாருங்கள்! வேல்கொண்டு வீரன் வருகிறான். அந்த வீரனை யானை எதிர்க்கிறது. வீரனும் யானையை வெல்லத் தரமாகப் போரிடுகிறான். தமிழனல்லவா? முதுகு காட்டாத மரபு அல்லவா?

நிமிர்ந்த நெஞ்சோடும், தூக்கிய வேலோடும் அவன் யானை மீது பாயும் போது யானையும் தந்திரமாகத் தன் தந்தங்களை நீட்டி, அந்த வீரனின் வயிற்றைக் குத்தி, அவனை மேலே தூக்கிவிடுகிறது. மரண முகப்பிலே அந்த வேலேந்தி வேதனைக் குரல் எழுப்புகிறான். அதுவும் வீரத்தோடு கலந்து வரும் குரல்தான். வீரனைக் குத்திய வேகத்திலே, அந்த வேழம் வெற்றி நடை போட்டு, ஆவேசமாகவும் ஆத்திரமாகவும் — அங்குமிங்கும் ஓடுகிறது. அப்படி ஓடும்போது ஒரு பாறைக்குப் பக்கத்திலே தேங்கி நிற்கும் சேறு நிரம்பிய குட்டையிலே காலை வைத்து விடுகிறது. காலை எடுக்க முடியவில்லை. கனமான மிருகம் யானை; அதன் கனம் பூமியை நோக்கி இறங்குகிறதே தவிர மேலெழுந்து கரையேற யானைக்கு உதவி செய்யும் அளவினதாய் இல்லை.

யானை தவிக்கிறது. அப்போது ஒரு வேடிக்கை நடக்கிறது. என்ன அந்த வேடிக்கை? ஒரு நரி, யானையின் நிலைமையைப் பார்த்துவிடுகிறது. இதுதான் சமயமென்று, அந்த நரி யானையின் மீது பாய்ந்து தன் ஆகாரத்திற்கு வழி தேடுகிறது. யானையின் உடலெங்கும் நரி தன் பற்களாலும்—நகங்களாலும் பிராண்டி, ரத்தம் குடிக்கிறது. மாமிசமும் தின்கிறது. யானையோ, எதிர்த்திட முடியாமல் ஏங்குகிறது. வேதனை தாங்காமல் துடிக்கிறது. சேற்றிலே மட்டும் அது அகப்படவில்லையானால் அந்த நரி ஒரே மிதியில் கூழாகிவிடும். இப்போதோ, நரிக்கு ஒரே வேட்டை! நாள் முழுதும் காட்டைச் சுற்றினாலும் இதுபோல் உணவு அதற்குக் கிடைக்காது!

வீரனையே சுழற்றும் பலமுள்ள யானை, சேற்றிலே சிக்கினால் நரியிடமும் தோல்வியுறும் என்ற கருத்தை வள்ளுவர் அழகான ஓவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளார் குறள் மூலமாக! யானையின் வாயிலாக ஓர் அரசுக்கு வேண்டிய அறிவுரையை வழங்குகிறார்.

எத்துணை படைபலம் இருந்தாலும்—ஒரு பலவீனத்தின் காரணமாக அந்த அரசு பலமற்ற எதிரிகளால் பறிக்கப்படலாம் என்பதற்காகவே வள்ளுவர் யானையின் வலிமையையும், அது சேற்றிலே செல்லாக் காசாகிவிட்ட சேதியையும் சிறுநரி ஜெயித்த விந்தையையும் குறளோவியம் தீட்டிக் காட்டியிருக்கிறார்.

உலகிலே போற்றப்படும் பெரும் பெரும் மேதைகளும்—வீரர்களும்கூடச் சிறு தவறுகளாலேயே சிறியவர்களால் வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

மராட்டியம் தந்த மாவீரன் சிவாஜி, காகபட்டர் என்னும் மதத் தலைவனுக்கு மண்டியிட்டான்! உலக சரித்திரத்தின் ஜோதிவிளக்குகளான சீசரும் ஆண்டனியும் தங்கள் சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காக்க முடியாமல் மண்ணாகப் போனதற்குக் காரணம், அழகி கிளியோபாட்ரா தந்த இன்பச் சேற்றில் அகப்பட்டுக் கொண்டதனாலன்றோ!

இந்தச் சேற்றிலேயிருந்து நமதுதேசம் தனது காலை எடுத்துத் தீர வேண்டும் என்பதற்காகத்தான் போலும், அன்றைக்கே வள்ளுவர், யானையின் மூலம் எச்சரிக்கை செய்திருக்கிறார்!



நமக்கு மட்டுமல்ல—நாடாளும் அரசுகள் அனைத்துக்கும் நமது தமிழ்த் தலைவர் தந்த குறளறம்—இதோ தரப்படுகிறது! வேல் கொண்ட வீரனைக் குத்திக் கொன்ற யானை சேற்றிலே சிக்கினால்—அதை நரி கூட எதிர்த்து அழித்துவிடும்.

"காலாழ் களரின் நரி அடும் கண்ணஞ்ச
வேலாள் முகத்த களிறு".



# காடு வளர்ப்போம்!

காட்டுவளத்தை பற்றியும், சிங்கோனாத்துறை பற்றியும் பேசிய உறுப்பினர்களெல்லாம் பொதுவாகக் காட்டிலாக்கா நிலங்களை ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு, நிலமற்றவர்களுக்குப் பிரித்துத் தர வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கிருக்கும் காட்டிலாக்காவின் தலையாய கடமை—குறிக்கோள் காட்டுக்கு இருக்கின்ற நிலங்களைப் பாதுகாத்தல் - பேணிப் பாதுகாத்தல், இரண்டாவது, காடுகளை வளர்த்தல். ஆகவே இரண்டு கொள்கைகளையும் அரசு ஏற்றுக் கொண்டு காடுகளைப் பராமரிப்பதிலேயும், புதிதாகக் காடுகளை வளர்ப்பதிலேயும் இன்றைக்கு அகில இந்தியா மட்டுமல்ல, அகில உலக அரங்கிலே சொல்லப்படும் கருத்தின் அடிப்படையிலே ஏற்று ஓரளவிற்குச் செயல்பட்டு வருகிறோம்.

நீலகிரி மலையைப்பற்றி திரு தேவராசன் அவர்கள் பேசும்பொழுது ஆண்டாண்டு தோறும் அந்த மலைப்பகுதி அழிக்கப்பட்டு மழை வளம் இல்லை என்று சொன்னார்கள். நமது ஜவ்வாது மலையைப்பற்றி நமது மாண்புமிகு உறுப்பினர் வந்தீப் அவர்கள்கூட இவ்வாறு மலை நாளுக்குநாள் அழிக்கப்பட்டுச் சிறுகி வந்து, விவரம் தெரிந்தகாலம்வரையில் சராசரி பருவமழை குறைந்ததாகக் கூறினார்கள். இன்றைக்கு விஞ்ஞானிகளின் கணக்கின்படி பார்த்தால் நிலப்பரப்பு 33 சதவிகிதம் தேவை என்று சொல்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 16-க்கும் 17-க்கும் இடையிலே இருக்கிறோம் என்று திரு சௌடி சுந்தரபாரதி அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் வாதத்தை வைத்துப் பார்த்தால் அறிஞர்கள், காட்டிலாக்காவில் நிபுணத்துவம் உடையவர்கள், மழை பெய்ய வேண்டுமென்ற சூழ்நிலையில் நிபுணர்கள் கருத்தைப் பார்த்தால் காட்டிலாக்கா நிலங்களை மீண்டும் விநியோகிக்காமல் அதை வளர்க்கும் முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்றுதான் நம்மைப் பொறுத்தவரையில் புலனாகின்றது. ஏதோ மலைப்பகுதியில் மரங்கள் அடர்த்திருக்கின்ற காடுகளைப் பாதுகாத்தால் போதும், தரை மட்டத்திலிருக்கின்ற காடுகளாக இருக்கின்ற தரிசுகளாக இருக்கின்ற அல்லது பொட்டல்களாக இருக்கின்ற பகுதிகளை விவசாயிகளுக்கு நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவது நல்லது என்றும் சொல்கிறார்கள்.

மலையிலே பெய்யும் மழையினால் காவேரியில் வந்துவிடலாம். மேற்குத் தொடர்ச்சி மலையிலே நீலகிரியிலே பெய்வதால் பவானியாற்றிலே வந்துவிடலாம், மேற்குத் தொடர்ச்சி மலையில் தென்கோடியிலே பெய்யும் மழையின்மூலம் பெரியாற்றுக்கு வந்துவிடலாம், இப்படி மலையிலே பெய்கின்ற மழையின் காரணமாக அந்தந்தப் பகுதிகள் மட்டும் பயன்பெறலாம். எல்லாப் பகுதியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படி மலைப் பகுதிகளில் மழை பெய்தும் அதனால் தண்ணீர் போதாத நிலையிலே இன்றைக்கு 75 சதவிகிதம் பகுதிகள் இருப்பதைப் பார்க்கவேண்டும்.

உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், வட ஆர்க்காடு மாவட்டத்தில் முக்கால் பகுதி, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முழுப்பகுதி, அதற்குப்பின் தெற்கே போனால்கூட திருச்சி மாவட்டத்திலே, தஞ்சை மாவட்டத்திலே மலைப்பகுதி அதிகமாக இருப்பதாகச் சொல்ல முடியாது. ஆகவே, ஆங்காங்கேயிருக்கும் காட்டு நிலங்களைக் கொடுத்துவிட்டால் என்ன வரும் என்பதை யோசனை செய்ய வேண்டும். கண்மாய், குட்டை என்று சொல்கிறார்கள். ஊரணி என்று சொல்கிறார்கள், குளம் என்றும் சொல்வார்கள். இவைகளுக்குத் தண்ணீர் வருவது ஆங்காங்கு இருக்கும் சரளைக் காடுகளாக இருக்கும், தரிசுக் காடுகளாக இருக்கும் காட்டிலாக்காவில் பெய்யும் மழையின் மூலம் பெருக்கெடுத்தோடி சிறு ஓடைகள், கால்வாய்களில் தேங்குவதை யோசித்துப் பார்க்க வேண்டும். புதுக்கோட்டைப் பக்கத்திலே காட்டிலாக்காவிலே தரை மட்டத்திலே இருக்கும் நிலங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்ட தற்கிணங்க நான் சமீபத்தில் பார்வையிடச் சென்றேன். அந்தக் கால்வாய்க்கு வரும் தண்ணீர் பக்கத்திலேயிருக்கும் சிறு சிறு புதர் அடங்கியுள்ள வேறு பயனற்ற 400 ஏக்கர் பொட்டலில் பெய்யும் மழையினால் நிரம்பி 400 ஏக்கர் நஞ்சையாக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். யாருக்கும் கொடுப்பதற்கு அனுமதிக்க மாட்டோம், இந்த 400 ஏக்கரும் தரிசாகவே இருக்க வேண்டும். மேய்ச்சலுக்குப் பயன்படுகிறது, நீர்பிடிப்பதற்குத் தாயகமாக விளங்குகிறது என்று சொல்கிறார்கள். உண்மையிலேயே தரிசாக இருப்பதைக் கொடுத்துவிடுவது என்பது நல்லதாக எங்களைப் பொறுத்த வரையில் கருதவில்லை. சொல்லக்கூடிய நிபுணர்கள் இப்படிச் சொல்கிறார்கள். ஆங்காங்கு பெய்யும் மழையினால் வரும் தண்ணீர் குளம் குட்டைகளில் நிரப்புவதன் மூலமாக அங்கே ஊற்றுக்கள், கிணறுகளெல்லாம் வெட்டப்படுகிறது. அதன் மூலம் கிணறுகள் தோண்டி வருகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படிப் பார்க்கும் பொழுது இன்றைக்கு இந்தியாவிலேயே மூன்றில் ஒரு பங்கு நிலம் வேண்டுமென்று சொல்கிறார்கள். இங்கே 16·17 சதவிகிதம் என்றும் இவைகளைத் தரிசு என்றும் குற்றம் சாட்டினால், பொட்டல் என்றும் புதர் என்றும் சொன்னால், தரை மட்டத்தில் இருக்கிறது என்று சொன்னால் கொடுத்துவிடுவது நியாயமா என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொடுப்பதன் மூலம் ஏழைகளின் வாழ்க்கை பொங்குகிறது-குலுங்குகிறது என்றால் அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்த முடியுமென்று கருதினால் முதல் கடமையாக தமிழக அரசு தயங்காது கொடுக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்ற ஆண்டு 50,000 ஏக்கர் காட்டிலாக்காவுக்குச் சொந்தமான நிலத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு மத்திய அமைச்சரவையிலிருந்து தாக்கல் வந்தது, காட்டிலாக்காவில் பரம்பரை பரம்பரையாக, உலகம் தோன்றியது முதல், அரசு ஏற்பட்ட காலத்திலேயிருந்து பொது நில

மாக, அரசாங்கச் சொத்தாக, பொது நன்மைக்காக வெப்ப தட்பத்தைப் பாதுகாக்க மழையை உருவாக்குவதற்காகக் காடு காக்கப்பட்டு வருகிறது: அவைகளைக் கொடுத்து விடுவது அவ்வளவு நல்ல தல்ல என்று மத்திய அரசு சொல்வதிலே எல்லாம் சரி இல்லை என்று சொல்ல முடியாது, எல்லாம் சரி என்றும் சொல்ல முடியாது. இப்படிப்பட்ட நல்ல காரியங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும் கடமையியிலே இருக்கிறோம் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பள விகிதத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். 1967-ல் நாம் ஆட்சிபீடத்தை ஏற்ற பிறகு எவ்வளவு முறை சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். ஜேம்ஸ் அவர்கள் இங்கே பேசினார்கள். நானும் சட்ட அமைச்சர் அவர்களும் அறையிலே விஷயங்களை எடுத்துச் சொன்னோம். அப்போது அவர்கள் எங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அது அறையில் நடந்த விவாதம்.

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். 1966-ல் இவர்களுக்கு இருந்த கூலி விகிதம் ஆணுக்கு ரூ. 1-59; பெண்ணுக்கு ரூ. 1-20. தவிர, நடுத்தர ஆளுக்கு 0-80 காசு, ஆனால், 1967-ல் ரூ. 1-59 காசு, 2-65 காசாகவும், ரூ. 1-20 காசு ரூ. 2-35 காசாகவும், 0-80 காசு ரூ. 1-72 காசாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டில் 1968-69-ல் ரூ. 2-65 காசாக இருந்தது ரூ. 2-77 காசாகவும் ரூ. 2-35 காசாக இருந்தது ரூ. 2-47 காசாகவும், ரூ. 1-72 காசாக இருந்தது ரூ. 1.85 காசாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

தனியார் தோட்டத் தொழிலாளர் பற்றி மாண்புமிகு கே. டி. கே. அவர்கள்கூடக் கூறினார்கள். அரசுத் துறையில் கொடுக்க வேண்டுமென்று சட்டபூர்வமாகக் கட்டாயம் இல்லை. எந்த விதமான நிர்ப்பந்தமும் இல்லை. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசு எந்த அளவுக்கு அந்தத் தொழிலாளர்களுக்குத் ஊதியத்தைக் கூட்டிக் கொடுத்து வந்திருக்கிறது என்பதை உணர வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் உயர்த்தி வந்திருக்கிறோம். 1966-ஆம் ஆண்டில் ரூ. 1-59 காசாக இருந்ததை இன்று நாம் ரூ. 3-32 காசு அளவுக்கு ஏற்றியிருக்கிறோம். இன்னும் அங்கு நல்ல முறையில் இலாபம் வருமானால் மேலும் சம்பளத்தை ஏற்றலாம். அந்தத் தொழிலாளர்கள் படிப்படியாக நன்மை அடைவார்கள். அந்தத் தொழிலாளர்களிடையே சுமுகமான சூழ்நிலை இருக்கிறது. தொழிலாளர்களை, தலைவர்கள் அறிவார்கள். அவர்கள் கேட்டதைப் பெற்றிருக்கிறார்கள். தொழிலாளர்களிடையே சுமுகமான நல்லுறவு ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சின்கோனா பற்றி நேரம் அதிகமில்லாத காரணத்தால் விரிவாகப் பேச விரும்பவில்லை. சின்கோனா தொழிலாளர்களுடைய சம்பளம் 1966-67-ல் ரூ. 1-75 காசாக இருந்தது இன்றைக்கு 2-60 காசு அளவுக்கு நான்கு முறை அவர்களுடைய சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிங்கோனா தொழிலாளர்களுக்கு லட்ரின் போன்ற நல்ல பல வசதிகளைச் செய்து தருவதற்காக இந்த ஆண்டு 3½ இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வால்பாறையில் சரணாலயம் ஏற்படுத்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதுமலை சரணாலயத்தை விஸ்தரிப்பது பற்றி நண்பர் தேவராசன் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றியும் ஆய்வில் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்சாலைகளுக்குக் குறைந்த கட்டணத்தில் மூங்கில் போன்ற மூலப் பொருட்களைக்




கொடுப்பதாகக் கூறினார்கள். உதாரணத்திற்குக் கேரளாவைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கு மூங்கில் டன் ஒன்று 5 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். ஆனால், நாம் 10, 15 ரூபாய்க்கு வாங்குகிறோம். இதனால் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய ஒரு தொழில் அதிபர் கேரளத்திற்குச் சென்று தொழிலை ஆரம்பிக்கக்கூடிய நிலைகூட ஏற்பட்டிருக்கிறது.

நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர வேண்டுமென்றால் இதுபோன்ற சலுகைகளைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஆனால், பிறகு நமக்கு சேல்ஸ்டாக்ஸ் மூலம் ஒரு வருடத்திற்கு 15 இலட்சம், 20 இலட்சம் ரூபாய் வருகிறது. அதோடு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. வெளி நாட்டுச் செலாவணியையும் ஈட்டித் தருகிறது. விஸ்கோசை எடுத்துக் கொண்டால் அதுவெளிநாட்டுச்செலாவணியை ஈட்டித் தருகின்ற ஒன்றாக இருப்பதால் உண்மையிலேயே நாம் அதை வரவேற்கவேண்டும். தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் போது 'நீட் பேஸ்ட்' இன்டஸ்ட்ரிஸ், என்ற அளவில் பார்த்து ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு தொழிலமைச்சர் மாதவன் அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

காடுகள் அழிக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். முடிந்த வரையில் அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மீண்டும் எடுக்கப்படும். பேசப்பட்ட கருத்துக்களுக்கு முழுவதுமாகப் பதில் சொல்லாவிட்டாலும் அவை நன்கு பரிசீலனை செய்யப்பட்டுத் தக்க நிவாரணம் காணப்படும். திரு குருசாமி அவர்கள் ஒரு மியூசியம் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். பரிசீலனை செய்து கொண்டிருக்கிறேன். சாத்தியக்கூறு இருந்தால் வைக்கலாம் என்று கூறிக் கொண்டு கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப்பெற்று மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

# சிறைச்சாலைகள் அல்ல: மறுவாழ்வு இல்லங்கள்!

சமுதாயத்தினுடைய அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கையைக் கவனிப்பதுதான் ஒரு நல்ல அரசினுடைய திட்டமாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அரசினுடைய திட்டங்களை மேற்கொண்டு செயல்படுத்தினால்தான் அது ஒரு நல்ல அரசாக இருக்கக்கூடும். இன்றைக்கு இருக்கின்ற அரசு பிச்சைக்காரர்களுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடும்பொழுது ஏசலுக்கு, இழிமொழிகளுக்கு, ஏகடியங்களுக்கு ஆளாகிற சூழ்நிலையை நாம் காண்கிறோம்.

இந்தக் கொடுமைகளை நீக்க அரசு எடுத்துக்கொண்ட முதற்கட்ட முயற்சிகளிலே ஒன்றுதான் பருகூரிலே இன்று கட்டப்பட்டிருக்கின்ற இந்தத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுடைய மறுவாழ்வு இல்லமாகும்.

இப்படிப்பட்ட இல்லங்களுக்கு தொழுநோய்ப் பிச்சைக்கார நண்பர்கள் தாங்களாகவே வலுவில் வருகிறார்கள். அதனையும் நான் உணருகிறேன். வேறு சிலர் அழைத்தாலும் வர மறுக்கிறார்கள். அதையும் நான் உணர்கிறேன்.

இன்றைக்குப் பத்திரிகைகளிலே செய்தி பார்த்தேன். அரியானா மாநிலத்தில் பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்குச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற செய்தியைப் பார்த்தேன்.

இந்தச் சட்டம் இன்று அரியானாவிலே புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக்கலாம். ஆனால் நம்முடைய தமிழ் நாட்டில் நீண்டகாலமாக இப்படியொரு சட்டமிருக்கிறது. பிச்சை எடுப்பதைத் தடுக்கின்ற சட்டம் தமிழ் நாட்டிலே இருக்கிறது. ஆனால், ஒரு சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்குச் சட்டம் மாத்திரம் போதாது என்பது நம் எண்ணம்.

எனவே தான் சட்டங்கள் செய்யப்படுகின்ற நேரத்தில் அந்தச் சட்டங்கள் மனிதன் மீது கொடுமையாகப் பாயாமல் இருக்க வேண்டும். அந்தச் சட்டத்தின் துணைகொண்டு சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்குப் பாடுபடுகின்ற ஒரு அரசு கூடுமான வரையில் ஏன் இந்தச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கங்களை பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களிடத்திலே எடுத்துச் சொல்லி அவர்களை நம் வழிக்குத் திருப்ப வேண்டியது மிக மிக இன்றியமையாத ஒன்றாகும். அந்த முதற்கட்ட வேலையைத்தான் இன்றைக்குத் தமிழக அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

ஆனால் அரியானா மாநில அரசாங்கத்தின் செயலாளர் சமூக சீர்திருத்தப் பணியினுடைய செயலாளர் ஒரு அறிக்கை மூலம் அந்தச் சட்டம் செயல்படுகிறது என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறார். மே மாதம் இரண்டாம் தேதியிலிருந்து அந்தச் சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. ஏறத்தாழ 45 நாட்களில் எத்தனை பிச்சைக்காரர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அரியானா மாநிலத்திலே உள்ள ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்களில் 16 பேர்தான் போலீசாரால் அந்தச் சட்டத்தின்படி பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு பிச்சைக்காரர் தனக்குத் தாடியிருந்தால் பிச்சைக்காரன் என்று காட்டிக் கொடுத்துவிடும்; தன்னைப் போலீசார் கைது செய்ய நேரிட்டுவிடும் என்று தாடியை எடுத்துவிட்டு ரிக்ஷா இழுக்கச் சென்று விட்டார். இன்னொரு பிச்சைக்காரர் பிச்சையெடுப்பதை விட்டு விட்டுக் கை வண்டியிலே சில்லரைச் சாமான்கள் விற்கின்ற வேலைக்குச் சென்றுவிட்டார். மற்ற பிச்சைக்காரர்கள் எல்லாம் மாநிலத்தை விட்டே வெளியே ஓடிவிட்டார்கள் என்று அரியானா மாநிலம் பற்றிய செய்தி வெளிவந்திருக்கிறது.

நான் இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம், சட்டம் இருக்கிறது தமிழ் நாட்டிலே கூட. ஆனால் சட்டத்தால் பிச்சைக்காரர்களைப் பிடித்து சிறையிலே போட்டு அவர்களைக் கைதிகளாக ஆக்கி அவர்களுடைய வாழ்வு கைதி வாழ்வாகவே இருக்க வேண்டும் என்று செய்வது சரியா? அல்லது அவர்களும் மனிதர்கள், மிருகங்கள் அல்ல; அவர்கள் செய்த குற்றம் வயிற்றுக்கில்லாத காரணத்தால் பசிக் கொடுமையால் தங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பயங்கர நோயினால் வேலை கிடைக்காத காரணத்தினால் வேலை கொடுக்க யாரும் ஒப்பாத நிலைமையினால் பிச்சையெடுக்கிறார்கள். அப்படிப் பிச்சை எடுக்கின்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும். ஆறாயிரத்திற்கு மேற்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள்.

அவர்களையெல்லாம் இது போன்ற விடுதிகளிலே வாழச் செய்து அவர்களுடைய நோயை நீக்குவதற்கு நல்ல டாக்டர்களை வைத்து, மருந்துகளை அளித்து நோய் நீக்குகின்ற அந்தக் கட்டத்திலேயே அவர்களுக்குச் சில கைத்தொழில்களைக் கற்றுக் கொடுத்து அவர்களுக்கு நல்ல உணவு கொடுத்து அவர்கள் இருப்பது ஒரு விடுதியே தவிர, சிறைச்சாலை அல்ல! அவர்கள் மறுவாழ்வுக்கு வந்திருக்கிறார்களேயல்லாமல் தண்டனை அனுபவிப்பதற்கு வந்த குற்றவாளிகள் அல்ல என்ற உணர்வோடு அவர்களைப் பழக்கிட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விடுதிகள் கட்டப்படுகின்றன.

தெருவிலே அலைந்து கொண்டிருக்கின்ற தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கெல்லாம் இந்தப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் திறக்கப்படுகிற நேரத்தில் ஒரு வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாங்கள் வர முடியாது என்று கொஞ்ச நாள்தான் நீங்கள் மறுத்துக்கொண்டிருக்கலாம். உங்களை வலுவிலே அழைக்கிறோம்.

தன் நோயைத் தீர்த்துக் கொள்வதற்கு வழியில்லாமல் தன் உடம்பிலே ஏற்பட்டிருக்கின்ற தொழுநோய் சமுதாயத்திலே இருந்தே தன்னை நீக்கி வைக்கின்ற அளவுக்கு ஒரு பயங்கரமான தனிமையைத் தனக்கு ஏற்படுத்திவிட்டிருக்

கின்ற கொடுமையிலே இருந்து அந்த மனிதனை மீட்பதற்காக நாட்டிலே நடைபெறுகின்ற ஒரு பெருந் திட்டம்தான் இந்தத் திட்டம்.

இதில் அரசாங்கத்தினுடைய நோக்கத்தை உணர வேண்டும். எந்த உள்நோக்கமும் கிடையாது. இன்னும் சொல்லப் போனால் நாங்கள் பிச்சைக்காரர்களை அணுகுவது அவர்களெல்லாம் ஒட்டர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கையிலே ஒட்டிருக்கிறது என்பதற்காக அணுகவில்லை. எங்களுக்குத் தெரியும். அவர்கள் கையிலே ஒட்டு இல்லை ; ஓடுதான் இருக்கிறது என்பது !

தமிழ் நாட்டில் பிச்சைக்காரர்களுடைய தொல்லை—பிச்சைக்காரர்களால் தமிழ் நாட்டுக்கு ஏற்படுகின்ற தொல்லை என்ற இரு தொல்லைகளிலிருந்தும் நம் சமுதாயம் விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்கான எண்ணம் நீண்ட பல நாட்களாக பலருக்கு இருந்திருக்கிறது. கிறித்துவர்கள் வேறு பல நல்ல நோக்கம் கொண்டவர்கள் ஆங்காங்கு சில தனி நிறுவனங்களை இதற்காக அமைத்து அங்கே பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கிற திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

ஆனால் எல்லா இல்லங்களும் நன்றாக நடைபெறுகின்றன என்று சொல்ல முடியாது.

அதைப் போலவே நகராட்சி மன்றங்கள் பிச்சைக்காரர் விடுதிகளை நடத்த நாம் அவர்களுக்கு ஒப்புதல் அளித்து அரசாங்கத்தின் சார்பில் பிச்சைக்காரர்களுக்குத் தலா பதினைந்து ரூபாய் உதவி செய்து வருகிறோம் என்றாலும், நகராட்சிகளின் சார்பிலே நடைபெறுகின்ற அந்த விடுதிகளெல்லாம் சரியாக நடைபெறவில்லை. ஆகவே அரசாங்கமே இதை ஒரு தீவிரத் திட்டமாக ஆக்க வேண்டும் என்று கருதி வலுவிலே வந்து சேருங்கள். உங்களுக்கு வாழ்வளிக்கின்றோம் என்று இந்த இல்லங்களைத் திறக்கிறோம்.

நீங்கள் வலுவிலே வந்து இதில் சேர வேண்டும். நீங்கள் சேர மறுத்தால் ஒளிந்து திரிந்தால் ஓடிவிடுவோம் என்று மிரட்டினால் நான் பிச்சைக்காரர் நண்பர்களையெல்லாம் கேட்டுக் கொள்வேன். இந்த விடுதிகள் கட்டி முடிந்த பிறகு உங்களுக்கு ஆறாயிரம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்குப் போதுமான இடம் தமிழ் நாட்டிலே அமைந்து விட்டது என்கின்ற முழுமையான எண்ணம் எங்களுக்கு ஏற்பட்ட பிறகு நான் சொல்லுவேன். அரியானாவிலே இருக்கிற சட்டத்தை விட, இங்கே ஏற்கனவே உள்ள சட்டம் தீவிரப்படுத்தப்பட்டு தெருவிலே அலைகின்ற எல்லாப் பிச்சைக்காரர்களும் கைது செய்யப்பட்டு இல்லங்களிலே கொண்டு வந்து வைக்கப்படுவார்கள் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்வேன்.

இன்று இங்கு கட்டப்பட்டிருக்கின்ற இந்த இல்லத்தில் ஐநூறு பேருக்கு இடம் போதுமான வசதியோடு அமைக்கப்பட்டிருக்கிறது. ஓசா அவர்கள் தந்த கணக்குப்படி இன்றைக்கு ஏறத்தாழ 250 பேர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் 250 பேர் சேர்க்கப்பட்டாக வேண்டும். தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் பத்துப் பன்னிரண்டு இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு விடுமேயானால் ஆறாயிரம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களும் ஆங்காங்கே இருப்பதற்கான இடவசதி செய்து கொடுக்கப்படும்.

நோய் நீங்கி, நாங்கள் வெளியிலே சென்று வேலை செய்து பிழைப்போம் பிச்சை எடுக்க மாட்டோம் என்று உறுதியளிக்கின்றவர்கள் நிச்சயமாக விடுவிக்கப்படுவார்கள். பிச்சை எடுக்காமல் நாங்கள் வீட்டிலேயே பராமரிப்பிலேயே இருப்போம். எங்கள் வீட்டார் எங்களைக் கவனித்துக் கொள்வார்கள். எங்களை விட்டு விடுங்கள் என்று கேட்டு அது உண்மையாக இருந்து வீட்டாரும் அவர்களைக் கவனித்துக் கொள்வார்களேயானால் நாங்கள் அதிலே தலையிடத் தயாராக இல்லை. ஆனால், தெருவிலே வீதி ஓரங்களிலே, கடைத் தெருக்களிலே, பேருந்து நிலையங்களிலே, புகைவண்டி நிலையங்களிலே போக்குவரத்திற்கு இடைஞ்சலாக—சினிமா தியேட்டர் வாசலிலே மக்கள் எங்கெங்கே நெருங்கிப் பழகுகிறார்களோ அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் இன்றைக்குப் பிச்சைக்காரர்கள் இருப்பது அந்த மக்களுக்குத் தொந்தரவு என்பதற்காகச் சொல்லவில்லை. நம்முடைய சமுதாயத்திற்கே இது பெரும் அவமானம்.

அந்த அவமானம் துடைக்கப்பட்டாக வேண்டும். ஆகவே தான் இங்கே இருக்கின்ற கேட்பாரற்றுக் கிடக்கின்ற மனிதனை—கவனிப்பாரற்றுக் கிடந்த மனிதனை—இவன் புறக்கணிக்கப்பட்ட மனிதன் என்று குப்பையிலே தூக்கி எறியப்பட்ட மனிதனை—அப்படிப்பட்ட மனிதனை அவனும் வாழப் பிறந்தவன்தான்; இந்த உலகிலே அவனுக்கும் இடமுண்டு—இந்த உலகிலுள்ள வாழ்க்கையை அனுபவிக்க அவனுக்கும் உரிமை உண்டு—ஆகவே அந்த உரிமையைத் தட்டிப் பறிக்க யாராலும் இயலாது—நம்மால் இயன்ற அளவுக்கு அவனுக்கு வாழ்க்கை தருவோம் என்கிற உறுதியோடு தான் இந்தக் காரியத்தை இன்றைக்கு அரசு மேற்கொண்டிருக்கிறது. அதற்கு உதவியாக இருக்கின்ற எல்லா நண்பர்களையும் அரசு அலுவலாளரையும் நான் பாராட்டுகிறேன்.

குஷ்டரோகிகள் இருக்கின்ற இடங்களுக்கு வேலை பார்க்க வருவதற்குச் சில அதிகாரிகள் அஞ்சுகிறார்கள் என்ற தகவலும் என் காதுக்கு வருகிறது. நான் அந்த அதிகாரிகளுக்குச் சொல்லுவேன். அதிகாரிகள் படித்தவர்கள். அவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். தொழு நோய் என்பது தொத்து நோய் அல்ல. ஆகவே தொழுநோயானது நம்மைத் தொத்திக் கொள்ளுமோ என்ற பயம் அதிகாரிகளுக்கு இருக்குமேயானால் நாங்கள் தொழுநோய் இல்லங்களுக்குச் சென்று பணியாற்ற மாட்டோம் என்று எந்த அதிகாரியாவது அரசாங்கத்தினுடைய உத்தரவை நேரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ தட்டிக் கழிக்கத் தொடங்குவார்களேயானால் அவர்களுடைய பதவிக் காலத்தில் அவர்கள் பெறுகின்ற கறுப்பு மார்க்காக அது நிச்சயம் இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

## முதல்வர் டாக்டர் கலைஞர்

[18—6—1972 அன்று பருகூரில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வு இல்லத்தைத் துவக்கி வைத்து முதல்வர் ஆற்றிய உரை.]




### திருப்தியான தகவல்

சென்னை - மத்திய நூலகத்தைப் பற்றிய விவரங்கள் சுருக்கமாகவே தெரிவிக்கப்பட்டிருந்தாலும் தேவையானவை தெரிவிக்கப்பட்டுள்ளன என்று திருப்தி ஏற்பட்டிருக்கிறது.

—டி. ஸ்டெல்லா, சென்னை-83.

### மழைக் கட்டுரை

கால்நடைக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கு மாணவர்கள் மனுச் செய்கின்ற இந்த நேரத்தில், அந்தக் கல்லூரியின் பணிகளைப் பற்றி அரிய முறையில் எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். 'பெய்யெனப் பெய்யும் மழை' என்று உங்களைச் சொல்லலாம் போல் தோன்றுகிறது.

—செல்வி இலக்குமி, நெல்லை.

### இலக்கியக் கண்

'கண்'—கட்டுரை கண்ணைப் போல் ஒளி வீசுகிறது. அதில் காணப்படும் இலக்கிய மேற்கோள்கள் எண்ணி எண்ணிப் போற்றத் தக்கவை.

—புலவர் அழகனார், கோவை.

### இலவச இணைப்பாக்கி இருந்தால்........

பிற்பட்ட வகுப்பினரின் திருத்தி அமைக்கப்பட்ட பட்டியலை ஜுன் 16 இதழில் வெளியிட்டிருக்கிறீர்கள். நன்றி. இந்தப் பட்டியலைக் கைக்கடக்கமான முறையில் தனி ஏடாக வெளியிட்டு இலவச இணைப்பாகத் தந்திருக்கக்கூடாதா ?

—ஆர். ராகவன், ஆர்க்காடு.

### எதிரொலித் துயரம் !

வழியில் இறந்து கிடந்த 'காகத்தை' எண்ணிப் பாசொலியார் வடிக்கும் கண்ணீர்க் கவிதை எனது இதய அரங்கத்திலும் துயரத்தை எதிரொலித்து விட்டது. ஆம்! அந்தக் கவிதையைப் படித்து முடித்ததும்—என் வீட்டிலிருந்த பச்சைக் கிளி மடிந்தே போய்விட்டது ! எனக்குக் கவிதை பாட வராது—அதனால் கடிதம் எழுதியிருக்கிறேன்.

—எஸ். அரங்கநாதன், திருச்சி-1.

### திருவாரூர் கோவில் மட்டும் தானா !

திருவாரூர் தியாகராச சுவாமி திருக்கோயில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்ற செய்தியைச் சுவைப்படத் தொகுத்துத் தந்திருக்கிறீர்கள். இதுபோல் ஏனைய மாவட்டங்களிலும் உள்ள தொன்மை மிகு ஆலயங்களைப் பற்றிய வரலாறுகளை அவ்வப்போது தரமாட்டீர்களா?

—கே. ஏ. கேசவன்,
திருப்பூர்.

### பூரிப்புத் தரும் பயிற்சிக் கூடம்

அயல் நாட்டினராலும் பாராட்டப்படுகின்ற அளவுக்குச் சிலை செய்யும் பயிற்சிக் கூடம் சுவாமிமலையில் இருக்கின்றது என்ற சேதி பூரிப்பைத் தருகிறது !

—ராஜேந்திரன், மாயவரம்.

### புதிர்தேவை !

சிறுவர் பகுதியில் சிறுகதையும், படக் கதையும் வெளியிடும் நீங்கள், சிறுவர்க்குரிய புதிர்கள், வேடிக்கை விளையாட்டுகள், பாப்பாக் கதைகள் ஆகியவற்றையும் வெளியிட்டால் என்ன ?

—எம். மீனாட்சி, மதுரை-3.

### உயிரோவியம் !

முதல்வரின் சுவைமிகு குறளோவியத்தை முகப்பிலே எழில் மிகு உயிரோவியமாக்கியுள்ள உங்களுக்குப் பாராட்டு.

—கு. பொன்னப்பன்,
தூத்துக்குடி.

## வெண்பாப் போட்டி-38

### விடுதலை வெள்ளி விழா வெண்பா

1972 ஆகஸ்ட் 15-ஆம் நாளுடன் இந்திய நாடு விடுதலை அடைந்து 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதால் இந்த வெள்ளி விழா ஆண்டில் நமது நாட்டுக்கு இன்னும் ஆற்ற வேண்டிய பணிகளை வெண்பா வடிவில் எழுதிட வேண்டுகிறோம்.

(முடிவு நாள் 16--7--1972.)

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.



# தரத்தின் வயது 25

கடந்த கால் நூற்றாண்டாக இந்தியாவில் நடைமுறையில் புழக்கத்தில் இருந்து வருகிற ஒரு மூன்றெழுத்து முத்திரை ISI. இந்த மூன்றெழுத்தின் விரிவே Indian Standards Institution) என்பது. அதாவது இந்திய தர நிர்ணயக் கழகம்.

இந்தியாவில் உள்ள தொழில் துறை நிறுவனங்கள் அறிவியல் கழகங்கள் மற்றும் தொழில் நுட்பத் துறை அமைப்புகள் ஆகியவற்றின் ஆதரவோடு 1947-ஆம் ஆண்டு இந்தக் கழகம் நிறுவப் பட்டது.

உற்பத்திப் பொருட்கள், பண்டங்கள், தளவாடப் பொருள்கள் மற்றும் செய்முறைக்கான தர நிர்ணயங்களைத் தயாரித்து வழங்கல், அவ்வாறு தயாரித்து வழங்கப் பெற்ற தர நிர்ணயங்களை நாடு முழுவதும் ஏற்கும்படியாகவும், அனைத்து நாடுகளும் ஏற்கும்படியாகவும் செய்ய முனைந்து செயல்படல், தொழில் துறை உற்பத்திப் பொருட்களுக்குத் தர நிர்ணயச் சான்றிதழ் வழங்கல், நிறுவனங்கள், உற்பத்திக் கூடங்கள் தரமான பொருட்களை உற்பத்தி செய்ய உதவுதல், தர நிர்ணய சம்பந்தப்பட்ட தகவல்களைப் பரப்புதல் ஆகிய பல்வேறு நோக்கங்களோடும் இலட்சியங்களோடுமே இக் கழகம் நிறுவப் பட்டது. இப் பணிகளுக்காக, இக்கழகம் 1947-ல் நிறுவப்பட்டதெனினும், இந்தியத் தர நிர்ணயக் கழக நற்சான்று முத்திரைக்கான சட்டம், ( ISI Certification Marks Act, 1952 ) 1952-ஆம் ஆண்டில்தான் அமல் செய்யப் பட்டது. இச் சட்டம், இந்தியத் தர வரம்புகளுக்கேற்பப் பொருட்கள் அமைந்திருந்தால் அவற்றிற்கு ISI முத்திரையிட வகை செய்கின்றது.

இக் காலத்தில் எதற்கும் போலிகள் மலிந்து, தரமான பொருட்கள் கிடைப்பது அரிதாகி விட்டது. தரக் குறைவான தின்பண்டங்கள், மின்சார சாதனங்கள் முதலியன உயிருக்கே தீங்கு விளைப்பதை நாம் அன்றாடம் கேள்விப் படுகிறோம்—நேரில்—பார்க்கிறோம். எது தரமுடையது? எது போலியானது என்பதையெல்லாம் பாகுபாடு செய்து கண்டறிய முடியாத சூழ்நிலையில் 'போலி'களே உண்மையானவைகளாக — தரமானவைகளாகப் பலநேரங்களில் தேர்ந்தெடுக்கப்படும் படுமோசமான நிலைக்கு முடிவு கட்ட இந்த ISI முத்திரை பெரிதும் உதவுகிறது. ஆம், உள்ளபடியே பொருள் இழப்பையும் ஏமாற்றத்தையும் தவிர்க்கவும் இந்த ISI முத்திரை உதவுகிறது.

தர நிர்ணயங்களை வகுத்தளிக்க இந்த இந்தியத் தர நிர்ணயக் கழகம் ஒன்பது வட்டக் குழுக்களின் மூலம் செயலாற்றுகிறது. ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு துறைக்குப் பொறுப்பேற்றுத் தர நிர்ணயங்களை வகுக்கும் பணியைச் செய்கிறது. பல்வேறு துறைகளையும் சார்ந்த வகையில், இந்தியத் தர நிர்ணயக் கழகம் 2,000 தொழில் நுட்பக் கமிட்டிகளையும் துணைக் குழுக்களையும் அறிஞர் குழுக்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

உற்பத்தியாளர்கள், கொள்முதலாளர்கள், பயன்படுத்துவோர், விஞ்ஞான ஆராய்ச்சி—தொழில் நுட்ப நிறுவனங்கள், அரசாங்க இலாகாக்கள் போன்ற பல்வேறு துறையினருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் 24,000-க்கும் மேற்பட்ட வல்லுநர்கள் இந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முடிய இந்தக் கழகம் 6,720 இந்தியத் தர நிர்ணயங்கள் வகுத்தளித்திருக்கிறது.

2,400-க்கும் மேற்பட்ட உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. பிஸ்கட், ஐஸ்கிரீம், குழந்தை உணவு, காப்பி பவுடர், கால் நடைத் தீவனம், கோழித் தீவனம், சிமெண்ட், பெயிண்டுகள், சோப், மை, கார்பன் பேப்பர், தெர்மா மீட்டர், கற்பூரம், வாட்டர் மீட்டர், உருக்குச் சன்னல், கதவு, ஹாக்கி மட்டை, எலக்ட்ரிக் மோட்டார், மின்சார கம்பிகள், பேட்டரிகள், ட்யூப் லைட், உருக்குத் தகடுகள், அலுமினியப் பாத்திரங்கள் இன்னும் பல சாமான்கள் ISI முத்திரையுடன் கிடைக்கின்றன.

இந்தியத் தர நிர்ணயத்திற்கேற்பப் பொருட்களைத் தயாரிக்கும் அல்லது உற்பத்திச் செய்யும் எந்த ஒரு நிறுவனமும் ISI முத்திரைக்காக விண்ணப்பிக்கலாம். தொழில் நுட்பத் திறன் பெற்ற அதிகாரிகள் அந்த நிறுவனங்களுக்குச் சென்று அவற்றின் உற்பத்தித் திறனையும் பரிசோதனைக்கான வசதிகளையும் பார்வையிட்டுத் தரமுள்ள பொருட்களைத் தவறாமல் உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலையை நேரடியாகக் கண்டறிந்த பின்னரே ISI முத்திரையிடுவதற்கான உரிமம் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் சரிவரச் செயல் படுகிறதா என்று கண்டறிய அதிகாரிகள் அவ்வப்போது, எவ்வித முன்னறிவிப்புமின்றி உரிமதாரர்களின் தொழிற் கூடங்களுக்குச் சென்று சோதனையிடுகிறார்கள். முத்திரையிடப்பட்ட ஒரு பொருள் தரக்குறைவாக அமைந்திருக்கிறது என்று ஏதேனும் புகார் வந்தால் அது உடனுக்குடன் இந்த நிறுவனத்தால் விசாரிக்கப்படுகிறது. தரக் குறைவு என்று புகார் செய்யப் பட்ட பொருளும் அதே குறியெண் ( Batch ) கொண்ட வேறு சில பொருட்களும் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப் படும். அந்த முடிவின்படி, கழகம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்கிறது.

மிகவும், தரம் குறைந்த பொருளை வாங்கியவருக்கு மீண்டும் தரமுள்ள பொருளை இலவசமாகத் தரவும் ISI வகை செய்கிறது. உற்பத்தியாளர்கள், வேண்டுமென்றே தரக் குறைவு செய்திருந்தால் அவர்களது உரிமங்களை ரத்துச் செய்து அபராதம் விதிக்கவும் கூடும்.

இவ்வாறு தர நிர்ணயம் செய்து, உற்பத்தியாளர்களுக்கும் உபயோகிப்போருக்கும் உதவுகிற இந்தியத் தர நிர்ணயக் கழகத்தின் தலைமைச் செயலகம் புது டில்லியில் இயங்குகிறது. சென்னை, கல்கத்தா, கான்பூர், ஹைதராபாத், பெங்களூர் ஆகிய பெரு நகரங்களில் இந்நிறுவனத்தின் கிளைகள் உள்ளன.

தரங்களைக் காக்க வேண்டிய தன் இன்றியமையாமை குறித்த உணர்வைப் பரப்பி வெற்றி பெற்று வரும் இக் கழகத்தின் வெள்ளி விழா கடந்த மே மாதம் 26—30 நாட்களில் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.



# கண்ணிற் சிறந்ததோர் உறுப்பில்லை

'நிறைசெல்வத் திருவாரூர்'
'தேராரும் திருவாரூர்'
'சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்'
'செல்வம் மல்கிய திருவாரூர்'
தேசமல்கிய தென்திருவாரூர்
'உதித்தவர் உதித்திடா ஆரூர்'

—என்று நிறைமொழி மாந்தர் மறை வழிப் புகழைக் குறைவிலாது பெற்ற திருவாரூர் திருநகரம்— சோழ மன்னருடைய தலைநகரம் ஐந்தினுள் மிகத் தொன்மையானது !

இந்நகருக்கு
கமலாலயபுரம்
க்ஷேத்ரவரபுரம்
ஆடகேசுர புரம்
தேவயாகபுரம்
கந்தபுரம்
முசுகுந்தபுரம்
கலி செலா நகரம்
அந்தர மகேசபுரம்
வன்மீகபுரம்
சமற்காரபுரம்
மூலாதாரபுரம்
சக்திபுரம்—என்று

புராணப் பெயர்கள் பலவுண்டு. இந்தப் புராணங்களுக்குக் கதைகளும் உண்டு. ஆனால் அந்தப் பெயர்களைவிட மிகச் சிறந்த பெயரை அண்மையில் திருவாரூர் பெற்றது. அந்தப் பெயர்தான்—

"கண் கொடுத்த ஊர்"

கண்ணொளி இழந்தவர்களின் கவலை தீர்த்ததால் பழுதுபட்ட பார்வைக்கு ஒளி கிடைக்காதா என்று பலகாலமாக ஏங்கிய ஏழை நெஞ்சங்களுக்கு இன்னலைத் தீர்த்ததால் இந்த இனிய பெயரைத் திருவாரூர் பெற்றுவிட்டது.

முதல்வர் பிறந்தநாளை ஒட்டி தமிழக அரசினர் ஆதரவோடு ஆரூரான் சர்க்கரை ஆலையினர் முன்னின்று முதல்வர் கலைஞர் கருணாநிதி பிறந்த நாள் இலவசக் கண் சிகிச்சை முகாமை நடத்தினர்.

இந்த இலவசக் கண் சிகிச்சை முகாமில் திருவாரூரிலிருந்து பத்துப் பதினைந்து மைல் தொலைவிலுள்ள சுற்றுப்புற ஊர்களான கூத்தாநல்லூர், கீழ் வேளூர், கொரடாச்சேரி. நன்னிலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற்றனர்.

மூப்பினாலும் போதிய கவனமின்மையாலும் பார்வை பழுதுபட்டு, பழுதடைந்த பார்வையில் ஒளியேற்றிட வழியறியாது — வகை புரியாது தவித்த ஏழை எளிய மக்களுக்கு இந்தக் கண் சிகிச்சை முகாம் ஒரு வரப்பிரசாதம்.

ஆறாயிரம் மக்களுக்கு மேல் இந்தக் கண் சிகிச்சை முகாமுக்கு வந்து மருந்திட்டுப் பார்த்துக் கொண்டும், கண்ணாடி வாங்க எழுதிக் கொண்டும் சென்றிருக்கிறார்கள்.

ஆயிரத்து இருநூற்று ஏழு பேருக்கு 'காட்ராக்ட்' அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

திருவாரூரில் கட்டப்பட்டுள்ள அரசினர் மருத்துவ மனையை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தலைமையில் நமது ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் திறந்து வைத்த பொழுது, கண் சிகிச்சை செய்து கொண்டோருக்கு மூக்குக் கண்ணாடிகளை முதலமைச்சர் வழங்கினார்.

இது நாள் வரை இருண்டு கிடந்த விழிகளில் ஒளி தெரிந்ததால் அந்த ஏழை எளிய மக்களிடையே ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளம் கொஞ்சமா ?

* * *

இங்கே வாருங்கள்.

ஒரு பெரியவர் ; பெயர் கதிர்வேலு. அறுபது வயது இருக்கும்; அவர் சொன்னார் :

" அஞ்சாறு வருஷமா கண்ணு தெரியலே. வேலைவெட்டிக்கும் போக முடியலே, வீட்டுக்குப் பாரமா எந்த வேலை செய்யணும்னாலும் எனக்கு ஒரு ஆளைத் துணை தேடிக்கிட்டு எல்லாருக்கும் தொந்தரவா இருந்தேன். ஆனால், இப்ப ஆப்ரேஷன் செஞ்சதாலே நல்லா கண்ணு தெரியுது. உடம்புக்கே புதுத் தெம்பு வந்ததைப் போல இருக்கு.

" இந்தமாதிரி ஏழைகளுக்குக் கண் வைத்தியம் செய்த வைத்தியப் புண்ணியவான்கள் நல்லா இருக்கணும். எத்தனை பிறவி



# கவலை தீர்த்தார்க்கு நிகரில்லை!

எடுத்தாலும் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனுங்க. . . ,,

இப்படித்தான் அங்கே நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும் சொல்கிறார்கள். அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளிலும் நன்றியுணர்ச்சியும் மகிழ்ச்சிப் பெருக்கும் நிறைந்து இருக்கிறது.

ஆளுநரும், முதல்வரும், அமைச்சர்களும் மற்றவர்களும் கண் சிகிச்சை செய்துகொண்டவர்களைப் பார்வையிடச் சென்ற பொழுது சில மூதாட்டிகள் உணர்ச்சிப் பெருக்கோடு, கண் கொடுத்தவர்களைத் தெய்வங்களாகக் கருதி வணங்கியதும் வாழ்த்தியதும் மறக்கக்கூடிய காட்சிகளா ?

* * *

கருணாகரன் என்று ஒரு பையன், திருவாரூருக்கு அருகிலுள்ள கங்களாஞ்சேரிக்குப் பக்கத்திலிருக்கும் பொன்மான் நத்தம் என்ற ஊரைச் சேர்ந்தவன். பதினாறு வயதாகிறது. பிறந்தது முதல் பார்வை தெரியாது. திருவாரூரில் கண் சிகிச்சை முகாமில் சிகிச்சை செய்துகொண்டதால் கண் பார்வையை இப்பொழுது பெற்றுள்ளான்.

விழா மேடைக்கு வந்து ஆளுநருக்கும், தமிழக முதல்வருக்கும் (கலைஞருக்கும்) மாலை அணிவித்து, உணர்ச்சிப் பெருக்கோடு 'கண் கொடுத்த கலைஞர்' வாழ்க என்று அவன் முழங்கிய வேகத்தை எழுத்தில் வடிக்க முடியாது.

கண் பார்வை பெற்ற 16 வயதுச் சிறுவன் கருணாகரன்



கருணாகரன் போன்று பதினாறு ஆண்டுகளுக்குப் பின் பார்வை பெற்ற மனநிலை உள்ள ஒருவரால் மட்டுமேயன்றி மற்றவர்களால் உணரமுடியாது.

பிறந்தது முதல் பெற்றவர்களைக்கூடப் பார்க்க முடியாதவனாக இருந்த அவன், கண் தெரியாமலிருந்தும் இப்பொழுது ஐந்தாவது வகுப்பு வரை படித்திருக்கிறான். ஆனால் எழுதத் தெரியாது. தமிழ் எழுத்துக்களும் தெரியாது. மற்ற சிறுவர்களின் துணையோடு பள்ளிக்குச் சென்று ஆசிரியர்கள் சொல்லுவனதைக் கேட்டுக் கேட்டு அதை ஒப்புவித்து ஐந்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறான்.

இப்பொழுது கருணாகரனின் உயர் கல்விக்குரிய எல்லாச் செலவுகளையும் செய்வதாக உறுதியளித்துள்ளார் கண் சிகிச்சை முகாமை முன்னின்று நடத்திய திரு வி. எஸ். தியாகராஜ முதலியார்.

* * *

இந்த விழாவில் கண் சிகிச்சை முகாமை நடத்திய மதுரை கண் மருத்துவர் டாக்டர் வெங்கடசாமி, திரு வி. எஸ். தியாகராஜ முதலியார்

## ரூபாய் 15 இலட்சம் செலவில்



# திருவாரூரை அடுத்த கடாரம் கொண்டானில் உருவாகியுள்ள கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரி

ஆரூரான் சர்க்கரை ஆலை நிருவாக இயக்குநர் திரு கோபாலரத்தினம் ஆகியோருக்கு ஆளுநர் ஷா பொன்னாடை போர்த்தினார்.

* * *

**வி**ழாவிலே உரையாற்றிய கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பழம்பாடல் ஒன்றின் கருத்தினை விளக்கினார் :

''வாங்கும் கவளத்து ஒருசிறிது வாய் தப்பின் தூங்கு களிறோ துயருறாது—ஆங்கது கொண்டு வளரும் எறும்பு ஒரு கோடி உய்யும் ''—என்பது பழந்தமிழ்ப் பாடல்.

ஆமாம், யானை தன் வாய்க்குள் செலுத்தும் உணவுக் கவளம் சிதறி வெளியே விழுவதால் அந்த யானை கவலைப் படுவதில்லை. ஆனால் சிதறி விழும் கவளமோ ஒரு கோடி எறும்புகளுக்கு உணவாக அமைந்து விடும். அது போலச் செல்வம் உடையவர்கள் கண் சிகிச்சை முகாம் போன்ற நற்பணிகளுக்குச் செலவிடுவதால் அவர்கள் குன்றி விடுவதில்லை. ஆனால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அக மகிழ்வைத் தருகிறது என்று குறிப்பிட்டார்கள்.

இக் கருத்தைப் பின்னால் பேசிய முதல்வர் அவர்கள் மிகச் சுவைபடக் கால மாறுதலுக்கு ஏற்ப எடுத்துரைத்தார்கள்.

இப்பொழுது யானைகள் கவளத்தைச் சிதறவிட்டால் எறும்புகள் ஏன் சிதறவில்லை என்று கேட்கும் காலம் இது.

''எங்களுக்குக் கவளம் கிடைக்காவிட்டால் யானையின் காதுக்குள் புகுந்து தொல்லை கொடுப்போம்'' என்று எறும்புகள் எண்ணக்கூடிய நிலையையும் முதல்வர் அழகாகச் சித்திரித்துக் காட்டினார்கள்.

வெளிநாட்டிலிருக்கும்பொழுது இலவச கண் சிகிச்சை முகாம்களை நடத்த வேண்டும் என்று எடுத்துரைத்த டாக்டர் வெங்கடசாமியையும் இப்பொழுது இந்தக் கண் சிகிச்சை முகாமை நடத்தத் திட்டமிட்ட மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகனையும் திருவாரூரில் இலவசக் கண் சிகிச்சை முகாமை நடத்திய ஆரூரன் சர்க்கரை ஆலையினரையும் முதல்வர் கலைஞர் பாராட்டினார்கள்.

திருவாரூர் கண் தந்த நிகழ்ச்சியால் மட்டும் கண் கொடுத்த ஊராகவில்லை, கல்விக் கண் கொடுக்கும் ஊராகவும் மாறியது.

* * *

**தி**ருவாரூர் நாகை செல்லும் வழியில் இரண்டு கல் தொலைவில் உள்ள கடாரம் கொண்டான் என்று வழங்கப்படும் அண்ணா நகரில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரி திறப்பு விழா.

நாற்பத்திரண்டு ஏக்கர் நிலப் பரப்பில் 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்தக் கலைக் கல்லூரியைப் பார்க்கும் பெரியவர்கள் யாரும், நாம் இந்தக் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு இல்லையே என்று ஏங்குவார்கள். அந்த அளவுக்கு வனப்புமிகு கட்டடம் இது.

கல்வியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் தலைமையில் ஆளுநர் கே. கே. ஷா இக்கல்லூரியைத் திறந்து வைத்தார். முதல்வரும் ஏனைய அமைச்சர்களும் மற்றவர்களும் கலந்து கொண்டார்கள்.

* * *

**ஆ**ரூர் விழாக்களை நினைத்துப் பார்க்கும்பொழுது நமக்குத் தோன்றும் எண்ணம் . . . . —

தஞ்சை சரசுவதி மகால் கையெழுத்துப் படிகளிலுள்ள பாடலில் 'ஆரூர் மருவெடுத்த



கஞ்சமலர் வாவிபோல் நெஞ்சே ஒருவிடத்திலுண்டோ உரை' என்று சில அடிகள் உண்டு.

அது போன்று, 'ஆரூர் விழாக்கள் போல் நெஞ்சே! ஒருவிடத்திலுண்டோ உரை?' என்பதுதான்.

* * *

திருவாரூர் விழா நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் முதல்வர் கலைஞர் பிறந்த ஊரான திருக்குவளையில் நடைபெற்ற விழா நிகழ்ச்சிகள்—

அழகான அந்தச் சிற்றூரில் வண்ண விளக்குத் தோரணங்களால் ஊரெங்கும் பந்தல்.

ஊரின் வாயிலில் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பெயரால் கட்டப்பட்டிருந்த வளைவு திறப்பு விழா.

முத்துவேலர் அஞ்சுகம் அறக்கட்டளையினர் முதல்வர் பிறந்த இல்லத்தில் அமைத்திருந்த முத்துவேலர் நூலகம், அஞ்சுகம் படிப்பகம் இரண்டையும் ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் திறந்து வைக்கிறார்.

திருக்குவளையில் அமைக்கப்பட்டுள்ள முத்துவேலர் அஞ்சுகம் அரசினர் உயர்நிலைப் பள்ளியை கல்வியமைச்சர் நாவலர் தலைமையில் கே. கே. ஷா திறந்து வைத்தார்.

இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்தப் பள்ளியைப் போல அழகான கட்டடம் தஞ்சை மாவட்டத்தில் வேறு எங்கும் இல்லை என்றுகூடச் சொல்லலாம். அரைவட்டம் போன்ற இந்தக் கட்டடத்தின் ஒரு பகுதியில் தலைமையாசிரியர் இருந்தால் வகுப்புகள் அனைத்திலும் காண முடியும். அந்த அளவுக்குச் சிறப்பான கட்டடம்.


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்.
அரசினர் தோட்டம்,
சென்னை - 2


இந்த விழாவோடு, திருக்குவளையில் மருந்தகம் ஒன்றுக்கும், கால்நடை மருத்துவ மனைக்கும் அடிக்கல் நாட்டப்பட்டன.

இந்த விழா நிகழ்ச்சிகளில் ஆளுநர் கே. கே. ஷா, தமிழக முதல்வர், கல்வியமைச்சர் நாவலர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர், வேளாண்மை அமைச்சர் மன்னை நாராயணசாமி, அறநிலை அமைச்சர் மு. கண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்பில் தருமலிங்கம், இராம. அரங்கண்ணல், முரசொலி மாறன், எம்.பி., பல்கலைக் கழகத் துணை வேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு, மருத்துவத் துறை இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் முதலியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாக்களில் கலந்து கொண்ட ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் குறிப்பிட்டார்கள்:

''ஏழை எளிய மக்களுக்காகத் தமிழக அரசும் அமைச்சர்களும் செய்துவரும் பணிகளைக் காலை முதல் கண்டு வருகிறேன். தமிழக கிராம வளர்ச்சி போன்றே இந்தியக் கிராமங்கள் முன்னேற வேண்டும். ஆட்சியில் இருப்பவர்கள் வளர, வளர அவர்களுக்கும் மக்களுக்கும் இருக்கும் தொலைவும் வளர்ந்து கொண்டே போகும். ஆனால் தமிழகத்தில் அவர்களுக்கும் மக்களுக்குமுள்ள உறவு மிக மிக நெருக்கமாகி வருவதைப் பார்க்கிறேன்.

''பிச்சைக்காரர் மறுவாழ்வு'', 'இலவசக் கண் சிகிச்சை முகாம்' போன்றவை இவைகளை உறுதிப்படுத்துகின்றன.

இவ்விழாக்களில் தலைமை ஏற்பதையோ, முன்னிலையில் இருப்பதையோ விரும்பாது நன்றி சொல்பவராகவே முதல்வர் அவர்கள் உரையாற்றிய பெருமையை இந்த விழாக்கள் பெற்றிருந்தது இன்னொரு சிறப்பு.

இந்த விழா நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூற வேண்டிய முடிவுரை.

அன்றைய மூன்று நிகழ்ச்சிகளிலும் ஆளுநர் கே.கே. ஷா தொடர்ந்து கூறிய சொற்றொடர் தான்! அது, இது:

தஞ்சை மாவட்ட மக்கள் அறிவார்ந்த மக்கள்—செயல் திறன் மிக்கவர்கள்—அதிர்ஷ்டசாலிகள்.





# 16 இலட்ச ரூபாய் செலவில் திருவாரூரில் உருவாகியுள்ள அரசினர் மருத்துவமனை

மருத்துவ வசதி பெறத் தலைநகரங்களுக்குச் செல்ல, அவசியமில்லாமல் சிற்றூர்களிலும், கிராமங்களிலும் மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்து, தமிழக அரசு விரைவாகச் செயல்பட்டு வருகிறது. அதன்படி படிப்படியாக எல்லா முக்கிய ஊர்களிலும் மருத்துவ மனைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1.25 கோடி ரூபாய் செலவில் மருத்துவமனைக் கட்டடங்களும், இரண்டாவது திட்டத்தில் 4 கோடி ரூபாய் செலவிலும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5 கோடி ரூபாய் செலவிலும், மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம், தமிழ் நாட்டில் தஞ்சாவூர், செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. இவைகள் மூலம் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவ மனையிலும் 500 படுக்கைகள் வீதம் 2,000 படுக்கை வசதிகள் கிடைப்பதுடன், நல்ல மருத்துவ வல்லுநர்களும் ஆண்டுதோறும் உருவாக்கப்படுகின்றனர்.

முன் போல ஐந்தாண்டுத் திட்டங்களைத் தொடர்ந்து செயல் படுத்தும் நிலை அமையாவிடினும் மருத்துவ வசதிகளைப் பெருக்குவதில் தமிழ்நாடு அரசு எவ்வளவு தீவிரமாக செயல்பட்டு வருகிறது என்பதை மருத்துவத் துறைக் கட்டடங்களுக்கு ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகையைப் பார்த்தாலே விளங்கும், 1970–71-ல் பல்வேறு துறையினருக்காகக் கட்டப்பட்ட கட்டடங்களின் மொத்த மதிப்பு சுமார் 405 இலட்ச ரூபாயாகும். அதில் மருத்துவத்துறைக் கட்டடங்களுக்கு மட்டும் சுமார் 168 இலட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 1971–72-ல் பல்வேறு துறையினருக்காகக் கட்டப்படும் கட்டடங்களின் மொத்த மதிப்பு 461 இலட்ச ரூபாயாகும். இதில் மருத்துவத் துறைக் கட்டடங்களுக்காகமட்டும் 185இலட்ச ரூபாய் செலவு செய்யப்படும். தமிழ்நாடு அரசு மருத்துவத் துறையின் தேவையை நன்கு உணர்ந்து ஆண்டுதோறும், அதிகமான தொகையை மக்களின் மருத்துவ வசதிக்காகச் செலவு செய்து வருகிறது.

எல்லா வசதிகளையும் கொண்ட மருத்துவமனைகள்பல இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. சமீபத்தில் தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கியில் சுமார் 9 இலட்ச ரூபாய் செலவில் மருத்துவ மனையும் பட்டுக்கோட்டையில் 1.98 இலட்சரூபாய்செலவில் 32 படுக்கைகள் கொண்ட கட்டடம் ஒன்றும், பேராவூரணியிலும், மன்னையிலும் முறையே 2 இலட்ச ரூபாய் செலவில் 32 படுக்கைகள் கொண்ட கட்டடம் ஒன்றும், மன்னையில் 1.65 லட்சம் செலவில் வெளி நோயாளிகள் சிகிச்சை பெற கட்டடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளன. இது தவிர, தஞ்சை அரசினர் இராசா மிராசுதார் மருத்துவ மனையில் சுமார் 5 இலட்சரூபாய் செலவில் அறுவைச் சிகிச்சை நிலையத்துடன் கூடிய தாய்சேய் நல விடுதியும், இக்கட்டடத்தின் மாடியில் 1.5 இலட்ச ரூபாய் செலவில் 20 படுக்கைகள் கொண்ட குடும்ப நலத்திட்டத்தின் கீழ், அறுவைச் சிகிச்சை நிலையமும் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது. மாயூரத்தில் 38 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றும் பாபநாசத்தில் 12 படுக்கைகள் கொண்ட கட்டடமும் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் 1.45 லட்ச ரூபாயில் 'விரிவுரை ஹால்' ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது.

மேலும் தோல் சம்பந்தமான வியாதிகளைக் குணப்படுத்த 1.8 இலட்ச ரூபாய் செலவில் தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் ஒரு சிகிச்சைப் பகுதி கட்டப்பட இருக்கிறது. 80 ஆயிர ரூபாய் செலவில் கருப்பும்பள்ளத்தில் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பகுதியும், நாகையில் சுமார் 1 இலட்ச ரூபாயில் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடம் ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றன.

திருவாரூரில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனைக் கட்டடம் ஏறத்தாழ 12 மாதங்களில் கட்டப்பட்டுள்ளது. வி. சோமசுந்தர முதலியார் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியின் பழைய விளையாட்டுத் திடலில் சுமார் 4·80 ஏக்கர் பரப்பளவில் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் முறையே (1) வெளியில் இருந்து சிகிச்சை பெறுவோர் பகுதி, (2) அவசர உதவிப் பகுதி, (3) ஆண்கள் உள் சிகிச்சைப் பகுதி, (4) சாதாரண மகப்பேறுப் பகுதி (5) அறுவைச் சிகிச்சைப் பகுதி (6)தொற்றுநோய்ப் பகுதி, (7) சமையல் பகுதி என ஏழு பிரிவுகள் உள்ளன. இம் மருத்துவ மனையில் அறுவை மகப்

பேறு சிகிச்சை பெற 20 படுக்கைகளும், சாதாரண மகப்பேறுக்காக 24 படுக்கைகளும், ஆண்கள் உள்ளிருப்புச் சிகிச்சை பெற 20 படுக்கைகளும், தொற்று நோய்ச் சிகிச்சை பெற ஆறு படுக்கைகளும் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. சுமார் 4,000 சதுர மீட்டர் பரப்புள்ள இக்கட்டடத்தின் திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ. 16 இலட்சமாகும்.

## இரத்தம் கசியாமல் அறுக்கும் கத்தி

'தோலிருக்கச் சுளை விழுங்கி', 'ஈரத் துணியால் கழுத்தறுத்தல்' போன்ற வியத்தகு செய்திகளைக் கேட்டும் சொல்லியும் பழகிப் போன நமக்கு இரத்தம் சிந்தாத அறுவைக் கத்தி பற்றிய புதிய தொரு செய்தி கிடைத்திருக்கிறது.

நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த லூயிஸ் பலமத் என்னும் பௌதிக விஞ்ஞானி ஒருவரே இந்த அதிசயக் கத்தியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இரத்தம் சிந்தாமல் அறுவைச் சிகிச்சை செய்ய வகை செய்யும் இந்தக் கத்தி, செவிப்புலனுக்குக் கேட்காத அதிர்வுடையது. ஓர் அங்குலத்தில் ஆயிரத்தில் ஐந்து பங்கு நீளத்திற்கு விநாடிக்கு 30,000 தடவை அதிர்கிறது இந்தக் கத்தி. இந்த உராய்வினால் ஏற்படும் வெப்பம், பல இரத்தக் குழாய்களை மூடி விடுகிறது. ஆகவே, அறுவைச் சிகிச்சை நடக்கையில், இப்போது செய்வதுபோல இரத்தக் குழாய்களைக் கட்டி வைக்கத் தேவையில்லை.

---

இயற்கையின் பரந்த இடமும், சுத்தமான காற்றும், அமைதியான சூழ்நிலையும் ஒருங்கே அமையப் பெற்ற இவ்விடத்தில் எழுந்துள்ள மருத்துவ மனை இவ்வட்டாரத்தில் உள்ள நோயாளிகளின் இடர்களையும், பிணிகளையும் களையும் என்பதில் ஐயமுமில்லை.

இந்த மருத்துவமனை திறப்பு விழாவின் போது வடபாதி மங்கலம் திரு. வி. எஸ். தியாகராச முதலியார் தமது தந்தையாரின் பெயரிலும் தாயாரின் பெயரிலும் இந்த மருத்துவ மனையில் இரண்டு கூடங்களைக் கட்ட ஒரு இலட்சம் ரூபாயை நன்கொடையாக முதல்வர் கலைஞரிடம் அளித்தார்.

## தீக்குச்சி வந்த விதம்

அன்றாட வாழ்க்கையில் தீக்குச்சிக்கு மிக இன்றியமையாத இடமுண்டு. பண்டைக் காலத்தில் சக்கிமுக்கிக் கல்லைக் கொண்டு தீ மூட்டினான்; இன்று மிக எளிதாகத் தீக்குச்சி கொண்டு ஒரு விநாடியில் தீ மூட்டி விடுகிறான். காலத்தின் வேகம் காட்டுத் தீ போல் முன்னேறி இருப்பதையல்லவா இது காட்டுகிறது!

சக்கி முக்கிக் கல்லுக்குப் பிறகு இரசாயனப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 1781-ல் பிரான்சில் பாஸ்வர வத்தி கண்டு பிடிக்கப்பட்டது. காகிதச் சுருளின் முனையில் பாஸ்வரம் வைத்துக் கண்ணாடிக் குழாயினுள் வைத்துச் சீல் செய்து விடுவர். பிறகு குழாயை உடைத்தவுடன் வெளிக் காற்றிலுள்ள ஆக்ஸிஜன் பாஸ்வரத்துடன் செயலாற்றித் தீப்பிடித்து எரியும். 1786-ல் இத்தாலியில் ஒரு வகைத் தீக்குச்சியைக் கண்டு பிடித்தனர். 1805-ல் பிரான்சில் கந்தக அமிலத்தில் ஊறிய நார்ப்பொருள் உள்ள புட்டியைப் பயன்படுத்தினர்.

இக்காலத்தில் பயன்படுத்தும் தீக்குச்சியைப்போல் ஒரு வகையான தீக்குச்சியை ஜான் வாக்கர் என்ற ஆங்கிலேயர் 1827-ல் முதன் முதலாகச் செய்து காண்பித்தார். அன்டிமனி சல்பைடு, பொட்டாசியம் குளோரேட்டு, வேலம் பிசின் ஆகியவற்றின் கலவையை மூன்று அங்குல நீளமுள்ள மெல்லிய குச்சியின் முனையில் பூசி இவர் தீக்குச்சியைத் தயாரித்தார். உப்புத்தாள் போன்ற ஒரு காகிதத்தின் மீது இக்குச்சி முனையைத் தேய்த்தால், இது வெடித்துக் கொண்டே எரியும்; அதோடு துர்நாற்றமும் வீசும். நச்சுப்புகை வரும் ஒரு வகைத் தீக்குச்சியை சாமுவேல் ஜோன்ஸ் என்பவர் செய்தார்.

எங்குத்தேய்த்தாலும் தீப் பற்றக் கூடிய ஒருவகைத் தீக்குச்சியை, டாக்டர் சார்லஸ் சாவுரியா என்ற பிரெஞ்சுக்காரர் செய்தார். 1830-ல் வெளிவந்த இந்தத் தீக்குச்சியின் முனையில் வெள்ளை அல்லது மஞ்சள் பாஸ்வரம் கலந்த கலவை இருக்கும். இது எரியும் போது கிளம்பிய புகை 'நெக்ரோசிஸ்' என்ற ஒரு வகை நோயை மக்களிடையே பரவச் செய்தது.

கொலைக்கும், தற்கொலைக்கும் இந்த மஞ்சள் பாஸ்வரம் பயன்பட்டது. எனவே, இந்தவிபரீதங்களைத் தடுக்க காப்புத் தீக்குச்சி ( Safety Matches ) என்ற ஒரு வகைத் தீக்குச்சியை 1844-ல் சுவீடன் நாட்டு விஞ்ஞானி ஒருவர் கண்டு பிடித்தார். இந்தக் குச்சி ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு நாடெங்கும் பரவின.

இரண்டாவது உலகப் போரின் போது, நீர்புகாத ( Water proof ) தீக்குச்சி ஒன்றை 1943-ல் அமெரிக்கர் ஒருவர் கண்டறிந்தார். இந்தக் குச்சியை எட்டு மணி நேரம் தண்ணீரிலே போட்டு வைத்து எடுத்தாலும் எரியும் தன்மையுடையது.

இந்தியாவில் முதல் தீக்குச்சித் தொழிற்சாலை 1894—1895-ல் அகமதாபாத்திலும், பிலாஸ்பூரிலும் தோன்றியது. என்றாலும் மந்தநிலையேகாணப்பட்டது. முதல் உலகப் போருக்குப் பிறகே இந்தியாவில் தீக்குச்சித் தொழில் பெருமளவில் வளரத் தொடங்கியது. 1923-ல் கல்கத்தாவிலும், 1925-ல் லாகூரிலும் தொழிற்சாலைகள் தொடங்கப் பெற்றன. சுவீடன் நாட்டுக் கம்பெனியார் 1926-ல்பரெலி, அம்பர்நாத், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில், 'மேற்கிந்தியத் தீக்குச்சிக் கம்பெனி' என்ற பெயருடன் தீக்குச்சித் தொழிற்சாலைகளை நிறுவினர்.

**VOLTAS**

# பருத்திப்பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்க மிகச் சிறந்தது



## ஜோலோன்®

மூலப் பொருள்

## ‘ரோன்-பொலெங்க்’

பாரீஸ், பிரான்ஸ், ஸ்தாபனத்தாரால்
கண்டுபிடிக்கப்பட்ட **போஸலோன்**
பூச்சி மருந்து

RHÔNE-POULENC

உலகப் புகழ்பெற்ற பூச்சி மருந்து தயாரிப்பாளர்களான, பிரான்ஸ் நாட்டு **ரோன்—பொலெங்க்** நிறுவனத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட போஸலோனை மூலப்பொருளாகக் கொண்ட **ஜோலோன்** பூச்சி மருந்து இப்போது இந்தியாவில் கிடைக்கிறது. அது விவசாயிகளுக்கு நோயற்ற, செழிப்பான பருத்தி மகசூலை அளிக்கிறது. காய் துளைக்கும் புழுக்கள், வெள்ளை ஈக்கள், உறிஞ்சும் பூச்சிகள், இலை தின்னும் புழுக்கள், செடிப் பூச்சிகள். வண்டுகள் முதலியவற்றிலிருந்து பரிபூரணப் பாதுகாப்பு அளிப்பதைத் தவிர, **ஜோலோன்** பருத்திப்பயிர்களைக் **காய்ப்புழுக்கள்** தாக்குவதிலிருந்தும் பரிபூரணமாகப் பாதுகாக்கிறது. மேலும் **ஜோலோன்** பயிர்ச்சிலந்தியை ஈடற்ற முறையில் கட்டுப்படுத்துவதால், அதனுடன் ஸல்பரோ அல்லது வேறு எந்தப் பூச்சி மருந்தோ உபயோகப்படுத்தத் தேவையில்லை.

**காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பயிர்களைப் பாதுகாத்திட ரோன்—பொலெங்கின் மற்றுமோர் தயாரிப்பு கில்வால் (மூலப்பொருள் வேமிடோதியோன் ஸிஸ்டமிக் (Systemic) பூச்சிமருந்து) மிகச்சிறந்தது.**

பாரதத்தின் பசுமைப் புரட்சியைப்
பாதுகாப்பது
**‘ரோன்-பொலெங்க்’**
பூச்சி மருந்துகள்

மேலும் விவரங்களுக்கு, கீழ்க்கண்ட முகவரிக்குத் தயவுசெய்து தொடர்பு கொள்க:
**வோல்டாஸ் லிமிடெட்**
கெமிக்கல்ஸ் டிவிஷன்,
19, கிரஹாம் ரோடு, பெல்லார்ட் எஸ்டேட்,
பம்பாய்-1.

ULKA-VRP-1. TAM

# செய்திப் பத்திரிகையின் வரலாறு

நாட்டு நடப்புகளை அவ்வப் போது தெரிந்து கொள்ள பத்திரிகை ஒரு இன்றியமையாத சாதனமாக விளங்கி வருவதைப் பார்க்கிறோம். இன்று எண்ணற்றப் பத்திரிகைகள் உலகமெங்கணுமிருந்து வெளிவருகின்றன. நாளிதழ்கள், வார, மாதமிருமுறை இதழ்கள் இன்று பார் முழுவதும் பரவி உள்ளன.

பத்திரிகை என்றதும் முதன் முதலாக வெளிவந்த பத்திரிகை எதுவாக இருக்கும் என்ற எண்ணம் எழுவது இயல்புதானே? உலகத்திலேயே முதன் முதலாக வெளிவந்த நாளிதழ் ஆறும் நூற்றாண்டில் சீனத் தலைநகர் பீகிங்கிலிருந்து, வெளிவந்த 'ட்ஸிங் பாவோ' என்பதாகும். இது அரசுச் செய்தித்தாளாகும். எழுத்துக்களைச் செதுக்கிய பிளாக்குகளைக் கொண்டு அச்சிடப்பட்ட இந்தத் தாள் 1835 வரை வெளிவந்தது.

ஐரோப்பாவில் நாளிதழ் முதன் முதல் ரோம் நகரில் தோன்றியது. ரோம் நகரில் நடக்கும் நிகழ்ச்சிகளை அங்குள்ள எழுத்தாளர்கள், பிற பகுதிகளுக்கு எழுதி அனுப்பி வந்தார்கள். அவை செய்திக் கடிதங்கள் (News Letters) என்று வழங்கப்பட்டன. இம்முறை 18-ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்றது.

கூட்டன்பர்க் என்பவர் அச்சு முறையைக் கண்டுபிடித்த பிறகு, செய்தித் துண்டுப் பிரசுரம் (News Pamplets) வெளிவந்தன. ஜெர்மனியில் வெளியான இந்த வெளியீடுகளுக்குப் போதிய ஆதரவில்லாததால் இது சரிவர நடைபெறவில்லை. ஆனால், ஜெர்மனியில் 17-ஆம் நூற்றாண்டில் பத்திரிகை ஒழுங்காக வெளிவந்தது. ஜெர்மனியில் மிகப் பழமையான பத்திரிகையின் பெயர் 'உறவு' (Relation) என்பதாகும்.

இங்கிலாந்தில் முதன் முதலாக ஒழுங்காக வெளிவந்த பத்திரிகை 'வாரச் செய்திகள்' என்பதாகும். 1665-ல் அரசுச் செய்திகளை கொண்ட 'க்ஸ்ஆபோர்ட் கெஜட்' தொடங்கப் பெற்றது. அது இன்றும் நடந்து வருகிறது. இங்கிலாந்தில் தோன்றிய முதல் நாளிதழ், 'தினசரி செய்திகள்' (Daily Courant) என்பதாகும். இது எலிசபெத் மாலெட் என்னும் அம்மையாரால் 1702-ல் தொடங்கப் பெற்றது. புகழ் பெற்று விளங்கும் 'லண்டன் டைம்ஸ்' என்னும் பத்திரிகை, முதலில் 1785-ல் ஜான் வால்டர் என்பவரால் 'தினசரி உலக ரிஜிஸ்தர்' (Daily Universal Register) என்று தொடங்கப் பெற்றது. அமெரிக்காவில் தோன்றிய முதல் பத்திரிகை எது தெரியுமா? 'பொது நிகழ்ச்சிகள்' (Public Occurrences) என்பதாகும். இது 1690-ல் பெஞ்சமின் ஹாரிஸ் என்பவரால் நிறுவப்பட்டதாகும். அரசு, இதன் முதல் இதழுக்கே தடை விதித்தது. பிறகு 1704-ல் 'செய்திக் கடிதம்' என்ற பத்திரிகை வெளிவந்தது. பிறகு பல பத்திரிகைகள் வெளிவந்தன என்றாலும் விலை அதிகமுள்ள அவைகளை ஏழைகளால் வாங்க முடியவில்லை. 1833-ல் பெஞ்சமின் எச். டே என்பவர் ஒரு பென்னி விலையில் 'சன்' என்னும் பத்திரிகையை வெளியிட்டார். அப்பத்திரிகைக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

'மாத்திரைப் பத்திரிகை'யைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அமெரிக்காவில் 1920-ல் இப்படியொரு பத்திரிகை அதாவது மாத்திரைப் பத்திரிகை (Tabloid News Paper) வெளிவந்தது. இதன் சிறப்பு என்ன? பக்கம் சிறியது; படங்கள் நிறைந்தது; திடுக்கிடும் செய்திகள் மிகுந்தது. இந்த வகையில் தோன்றிய நாளிதழ், 'தினசரிச் செய்தி' என்பதாகும்.

இங்கிலாந்தின் புகழ் மிக்க பத்திரிகை 'டெய்லி மெயில்' ரஷ்யாவில் முக்கியமான பத்திரிகைகளாக விளங்குபவை இஸ்வெஸ்தியா, பிராவ்தா என்பனவாகும். உலகத்தில் நாள்தோறும் ஏராளமானப் பிரதிகள் வெளியாகும் பத்திரிகை இலண்டனிலிருந்து வெளிவரும் 'டெய்லி எக்ஸ்பிரஸ்' என்பதாகும். இது முப்பது இலட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகிறது. இதற்கு அடுத்தது, நியூயார்க்கில் வெளியாகும் 'டெய்லி நியூஸ்' இலண்டனில் வெளியாகும் 'டெய்லி மிர்ரர்' என்பவையாகும்.

இந்தியப் பத்திரிகைகள் பற்றி நாம் அறிவதென்ன?

ஔரங்கசீப் காலத்திலேயே செய்தித் தாள் இருந்ததாகவும், அது அரசு சம்பந்தமான செய்திகளை வெளியிட்டதாவும் கூறுகின்றனர். இந்தியாவில் கல்கத்தாவில்தான் முதல் செய்தித்தாள் தோன்றியது. ஜேம்ஸ் அகஸ்துஸ் ஹிக்கி என்பவர் வங்காள கெஜட் என்பதை 1780-ல் வெளியிட்டார்.

சென்னையில் முதன் முதல் வெளிவந்த செய்தித்தாள் 'சென்னை கூரியர்' (Madras Courier) என்பது. இது 1785-ல் வெளிவந்தது. 1789-ல் பம்பாயில் வெளிவந்த 'பாம்பே ஹெரால்டு' முதன் முதல் பம்பாயில் தோன்றிய செய்தித்தாளாகும். சென்னையில் தோன்றிய முதல் தமிழ்ப் பத்திரிகை 'தமிழ் இதழ்' என்பதாகும். இதை 1831-ல் கிறித்தவச் சங்கத்தார் தொடங்கினர். முதல் தமிழ் வார இதழ் 'தினவர்த்தனி' 1856-ல் இது வெளிவந்தது. முதல் தமிழ் மாத இதழ் 'ஜன விநோதினி'. அரசு கல்வி இலாகா 1870-ல் இதைத் தொடங்கியது. முதல் தமிழ் நாளிதழ் 'சுதேசமித்திரன்' 1882-ல் இது வெளிவந்தது. சென்னையில் முதன் முதல் இந்தியரால் வெளியிடப்பட்ட ஆங்கில இதழ் 'இந்து' ஆகும்.

கல்லூரி ஆசிரியர்களுக்குப் போதனை பயிற்சி அளிப்பதற்காகக் கோவை அருகிலுள்ள பெரிய நாயக்கன் பாளையத்தில் தனிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவிருக்கின்றன. நவீன முறைகளின்படி கல்வி கற்பிப்பது எப்படி என்று கல்லூரி ஆசிரியர்களுக்கு அங்குப் போதிக்கப் படும். கல்லூரிகளில் பாடத் திட்டங்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நவீனப் படுத்த வேண்டியது அவசியம் என்றும், அச்சிடப்பட்ட 'நோட்ஸ்' வாங்கிப் படிக்கும் பழக்கத்தைக் கைவிட்டு, தங்கள் பாடப் புத்தகங்களையே மாணவர்கள் விரிவாகப் படிக்க வேண்டும் என்றும் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் கூறியுள்ளார்.

# வீடு கிடைத்தது! வேதனை தீர்ந்தது!

“பறவைக்கும் கூடு உண்டு! பாம்புக்கும் புற்று உண்டு! பூச்சிப் பூரான்களுக்கும் பொந்து உண்டு! ஆனால் ஆறறிவு படைத்த மனித இனத்தில் நம் போன்ற ஏழை எளியவர்களுக்கு ஒரு வீடு இல்லையே என்று குறைபட்டுக் கொள்வாயே அம்மா! அந்தக் குறை இனி இல்லை அம்மா! நமக்கென்று ஒரு வீடு கிடைத்து விட்டது! எனது வேதனை தீர்ந்து விட்டது! நான் மகிழ்ச்சியில் திளைத்துள்ளேன். என் மகிழ்ச்சியில் பங்குபெற நீ இல்லையே அம்மா! இத்தகைய ஒரு வீடு ஏழாண்டுகளுக்கு முன்பு கிடைத்திருக்குமானால், உன்னை இழந்திருக்க மாட்டேனே அம்மா! இன்று எல்லாரையும் போல், நீயும் மகிழ்ச்சிக் கடலில் திளைத்திருப்பாயே அம்மா!'' என்ற குரல் கேட்டு, என் நண்பனைக் காணச் சென்ற நான் திகைத்து நின்றேன். சற்று நேரத்தில் தேம்பித் தேம்பி அழும் குரலும் கேட்டது. என் நண்பன் அழுவதைத் தடுத்து, ஆறுதல் கூற விரும்பிய நான் அவன் வீட்டுக் கதவைத் தட்டினேன். ஒரு சில வினாடிகள் வரை கதவு திறக்கப்படவில்லை. பிறகு மீண்டும் பலமாகத் தட்டினேன். கதவு திறந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தலை குனிந்து நின்றான் என் நண்பன். ஆனால், அவன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிந்துக் கொண்டிருந்தது. அவன் நிலை கண்டு என் மனம் வேதனைப்பட்டது.

‘‘என்ன குமார் இன்னும் நீ சின்னக் குழந்தை மாதிரி அம்மாவை நினைத்து அழுகிறாயே! புது மனைப் புகு விழாவான இன்று மகிழ்ச்சியாக இருக்க வேண்டாமா? நடந்ததை நினைத்து இப்போது கவலைப்படுகிறாயே'' என்றேன்.

‘‘உனக்குத்தெரியாது இளங்கோ! என் அம்மா எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு கூலி வேலை செய்து சம்பாதித்து அதைக் கொண்டு என்னை வளர்த்து, படிக்க வைத்தார்கள் என்று உனக்குத் தெரியாது'' என்று கூறி மீண்டும் தேம்பினான். நான் என் கைக்குட்டையை எடுத்து அவன் கண்ணீரைத் துடைத்து விட்டேன். ஆனால் அடுத்த வினாடியே அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

‘‘குமார் நீ அழக்கூடாது! நீ அழுதால் எனக்கும் அழுகை வந்து விடும் போலிருக்கிறது! அழாமல் இரு! நீ அழுவதாக இருந்தால், அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது! நான் வெளியே போய் இருக்கிறேன். நண்பர்கள் வந்தபின் வருகின்றேன்'' என்றேன்.

‘‘இளங்கோ! ஏழையின் கண்ணீரை யாராலும் நிறுத்த முடியாது! அவர்கள் மனத்தில் உள்ள வேதனைகளை யாரிடமாவது சொல்லி முடித்தால்தான் அவர்களது கண்ணீர் நிற்கும். தயவு செய்து என் கண்ணீரை நிறுத்துவதற்காக வேனும் நான் சொல்வதைக் கவனமாய்க் கேள் இளங்கோ!'' என்றான்.

‘‘நான் கேட்கிறேன் ஆனால் நீ அழாமல் அமைதியாக இருந்து சொல்ல வேண்டும்.''

‘‘சரி'' என்று கூறி விட்டுக் குமார் கண்களைத் துடைத்துக் கொண்டு ஒரு பாயை எடுத்துக் கீழே போட்டு விரித்து உட்காரச் சொன்னான். நான் பேசாமல் உட்கார்ந்தேன். என் அருகே அவன் அமர்ந்து பேச முயன்றான். ஆனால் அவனுடைய விசுமல், அவனைப் பேசவிடவில்லை. என் கண்களிலும் கண்ணீர் வடிந்தது. அதைக் கண்டவுடன் அவன், ‘‘இளங்கோ!'' நீ அழாதே. நான் என் கதையைச் சொல்கிறேன்'' என்று கூறி என் கண்ணீரை அவனது துண்டினால் துடைத்து விட்டான். நான் காலிலிருந்த ஷுவை கழற்றி ஓரத்தில் வைத்து விட்டு வசதியாக அமர்ந்தேன்.

‘‘1957-ஆம் ஆண்டு புயல் அடித்து பெருமழை பெய்து குப்பங்களெல்லாம் வெள்ளத்தில் மூழ்கிய போது, ‘சன்’ தியேட்டர் அருகிலிருந்த எங்கள் குடிசையும் தண்ணீரில் மூழ்கிப் போய்விட்டது. நாங்கள் ஜி. என். செட்டி சாலையின் ஓரத்தில் குடியேறினோம். அதன்பிறகு எங்களால் புதிதாகக் குடிசை கட்டிக் கொள்ள முடியவில்லை. என் அப்பா கொளுத்தும் வெய்யிலிலும், கொட்டும் மழையிலும் வண்டி இழுப்பார். என் அம்மா வண்டியின் பின்னாலிருந்து தள்ளுவார். வண்டி வாடகைப் போக மீதியிருந்த பணத்தைக் கொண்டு ஏதோ கஞ்சி காய்ச்சிக் குடித்துக் குடும்பம் நடந்து வந்தது. அந்தக் கஷ்டத்திலும் என்னைப் படிக்க வைத்து



வந்தனர். 1962-ஆம் ஆண்டில் என் அப்பா 'நிமோனியா' காய்ச்சலில் இறந்து விட்டார். எலும்பும் தோலுமாக வாழ்ந்த அவர் சாக்கடை ஓரத்திலேயே கொஞ்சம் நல்ல இடத்தில் என்னையும், என் அம்மாவையும் உறங்க வைத்துவிட்டு, சாக்கடை அருகிலேயே ஈரத்தில் படுத்து உறங்கியதால் அவருக்கு 'நிமோனியா' காய்ச்சல் வந்து விட்டது என்பது மற்றவர்கள் சொல்லித்தான் எங்களுக்குத் தெரிந்தது. என்னையும், என் அம்மாவையும் காப்பாற்றுவதற்காக என் அப்பா தன்னையே பலிகொடுத்துக் கொண்டார்.

அதன்பின் என் அம்மா வண்டி இழுத்து எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். நானும் பள்ளி சென்ற நேரம் போக மீதி நேரத்தில் அம்மாவுக்கு உதவியாக வேலை செய்தேன். அப்படி, இப்படி மீதம் பிடித்து, மீண்டும் 'சன்' தியேட்டர் அருகில் இருந்த எங்கள் குடிசையைப் புதுப்பித்தோம். 1965-ஆம் ஆண்டில் பெய்த அடைமழையில் எங்கள் குடிசைப் பாழடைந்தது. நானும் அம்மாவும் மீண்டும் ஜி. என். செட்டி சாலையின் ஓரத்தில் நடைபாதை வாசிகளாகக் குடியேறினோம். கொஞ்ச நாட்களில் என் அம்மாவும் 'நிமோனியா'வினால் இறந்து விட்டார். நான் அனாதையானேன். வாடகைக்குக் கட்டை வண்டி கொடுத்துக் கொண்டிருந்த முதலாளியின் உதவியுடன் நான் இடிந்த குடிசையைப் புதுப்பித்துக் கொண்டு, படித்துக் கொண்டும் வண்டி இழுத்துக் கொண்டும், பிழைப்பை நடத்தி வந்தேன்.

1967-ஆம் ஆண்டில் கொடியவர்கள் குடிசைகளுக்கெல்லாம் தீ வைத்தார்கள்! அப்பொழுது



என் குடிசையும் எரிந்து சாம்பலாகி விட்டது. நான் மீண்டும் ஜி. என். செட்டி சாலையில் ஒரு வீட்டின் முன்னால் ஒரு கித்தானை கட்டிக் கொண்டு வசித்து வந்தேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்ற 'பேரறிஞர் அண்ணா' எரியாத வீடு கட்டும் திட்டத்தைக்கொண்டு வந்தார். எனக்கு அதில் ஒரு வீடு கிடைத்தது. ஓய்வு நேரங்களில் வேலை செய்து சம்பாதித்து, நான் பள்ளி இறுதி வகுப்பை முடித்து விட்டுக் கல்லூரியில் சேர்ந்தேன். உன் போன்ற நண்பர்களின் உதவியுடன் பி. ஏ. படித்து வெற்றிபெற்று, ஒரு வேலையிலும் சேர்ந்து சம்பாதித்து வருகின்றேன்.

அண்ணா வழியில் ஏழை எளியவர்களின் வாழ்வை வளமாக்கி வரும் இன்றைய தமிழ்நாடு அரசின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குடிசைமாற்று வாரியம் அமைத்தார். அதன் பயனாய், கோட்டூர் புரத்தில் கட்டப்பட்ட பல அடுக்கு மாளிகையில் எனக்கும் ஒரு வீடு கிடைத்தது.

நல்ல வேலையும், நல்ல வீடும் கிடைத்த இந்த நேரத்தில் என் மகிழ்ச்சியில் பங்கு கொள்ள என் அப்பா, அம்மா இல்லையே என்ற கவலைதான் என்னை அழ வைத்து விட்டது'' என்று கூறி முடித்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டான் குமார். அவன் கதை கேட்டு என் கண்களிலும் வடிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

அப்பொழுது எங்கள் நண்பன் சேகரின் கார் ஒலி கேட்டது.

''சேகர் வந்து விட்டான்! அவனுடைய கார் ஒலி கேட்கிறது'' என்று கூறி எழுந்தேன். குமாரும் என்னுடன் எழுந்து வந்தான். மாடியில் உள்ள வராண்டாவிலிருந்து கீழே எட்டிப் பார்த்தோம். சேகர், மூர்த்தி, ரவி ஆகிய மூவரும் காரை விட்டு இறங்கிக் கொண்டிருந்தனர். குமார் கீழே இறங்கி ஓடி அவர்களை அன்புடன் வரவேற்று அழைத்து வந்தான்.

''என்னடா குமார்! நீயும் இளங்கோவும் அழுத மாதிரி இருக்கின்றீர்கள்?'' என்று சேகர் கேட்டான்.



"அதெல்லாம் ஒன்றுமில்லையே" என்றுகூறி குமார் சமாளித்தான்.

"குமார்! வீடு பரவாயில்லையே! அழகாகவும், வசதியாகவும் இருக்கிறதே!" என்றான் மூர்த்தி.

"ஒரு பொது அறை, சமையல் அறை, சமையல் அறைக்குள்ளே சாமான்கள் வைக்க வசதியுள்ளன. மேலும் குளிப்பதற்கென்று தனியாக ஒரு அறை, இவைகளோடு ஒரு கழிவறை இத்தனையும் இருக்கிறதே, இந்த வீட்டிற்கு எவ்வளவு வாடகை?" என்று கேட்டான் ரவி.

"மாதம் ரூபாய் 15 தான் வாடகை!" என்றான் குமார்.

"உண்மையாகவாடா?" என்று கேட்டான் சேகர்.

"ஆமாம்" என்றான் குமார்.

"அப்படியானால் நாமும் கூட இங்கே குடி வந்துவிடலாம்!" என்றான் மூர்த்தி.

"உன்போன்ற பணக்காரர்களுக்கு இது கிடைக்காதப்பா! குடிசையில் வாழ்ந்த ஏழை எளியவர்களுக்குத்தானப்பா இந்த குடியிருப்புகள்" என்றேன் நான்.

"டேய் இளங்கோ, நான் விளையாட்டுக்குத்தானடா சொன்னேன். நீ அதற்குள் நான் பணக்காரன் என்பதைக் கூறி மட்டம் தட்டுகிறாயே!" என்றான் சேகர்.

"நானும் விளையாட்டுக்குத் தானடா சொன்னேன்" என்று கூறினேன் நான்.

"சரி! சரி! அந்தப் பேச்சை விடுங்கள்! நமக்குள் ஏழை! பணக்காரன் என்ற வேறுபாடு கூடாது! நாம் அனைவரும் சமம்!" என்றான் சேகர்.

"மாதம் ரூபாய் 15 வாடகை என்பது மிகவும் குறைவாச்சே! அரசுக்கு நட்டம் வருமே!" என்றான் ரவி.

"ஒவ்வொரு குடியிருப்புக்கும், கட்டடச் செலவு, நிலத்தின் விலை உட்பட ரூபாய் 8,000 ஆகிறதாம். மாதம் ரூபாய் 55 வாடகையாக வசூலித்தால் தான் அரசுக்கு நட்டம் வராமலிருக்கும். இதே குடியிருப்பை நிச்சயம் ரூபாய் 80 வாடகைக்கு விடலாம். ஆனால் ஏழை எளியவர்களால் இவ்வளவு வாடகை தர முடியாதென்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு ஒவ்வொரு குடியிருப்புக்கும் மாதம் ரூபாய் 15 வாடகை வாங்குமாறு உத்திரவிட்டுள்ளது"! என்றான் குமார்.

"குடிசை மாற்று வாரியம் ஒன்றைத் தனியே அமைப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடே முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டை இதற்காகப் பாராட்ட வேண்டும். இந்த குறுகிய காலத்தில் 13 திட்டங்களை இவ் வாரியம் மேற்கொண்டு 2,560 குடியிருப்புகளைக் கட்டி முடித்துள்ளது. இந்த முன்னேற்றத்தின் வேகம், 30 நிமிடங்களுக்கு ஒரு வீடு என அமைகிறது. இது பிறர் கண்டு பொறுமைப்படத்தக்கச் சாதனையாகும். 'சென்னையின் அடிச்சுவட்டை இந்தியாவின் இதர நகரங்களும் பின்பற்றுமானால், அடையாளம் தெரியாத அளவுக்கு இந் நகரங்களெல்லாம், மாற்றம் பெற்றுவிடும்' என்று மைய அரசு திட்டக் குழுவின் செயலாளர் திரு அசோக் மித்ரா கூறியிருப்பதையே நான் இங்கு மீண்டும் உங்களிடம் கூற விரும்புகின்றேன்."

"இம்மாதிரியான ஒருவாரியத்தை அமைத்து குடிசை மாற்றுத் திட்டங்களை நிறைவேற்றிடத் தேவையான நிதியை ஒதுக்கித் தந்து, குறைந்த வாடகைக்கு குடியிருப்புகள் அமைய தீர்க்க தரிசனத்தோடு திட்டமிட்டுச் செயலாற்றியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்களையும், தமிழ்நாடு அரசையும் நான் பாராட்டுகின்றேன். குடிசை மாற்று வாரியத் தலைவருக்கும், ஊழியர்களுக்கும் என் பாராட்டுக்கள். முடிவாக ஒன்றைக் கூற விரும்புகின்றேன். மைய அரசானது, தமிழ் நாட்டில் நிறைவேறிவரும் இந்த குடிசை மாற்றுப் பணிகளுக்காக ஆகின்ற செலவில் பாதியையாகிலும் மானியமாக கொடுக்க வேண்டும். தேவையான உருக்கு இரும்பு இல்லை, சிமெண்ட் இல்லை என்று ஒரு நாளும் இந்த வேலைகள் தடைபடக் கூடாது."

— ஸ்ரீ ஜெய் பிரகாஷ் நாராயணன்

[—கோட்டூர் புரத்தில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளை 11-6-72-ல் திறந்து வைத்து சர்வோதயத் தலைவர் திரு ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் ஆற்றிய உரை.]

"ஏழை எளியவர்களின் வாழ்வை உயர்த்துவதில் தமிழ்நாடு அரசுக்கு ஈடு இணை கிடையாதப்பா!" என்றான் சேகர்.

"சரி வாங்கடா! மாடி வீடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்து வரலாம்!" என்றான் ரவி.

எல்லாரும் கோட்டூர்புரத்தில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள பல அடுக்கு மாடிகளைப் பார்த்துக் கொண்டே வந்தனர்.

"வளர்ந்து வரும் சென்னை மாநகரின் சுற்றுப்புறச் சிற்றூர்களில் ஒன்று கோட்டூர்புரம். சைதாப்பேட்டைத் தொகுதியில் அடையாறு ஆற்றங்கரையோரம், மாமரங்களும், பனை மரங்களும் மிகுதியாக உள்ள சோலை வனம் இது. இயற்கையின் எழில் மிக்க இந்த இடம் செல்வந்தர்களின் ஓய்வுக்குரிய உல்லாச இடமாக இருந்து வந்தது. தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான 580 மனைகள் அளவு பரப்புள்ள நிலம் அடையாற்றின் ஓரம் திடலாக இருந்தது. அடையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தால் திடல் நிரம்பும். கரை போட்டு வெள்ளத்தைத் தடுத்து மக்கள் வாழ்வதற்கேற்ற நல்லூராக இப்போது ஆக்கப்பட்டுள்ளது. குடிசை மாற்று வாரியம் நிறுவிய பின்பு தமிழ்நாடு அரசு இந்த இடத்தில் பல அடுக்கு மாடிக் கட்டடங்களைக் கட்டி அருகிலுள்ள குடிசைப் பகுதிகளைத் திருத்தி அமைக்க முடிவு செய்தது. அதன் விளைவாக இந்த இடத்தில் 1848 குடியிருப்புகள் ( Tenements ) கட்டப்பட்டுள்ளன. இதற்குத் தமிழ்நாடு அரசு 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவு செய்துள்ளது. இக்குடியிருப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில், சர்வோதயத் தலைவர் திருமிகு ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் 11—6—1972 அன்று திறந்து வைத்தார்கள்" — இவ்வாறு குமார் நண்பர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தான்.

மேலும் கோட்டூர்புரம் குடியிருப்புகளில் வாழ்வோருக்குச் செய்யப்பட்டுள்ள குடிநீர் வசதியையும், மின்சார வசதியையும், கழிவு நீர்ப் போக்கிகளையும் விளக்கிக் கூறினான் குமார்.

"மருத்துவமனை ஏதும் இங்கு இல்லையா?" என்று மூர்த்தி கேட்டான்.

"ரூபாய் ஒரு இலட்சத்து 56 ஆயிரம் செலவில் ஒரு மருத்துவ மனையைக் குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ளது. அதை இக்குடியிருப்புத் திறப்பு விழாவன்று மாண்புமிகு தமிழக வீட்டு வசதி அமைச்சர் திரு ராஜாராம் அவர்கள் திறந்து வைத்துள்ளார். இப்பகுதியில் டாக்டர் சஞ்சீவி அவர்கள் அரிய சேவை செய்து, ஏழை எளியவர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். அவருக்கு நமது முதலமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்'' என்று கூறிவிட்டு மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று காட்டினான் குமார்.

மருத்துவ மனையின் மேல் பகுதியில் அமைந்துள்ள நூலகத்தை, மாண்புமிகு தமிழ்நாடு மேலவையின் துணைத் தலைவர் மா. பொ. சிவஞானம் அவர்கள் திறந்து வைத்தார். என்பதைக் கூறி அதையும் சுற்றிக் காட்டினான் குமார்.

"சிறுவர் பூங்கா, ஆரம்பப் பள்ளி, சமூகக்கூடம், அங்காடிகள் ஆகிய அனைத்தும் உள்ளதால் கோட்டூர்புரம் குடியிருப்புகள் குடிசை மாற்று வாரியத்தின் ஒரு மாபெரும் சாதனை என்பதில் தவறில்லை!'' என்றான் சேகர்.

"இங்குள்ள 246 குடியிருப்புகளைத் தவணை முறையின் மூலம் குடியிருப்புக்காரர்களுக்குச் சொந்தமாக்கித் தரவும் குடிசை மாற்று வாரியம் முடிவு செய்துள்ளது. இக் குடியிருப்புகளில், குடியேற விரும்பும் குடிசை வாழ் மக்களிடமிருந்து ரூபாய் 500 முன் பணமாகப் பெற்றுக் கொண்டு, பிறகு ரூபாய் 40 மாதத் தவணையாக 25 ஆண்டு காலத்திற்கு வசூலித்துக் கொண்டு, அதன்பின் அக்குடியிருப்பை அவர்களுக்கே சொந்தமாக்கி விடும் திட்டமும் உள்ளது. தவணை முறையிலே மாத வருவாய் ரூபாய் 250-க்கு குறைவாக உள்ள, சமுதாயத்தின் பல தரப்பட்ட மக்களுக்கும், எடுத்துக் காட்டாக புரோகிதக் குருக்கள், சிகையலங்காரம் செய்யும் மருத்துவ குலத்தவர், சலவையாளர், தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் முதலிய அனைவருக்கும் தவணை முறையிலே குடியிருப்புகள் சொந்தமாக்கப்படும்'' என்று குமார் கூறியவுடன் "நீயும் அத்திட்டத்தில் சேர்ந்தாலென்ன?'' என்று ரவி கேட்டான்.

"அதிக ஆசை கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக சம்பாதித்துக் கொண்டு, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்'' என்றான் குமார்.

"அதுதான் சரி குமார்!'' என்றேன் நான்.

"சரி வாருங்கள் வீட்டிற்குப் போவோம். நீங்கள் வருவீர்கள் என்று பிஸ்கட், பழங்களெல்லாம் வாங்கி வைத்திருக்கிறேன் சாப்பிடலாம்'' என்றான் குமார்.

"ஏழை எளியவர்களின் வாழ்வை வளமாக்க வேண்டுமென்பதற்காக முயன்று வரும் தமிழ்நாடு அரசு ஏழு ஆண்டுகளுக்குள் குடிசைகளையெல்லாம் மாற்றி அமைத்து மாடி வீடுகளாகக் கட்டி விட முயன்று வருகிறது. மாநில அரசு நிதியிலிருந்தே இதுவரை இத்திட்டங்களுக்குச் செலவிடப்பட்டு வருகிறது. ஆனால் ஒரு பத்திரிகை மாநில அரசு நிதி உதவியிலேயே இத்திட்டங்கள் நடைபெறுகின்றன என்று படம் போட்டுக் கேலி செய்துள்ளதே!'' என்றான் ரவி.

மாநில நிதியாக இருந்தாலென்ன அல்லது மைய அரசு நிதியாக இருந்தாலென்ன, மற்ற மாநிலங்களில் நடைபெறாத திட்டத்தை, மனிதாபிமானத்தோடுத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறதே! சிங்கப்பூரில் குடிசைகளை மாற்றுவதற்காக ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை நேரத்திற்கு ஒரு வீடு என்ற விகிதத்தில் கட்டப்படுகிறது. இங்கு கட்டப்படும் வீடுகளை ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை வீதம் கணக்கிடும் பொழுது 30 நிமிடங்களுக்கு ஒரு வீடு வீதம் கட்டப்படுவது கண்டு, உலகின் பல நாட்டு நிபுணர்களும் பாராட்டுகிறார்கள்'' என்று சேகர் கூறினான்.

நாங்கள் குமாரின் வீட்டிற்குத் திரும்பி பிஸ்கட், பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். குமார் அதற்குள் சூடாகத் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்தான்.

"எப்படியோ குமாருக்கு வீடு கிடைத்தது! அவன் வேதனை தீர்ந்தது! வாருங்கள் புறப்படுவோம்'' என்றான் மூர்த்தி.

"டேய்! மூர்த்தி ஏண்டா பிரித்தே பேசுகிறாய்? அவனுக்கு மட்டும் தான் வேதனை தீர்ந்ததா நமக்கும் தான். நமக்குள் இன்பத்திலும் துன்பத்திலும் எப்போதும் பங்கு இருக்கவேண்டும். 'எல்லார்க்கும் எல்லாம்!' என்ற பொது நோக்கு நம்மிடையே இருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு ஆக்கப்பணிகளுக்கு நம்மைப் போன்ற பணக்காரர்களும் உதவ வேண்டும். அப்பொழுதுதான் நாடு செழிக்கும்! நாமும் உயர்வோம்!'' என்றான் சேகர்.

"சரி! குமாருக்கு வீடு கிடைத்ததால் நம் வேதனை தீர்ந்தது'' என்றான் மூர்த்தி.

"ஆம்! இளங்கோவிடம் மனம் விட்டுப் பேசியதால், உண்மையிலேயே என் வேதனையெல்லாம் தீர்ந்தது'' என்றான் குமார்.



# திருமழிசையில் சித்தரஞ்சன்

தமிழக அரசு, பொது மக்களின் நல்வாழ்வுக்கு எத்தனையோ அருந்தொண்டுகளைச் செய்து வருகிறது; அந்தப் புனிதத் தொண்டுகளில் ஒன்றுதான் 'சித்தரஞ்சன் நடமாடும் மருத்துவ நிலையத்தை' உருவாக்கிய பாங்கு.

நாகரிகமும்—நெருக்கமும் பின்னிக் கிடக்கும் நகர்ப்புறங்களில் அல்லது அறியாமையும் அலட்சியமும் குவிந்துகிடக்கும் கிராமப் புறத்துக்குச் சென்று அங்குள்ள மக்களின் உடல்நிலையைக் கவனித்து, அவர்களுக்குற்ற நோயை நீக்கப் பாடுபடுகிறது சித்தரஞ்சன் நடமாடும் மருத்துவ நிலையம்.

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள இந்த நடமாடும் மருத்துவ நிலையம், செங்கற்பட்டு மாவட்டிலுள்ள கும்முடிப்பூண்டி, காட்டாங்குளம் ஆகிய பகுதிகளில் தனது முகாம்களை முடித்துவிட்டுத் தற்போது திருபெரும்புதூர்த் தொகுதியிலுள்ள திருமழிசைக்கு வருகை புரிந்திருக்கிறது. இதனை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 14—6—1972 அன்று துவக்கி வைத்தார்கள்.

திருமழிசையில் இயங்கிவரும் இந்த முகாம் ஏனைய இரு முகாம்களைவிடச் சிறப்பு வாய்ந்தது என்று குறிப்பிட வேண்டும். ஏனென்றால் பொது மக்கள் இந்த முகாமில், நடமாடும் மருத்துவ மனையை நல்ல விதத்தில் பயன்படுத்திக் கொள்ள முன் வருகிறார்கள்.

நாள்தோறும் 454 பேர்கள் இங்கு மருத்துவம் பார்த்துக் கொள்ள வருகிறார்கள். ஜூன் 14-ஆம் நாளன்று மட்டும் 628 பேர்கள் மருத்துவம் பார்த்துக் கொள்ள வந்திருக்கிறார்கள் என்றால் அதன் பொருள் என்ன? பொது மக்கள் இந்த நடமாடும் மருத்துவ மனையை நல்ல விதத்தில் பயன்படுத்திக் கொள்கிறார்கள்—அதன் முக்கியத்தைத் தக்க விதத்தில் உணர்ந்து செயலாற்றுகிறார்கள் என்பதுதான்.

புறநோய்ப் பிரிவு நோயாளிகளுக்கும், உள்ளிருப்பு நோய்ப் பிரிவு நோயாளிகளுக்குமாக மொத்தம் 25 கூடாரங்கள் உள்ளன. நோயாளிகளுக்கு 50 படுக்கைகள் உள்ளன. இந்தப் படுக்கைகளை எளிதில் மடக்கிக் கொள்ள இயலும்.

சமையலறை, சாப்பாட்டுக் கூடம், ஆய்வுக் கூடம், எக்ஸ்ரே நிலையம் அனைத்தும் உண்டு. யாவும் கூடாரங்கள்தான்.

இந்தக் கூடாரங்களில் கை கழுவும் பேசின், மின் விளக்குகள், மின் விசிறிகள் முதலியவை உண்டு. எளிதில் எடுத்துச் செல்லக் கூடிய ஆர். சி. டைப் மலம் கழிக்கும் அறைகள் உண்டு. இங்குள்ளோருக்குத் தண்ணீர் கொடுப்பதற்காக ஒரு மேல் நிலை நீர்த் தேக்கம் ஒன்று உள்ளது. இதனை இடம் பெயர்த்து எடுத்துக் கொண்டு செல்லலாம். மூன்று குதிரை ஆற்றல் உள்ள பம்ப் செட்டும் உள்ளது. இதன் உதவியால் தண்ணீரை மேல்நிலை நீர்த் தேக்கத்தில் தேக்கி வைத்துக் கொள்கிறார்கள்.

அறுவை அரங்கம் ஒன்று இருக்கிறது.

பல் நோய், நீரிழிவு, தொழு நோய், யானைக்கால் நோய் போன்ற நோய்களுக்கு இங்கு சிகிச்சை செய்யப்படுகிறது. பல்வகைப் பணிகளுக்கு உதவும் 'வேன்' ஒன்று உள்ளது. பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனமாகவும், ஆம்புலன்சாகவும் இது பயன்படுகிறது.

இது வரை நடைபெற்ற இரண்டு முகாம்களில் இடம் பெறாத கண், மூக்கு, தொண்டை மருத்துவப் பகுதி, இந்த மூன்றாவது முகாமில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதியில் அதிகம் பரவியுள்ள யானைக் கால் நோய்க்கு மருத்துவம் செய்யும் பகுதி இந்த முகாமில் பெரும்பணியாற்றத் தொடங்கியிருக்கிறது.

ஒரு முகாமை முடித்துக் கொண்டு மற்றொரு முகாமிற்குச் சென்று, கூடாரங்களையும் ஏனைய கருவிகளையும் இயங்க வைப்பதற்குச் சுமார் ஒரு இலட்ச ரூபாய் செலவாகிறது. அது மட்டுமல்ல—ஒரு முகாமில் இவ்வளவு காலம் பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளும் நிறைவேற்ற முடியாமல் போய் விடுகிறது.

கும்முடிப்பூண்டியில் தொடங்கப் பெற்ற முதல் முகாம்—அங்குள்ள மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தனது மூன்று மாத காலம் என்ற குறிக்கோளை ஒத்தி வைத்துவிட்டு, 9 மாத காலம் பணியாற்றியிருக்கிறது. அதுபோல், காட்டாங்குளத்தில் 7 மாத காலம் பணியாற்றியிருக்கிறது. இந்த முகாமும் 3 மாத காலம் என்றுதான் மருத்துவ அதிகாரிகள் கூறுகிறார்கள்—பொது மக்களின் வேண்டுகோள் எப்படி இருக்கப் போகிறதோ?

இந்த முகாமிற்குச் செவ்வாய் தோறும் கண் மருத்துவர்கள் வந்து பணிபுரிகிறார்கள்; இரண்டாவது சனிக்கிழமை தோறும் தோல் மருத்துவர் வருகிறார். காச நோய் வராமல் தடுப்பதற்கும், காச நோய் இருக்கிறதா என்று கண்டறிவதற்கும் எக்ஸ்ரே எடுப்பதற்குரிய சிறப்பு ஏற்பாடுகள் இங்கே உள்ளன. பள்ளி மாணவர்களின் உடல் பரிசோதனைத் திட்டமும் இங்கே நிறைவேற்றப்படவிருக்கிறது.

இந்த மூன்றாவது முகாமைத் துவக்கி வைத்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''ஒன்றிரண்டு நோய்கள் தவிர ஏனைய நோய்களுக்கு மருந்து கண்டு பிடித்திருக்கிறார்கள் மருத்துவர்கள். ஆகவே நோயாளிகள் அஞ்சத் தேவையில்லை. என்றாலும் மருந்து மட்டும் நோயைக் குணப்படுத்துவதில்லை. மருத்துவர்கள் சொல்கின்றபடி உணவு முறைகளையும் கையாளவேண்டும். மருத்துவரின் மருந்தைத் தோற்கடிப்பது நோயாளியின் இலட்சியமாக இருக்கக் கூடாது.

''இந்த முகாமில் வந்து பணியாற்றும் ஸ்டான்லி மருத்துவ மனை மருத்துவர்கள் இங்கு வர வேண்டும் என்ற அவசியம் இல்லை; அவர்கள், நோயாளிகளின் பஞ்சத்தினால் இந்தக் கிராமத்தை நாடி வரவில்லை. அவர்கள் இங்கு வந்து பணியாற்றுவதற்குரிய காரணம், புனிதத் தொண்டு செய்ய வேண்டும் என்ற அருள் நோக்கமே. மக்களுக்காக மருத்துவர்களே தவிர, மருத்துவர்களுக்காக மக்கள் அல்ல!''



உள்ளிருப்பு நோயாளிகள் பிரிவில் ஒரு குழந்தையை நல்வாழ்வுத் துறை அமைச்சர் பார்வையிடுகிறார்

''இந்த நடமாடும் மருத்துவ மனை உருவானதனால் நமது கிராம மக்களுக்கு, தங்கள் உடல் நலத்தைப் பேணிக் கொள்ளும் உணர்வு உருவாகியிருக்கிறது. இது மிகச் சிறந்த செயலாகும்.

முன்பெல்லாம் அதிகமான நோய் கண்டால், அடிக்கடி கோயிலுக்குச் செல்வார்கள். சைவர்கள் என்றாலும், வைணவர்கள் என்றாலும் அன்று நோய் கண்டால் ஆலயம் செல்வார்கள். ஆனால் இன்று அப்படியில்லை. திருமழிசை ஆழ்வார் வாழ்ந்த இடமென்றாலும் இங்கேயும் மருத்துவமனை தேவைப்படுகிறது. அன்று கடவுளின் மீது பாரத்தைப் போட்டு வந்தார்கள். இன்று மருத்துவர்களின் மேல் பாரத்தைப் போடுகிறார்கள். மருத்துவர்கள் சிகிச்சை வழங்க முடியுமே தவிர துணையாக இருக்க முடியாது. மக்கள்தான் தங்களது பொறுப்பை உணர்ந்து உயிர் நலம் பேணிக் கொள்ள வேண்டும்.

"An apple a day
Doctor is away"

என்பது மேல்நாட்டுப் பழமொழி. தினமும் உணவுப் பொருட்களுடன், பழமும் சாப்பிட்டு வந்தால் ரத்தம் சுத்தப்படுகிறது. மருந்து கால் பங்கு, உண்ணும் உணவு முக்கால் பங்கு என்பது நம்மவர்கள் அடிக்கடி சொல்லும் வாசகம்.

இன்று பல நோய்கள், வராமலேயே தடுத்துவிட முடியும் என்கின்ற அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. அம்மை வராமல் இருக்க தடுப்பு ஊசி போடப்படுகிறது. காலராவைத் தடுப்பு ஊசியினால் கட்டுப்படுத்துகிறோம்.

இந்தத் தடுப்பு முறைக்குத் தமிழக அரசு தீவிர முயற்சி செய்து வருகிறது. அண்மையில் காஞ்சிபுரத்தில் காலரா கண்டிருப்பதாகத் தெரிந்து அறுபதாயிரம் பேருக்குத் தடுப்பு ஊசி போடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் திருப்பூரில் பிளேக் பரவத் தொடங்கியது. அது உடனடியாகத் தடுப்பு ஊசியால் தடுக்கப்பட்டு விட்டது. இவ்வாறு அவசரத்துக்குப் பயன்படக் கூடிய அளவு திறமை நம்மிடம் இருக்கிறது. அகில இந்தியாவில், தமிழ்நாட்டைப் போலச் சமாளிக்கும் ஆற்றல் வேறு எந்த மாநிலத்துக்கும் இல்லை.

தமிழ்நாடு அரசு, மருத்துவத் துறைக்கு, ஆண்டொன்றுக்கு 35 கோடி செலவிடுகிறது. மொத்த வருமானத்தில் இது $8\frac{1}{4}$ சதவிகிதம். அதாவது ஒரு தனி நபருக்கு ரூ. 8 செலவாகிறது; என்றாலும் இது போதுமானதாக இல்லை.

தற்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இரண்டு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டிய நிலை உள்ளது. இதற்கு மத்திய அரசின் உதவியை நாடி இருக்கிறோம்.

பரங்கிமலையில் தானே விரும்பிச் செய்யும் சுகாதாரத் தொண்டு (Voluntary Health Service) என்று ஒரு திட்டம் தொடங்கப் பெற்றிருக்கிறது. 100 ரூபாய் மாத வருமானம் உள்ள ஒருவர், மாதத்திற்கு 50 காசு கொடுத்தால் போதும். அவர்கள் ஒரு குடும்ப அட்டை (Family Card) தருகிறார்கள். குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு, அவர்களுக்கு அவ்வப்போது வருகின்ற நோய்களை அறிந்து மருந்து தருவார்கள். இதுபோன்ற திட்டம் அவினாசி வட்டம், ஈரோடு அருகில், பவானி வட்டம் ஆகிய பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இது போன்ற திட்டங்கள் எல்லா உட்பிரிவுகளிலும் உருவானால், மிகவும் நல்லது.

தமிழக அரசு மக்கள் நலம் நாடும் அரசு. நல் வாழ்வு நடத்த வேண்டும், என்ற தூய எண்ணம் மக்களிடம் பரவ வேண்டும் என்ற எண்ணத்துடன் பணியாற்றி வருகிறது. இதனை இந்த வட்டாரத்து மக்களும் உணர்ந்து, அரசு தரும் திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்து இந்த நடமாடும் மருத்துவ மனையை நல்ல விதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்''.

இந்த விழாவின் போது, அனைவரையும் வரவேற்றுப் பேசிய ஸ்டான்லி மருத்துவ மனையின் முதல்வர், "பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்'' என்று குறிப்பிட்டார்.

இந்த நடமாடும் மருத்துவ மனையின் முக்கிய நோக்கங்கள் மூன்று:

1. கிராமப்புறத்து மக்கள் வாழும் பகுதியில் அவர்களின் இல்லங்களுக்கே மருத்துவ உதவிகளைக் கொண்டு செல்வது.

2. எங்கெங்கு தடுக்க முடிகிறதோ அங்கெல்லாம் நோய் வராது தடுப்பது.

3. கிராம மக்களின் அறியாமையை நீக்கி அவர்களுக்குக் கல்வியுணர்வு தருவது.

இந்த மூன்று குறிக்கோள்களும் கொண்டிருக்கும் 'சித்தரஞ்சன் நடமாடும் மருத்துவ நிலையம்' எதிர்காலத்தில் எத்தனையோ முகாம்கள் இடப் போகின்றது. கிராமப் புறத்து மக்களின் இதயத்தில் நீங்காத இடம் பெறப் போகின்றது என்பது உறுதி.



வெளிநாட்டார் போற்றும்
வியன்பொருள்
கலைக்கூடம்





# குறளகம்

கதர் கைத்தொழில் அங்காடி, சென்னை-1

கைவண்ணப் பொருள்களின்
களஞ்சியம்









20461
20462 20463
20464 20465

# குறுவைச் சாகுபடிக் குறிப்புகள்

“பருவத்தே பயிர் செய்!” என்ற பழமொழிக்கு ஏற்பப் பருவத்திலேயே, பருவத்திற்கேற்ற ரகத்தைப் பயிரிட்டால் பயன்மிகப் பெறலாம். ஆனி பிறந்து விட்டது! தமிழகமெங்கும் உழவர் பெருமக்கள் குறுவைச் சாகுபடி செய்யத் தண்ணீரை எதிர்பார்த்துத் தயாராக இருப்பார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்க அயராது உழைத்துவரும் உழவர் பெருமக்களுக்கு இந்த நேரத்திலே, குறுவைச் சாகுபடிக் குறிப்புகளைத் தெரிவித்தால், உழவர் பெருமக்களுக்கு அவை உறுதுணையாக அமையும் என்று கருதியே, கீழ்க்கண்ட சாகுபடிக் குறிப்புகளைக் காணிக்கையாகப் படைத்துள்ளோம்.

### குறுவைக்கேற்ற ரகங்கள்

குறுவைப்பட்டத்தில் ‘ஐ.ஆர். 8’, ‘ஜெயா’, ‘ஐ. ஆர். 20’ போன்ற நடுத்தரக் கால உயர் விளைச்சல் தரும் ரகங்களையும், ‘கருணு’, ‘ஆடுதுறை-27’, ‘கோ-29’, ‘காஞ்சி’ ‘காவேரி’ போன்றகுறுகிய கால உயர் விளைச்சல் ரகங்களையும் பயிரிடுவதே அதிக மகசூல் பெறுவதற்கு வழி கோலும். உங்களுக்கு இருக்கும் தண்ணீர்வசதிக்கும், நிலத்தின் தன்மைக்கும், நீங்கள் அடுத்துப் பயிரிடவிருக்கும் பயிருக்கும் ஏற்ப மேற்கூறிய ரகங்களில் உங்களுக்குத் தகுந்தவற்றைக் கீழே குறிப்பிட்டுள்ள ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு பயிரிட்டால் குறுவையில் அதிக மகசூல்பெற்று அதிக வருவாய் அடையலாம்.

### ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

| ரகத்தின் பெயர். | வயது (நாட்கள்) |
|---|---|
| ஐ. ஆர். 8. | 130 முதல் 135 |
| ஜெயா | 125 முதல் 130 |
| ஐ. ஆர். 20 | 135 |
| கருணு | 108 |
| ஆடுதுறை-27 | 105 |
| கோ-29 | 110 முதல் 115 |
| காஞ்சி | 115 முதல் 120 |
| காவேரி | 110 முதல் 115 |

### நாற்றுவிட வேண்டிய காலம்

| | |
|---|---|
| ஐ. ஆர். 8<br>ஜெயா | ஜூன் 30-ஆம் தேதிக்குள் (ஆனி 17). |
| ஐ. ஆர். 20 | ,, |
| கருணு<br>ஆடுதுறை-27.<br>காஞ்சி<br>கோ-29<br>காவேரி | ஜூன் 15-ஆம் தேதி (ஆனி 2) முதல் ஜூலை 15-ஆம் தேதிக்குள் (ஆனி 32) நாற்று விடுவது மிகச் சிறந்தது. |

மழைக்கு முன் அறுவடை செய்ய ஜூன் 30-ஆம் தேதிக்குள் (ஆனி 17) நாற்று விடவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஜூலை 27 (ஆடி 12) ஆம் தேதிக்குப் பிறகு நாற்று விடுதல் நல்லதல்ல.

### விதையளவு

ஒரு ஏக்கர் நடவுசெய்ய 18 கிலோ விதையை நாற்று விட வேண்டும். தரமான விதைகளை வேளாண்மைத் துறையிலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

### விதையுடன் மருந்து கலக்குதல்

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் ‘அக்ரசான்’ அல்லது ‘செரசான்’ அல்லது ‘திராம்’ அல்லது ‘காப்டான்’ அல்லது ‘டீ. எம். டீ. டி.’ மருந்து வீதம் கலந்து விதை கலக்கும் கருவியில் இட்டுச் சுற்றி, மருந்து விதைகளுடன் நன்கு கலக்குமாறு செய்யவும்.

### நாற்றங்கால் தயாரித்தல்

ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் நிலத்தில் நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். நாற்றங்காலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்க வேண்டும். 12 சென்ட் நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எரு அல்லது ஒரு வண்டி தழை எரு வீதம் இடவேண்டும். நாற்றுகளைப் பறிக்கும் போது வேர்கள் அறுந்து விடாமல் பறிக்க இவ்வாறு எருவிடுதல் அவசியம். நாற்றங்காலை ஒவ்வொன்றும் ஒரு சென்ட் (54'× 8') பரப்புள்ள 12 பாத்திகளாகப் பிரித்துக் கொண்டு, அவைகளை மேடைப் பாத்திகளாக ( Raised beds ) அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். புழுதி நாற்றங்கால் அமைத்தலும் சிறந்தது.

### விதைத்தல்

ஒவ்வொரு மேடைப்பாத்திக்கும் 1½ கிலோ அளவு விதைகளை விதைக்க வேண்டும். மூன்றுங்கொம்பு விதைகளை விதைப்பது நல்லது. புழுதி நாற்றங்காலில் விதைகளை முளைக்க வைக்காமல் நேரடியாக விதைக்க வேண்டும்.

### நடவு வயல் தயாரித்தல்

நடவுவயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்க வேண்டும். ‘பில்லிப்பசரா’ போன்ற பசுந்தாள் உரப்பயிர் வளர்ந்துள்ள



நிலமாக இருந்தால் அப்படியே இரும்புக் கலப்பையால் உழுது விட்டுப் பின்னர், 'பர்மிய செட்டுன்' அல்லது தழைமிதிக்கும் கருவிகொண்டு அழுத்தி உழவு செய்யவும். கூண்டுச் சக்கரம் ( Cage Wheel ) இணைக்கப்பட்ட டிராக்டரைக் கொண்டு உழுது, நிலத்தின் குறுக்கும் நெடுக்குமாக இருமுறை உழவு செய்து, பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப்படுத்தவும்.



### அடியுரமிடுதல்

அதிக மகசூல் பெருவதற்குத் தேவையான அளவு தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது தழை எருக்களையும், இரசாயன உரங்களையும் இட வேண்டும். பொதுவாக மேற்கூறிய எல்லா ரகங்களுக்கும் ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது 10 வண்டி கம்போஸ்ட் எரு அல்லது 5 வண்டி (2,300 கிலோ) பசுந்தழை அல்லது பசுந்தாள் உரம் இட்டு, உழுது சேற்றுடன் கலக்குமாறு செய்ய வேண்டும்.

மண்ணின் தன்மைக்கும் ரகத்திற்கும், ஏற்ப உரமிடுவதே நல்லது. மண் பரிசோதனை செய்து, சோதனை முடிவில் குறிப்பிட்ட அளவில் உரமிடுவதே அதிக மகசூலுக்கு வழிவகுக்கும். மண் பரிசோதனை செய்து, அதன்படி இரசாயன உரமிடமுடியாத உழவர்கள் வேளாண்மைத் துறையினர் ரகத்திற்கு ஏற்பப் பொதுவாகப் பரிந்துரைக்கும் அளவில் இரசாயன உரமிடவேண்டும்.

அடியுரமாக இரசாயன உரமிடுவதை ரகத்திற்கும், மாவட்டத்திற்கும் பரிந்துரைக்கப்படும் அளவில் இட வேண்டும். ஆகவே, கீழே ரகத்திற்கு ஏற்பப் பொதுவான ஓர் உர அளவும், தஞ்சை மாவட்டத்திற்கெனத்தனியே ஓர் அளவும் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவான உர அளவைத் தஞ்சை மாவட்டம் தவிர்த்த மற்ற மாவட்டங்களில் பயன்படுத்த வேண்டும். ஆனால், தஞ்சை மாவட்ட உழவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ள உர அளவிலேயே இரசாயன உரங்களை இட வேண்டும்.

### ''ஐ. ஆர். 8'', ''ஜெயா'' ரகங்களுக்குப் பொதுவான உர அளவு

கடைசி உழவில் ஏக்கருக்கு 35 கிலோ மணிச்சத்தும், 35 கிலோ சாம்பல் சத்தும் அடியுரமாக அளிக்கப்பட வேண்டும். ஏக்கருக்கு இந்த அளவு சத்துக்களை அளிக்க, கடைசி உழவில் பின்கண்ட அளவில் இரசாயன உரங்களை இட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் 220 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 60 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 45 கிலோ தழைச்சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியா உரத்தை அடியுரமாக இடவேண்டும்.

### தஞ்சை மாவட்டத்தில் ''ஐ. ஆர். 8'', ''ஜெயா'' ரகங்களுக்கான உர அளவு

தஞ்சை மாவட்டத்தில் ''ஐ. ஆர். 8'', ''ஜெயா'' ரகங்களைப் பயிரிடக் கடைசி உழவிற்கு முன், ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க வேண்டும். உரங்களைக் குறைந்த செலவில் அளிக்கப் பின்கண்ட உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழுதுவிடவேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட் 54 கிலோ.

யூரியா 44 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 42 கிலோ.

### ''ஐ. ஆர். 20'' ரகத்திற்குப் பொதுவான உர அளவு

''ஐ. ஆர். 20'' ரகத்திற்குக் கடைசி உழவில் ஏக்கருக்கு 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து வீதம் அளிக்கப் பின்கண்ட அளவு இரசாயன உரங்களை அடியுரமாக இட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் 155 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 42 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து அளிக்க 150 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 65 கிலோ யூரியாவைப் போட வேண்டும்.

### தஞ்சை மாவட்டத்தில் ''ஐ. ஆர். 20'' ரகத்திற்கான உர அளவு

தஞ்சை மாவட்டத்தில் ''ஐ. ஆர். 20'' ரகம் பயிரிட ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவு சத்துக்களை அளிக்கவும், குறைந்த செலவில் உரமிடவும் பின்கண்ட அளவு இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழுது விட வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட் 35 கிலோ

யூரியா 20 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 25 கிலோ

"கருணா" ரகத்திற்குப் பொதுவான உர அளவு.

"கருணா" ரகத்திற்கு ஏக்கருக்கு 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாகக் கடைசி உழவில் இட, பின் கண்ட அளவு உரமிடுதல் வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் 155 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 42 கிலோ

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து அளிக்க, 150 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 65 கிலோ யூரியாவை அடியுரமாக இடவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் "கருணா" ரகத்திற்கான உர அளவு

தஞ்சை மாவட்டத்தில் "கருணா" பயிரிட அடியுரமாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து, ஆகியவைகளை அளிக்கவும், இச்சத்துக்களைக் குறைந்த செலவில் இடவும் கீழ்க்கண்ட அளவில் இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்குமுன் இட்டு உழுதுவிட வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட் 35 கிலோ.

யூரியா 20 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 25 கிலோ.



"ஆடுதுறை-27", "கோ-20" ரகங்களுக்கும் பொதுவான உர அளவு

கடைசி உழவில் ஏக்கருக்கு 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்கப் பின்கண்ட அளவில் உரமிட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் 130 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 23 கிலோ

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 17 கிலோ தழைச்சத்து அளிக்க 85 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 37 கிலோ யூரியாவை இட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் "ஆடுதுறை-27" ரகத்திற்கான உர அளவு

தஞ்சை மாவட்டத்தில் "ஆடுதுறை-27" ரகத்திற்கு அடியுரமாக ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க வேண்டும். இந்த அளவில் சத்துக்களை அளிக்கவும், குறைந்த செலவில் உரமிடவும் பின்கண்ட அளவில் இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழ வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட்—45 கிலோ.

யூரியா—14 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 24 கிலோ.

"காஞ்சி", "காவேரி" ரகங்களுக்குப் பொதுவான உர அளவு

கடைசி உழவில் ஏக்கருக்கு 21 கிலோ மணிச்சத்து, 21 கிலோ சாம்பல் சத்து அளிக்கப் பின் கண்ட அளவு உரமிட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட் 130 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ் 35 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 27 கிலோ தழைச்சத்து அளிக்க 135 கிலோ அமோனியம் சல்பேட், அல்லது 60 கிலோ யூரியாவை இட வேண்டும்.

நாற்றங்காலுக்கு மருந்து தெளித்தல்

நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்னதாக 18 சென்ட் நாற்றங்காலுக்கு 24 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 24 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

நாற்றின் வயது

அதிக வயதுடைய நாற்றுகள் நல்ல பலன் அளிக்காது. எனவே, நாற்றுகளைக் குறிப்பிட்ட நாட்களுக்குள் பறித்து நட்டுவிட வேண்டும். நெல் ரகத்திற்கு ஏற்பக் கீழே குறிப்பிட்ட நாட்களில் நாற்றைப் பறித்து நட்டுவிட வேண்டும்.

| ரகத்தின் பெயர் | நாட்கள் |
|---|---|
| ஐ. ஆர். 8, ஜெயா — — | 26 முதல் 28 |
| கருணா — — — | 24 முதல் 26 |
| ஆடுதுறை-27, கோ-29 — | 24 முதல் 25 |
| காஞ்சி, காவேரி — — | 22 முதல் 25 |
| ஐ. ஆர். 20 — — | 25 முதல் 28 |

' தபாக் ' முறையில் நாற்றுவிட்டால், நாற்று விட்ட 14-ஆம் நாளே நாற்றைப் பறித்து நடவு செய்ய முடியும்.

### நடவும் இடைவெளியும்

நாற்றுகளைக் கூடுமானவரை வரிசை வரிசையாக நடவு செய்ய வேண்டும்.

களிமண் நிலங்களில் வரிசைக்கு வரிசை 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட வேண்டும்.

மணற் பாங்கான நிலத்தில் வரிசைக்கு வரிசை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டர் ( 4 அங்குலம்) இடைவெளியும் விட வேண்டும். இரண்டு, இரண்டு பயிர்களாக வைத்து நடுவதே சிறந்தது.

### களையெடுத்தல்

நாற்று நட்ட 15-ஆம் நாளும், 30-ஆம் நாளும் இடை உழவுக் கருவியால், (Intercultivator) பயிர் வரிசைகளுக்கிடையில் மண்ணைக் கிளறிவிட்டுக்களையெடுக்கவும் வரிசையில் பயிர்களுக்கு இடையில் உள்ள களைகளைக் கைகளால்பிடுங்கி அப்புறப்படுத்தவும். ஐ. ஆர். 8, ஜெயா, ஐ. ஆர். 20 ரகங்களுக்கு நாற்று நட்ட 40-ஆம் நாள், 2-ஆம் களையெடுத்தால் போதுமானது.



### மேலுரமிடுதல்

பொது :—ஐ. ஆர். 8, ஜெயா ரகங்களுக்கு நடவு செய்த 21-ஆம் நாள் முதல் முறையாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 3 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும். நடவுசெய்த 49 நாளிலிருந்து 54 நாளுக்குள் அதாவது தண்டு உருளும் தருணத்தில் இரண்டாம் முறையாக ஏக்கருக்கு, 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும்.

ஐ. ஆர். 20 ரகத்திற்கு நடவுசெய்த 21-ஆம் நாளில் ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். நடவு செய்த 40 முதல் 42 நாளில் இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து அளிக்க 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

கருணை ரகத்திற்கு நடவுசெய்த 21-ஆம் நாள் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 100 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 44 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

ஆடுதுறை-27, கோ-29 ரகங்களுக்கு நடவு செய்த 21-ஆம் நாளில் ஏக்கருக்கு 11 கிலோ தழைச்சத்து அளிக்க 55 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 25 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

காஞ்சி, காவேரி ரகங்களுக்கு நடவு செய்த 21-ஆம் நாள் ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து அளிக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்:—ஐ. ஆர். 8, ஜெயா ஆகிய ரகங்களைப் புதிய ஆற்றுப் பாசனப் பகுதியில் நட்டிருந்தால் நடவு செய்த 15-ஆம் நாள் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். நடவு செய்த 50-55 நாட்களில் இரண்டாம் தடவையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். பழைய ஆற்றுப் பாசனப் பகுதிக்கு நடவுசெய்த 50-55 நாட்களில் (தண்டு உருளும் தருணம்) ஒரே தவணையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை இடவும்.

ஐ. ஆர். 20 நட்டிருந்தால் புதிய ஆற்றுப்பாசனப் பகுதியில் நடவு செய்த 15-ஆம் நாள் ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து அளிக்க 22 கிலோ யூரியாவையும், நடவுசெய்த 50-55நாட்களில் ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து அளிக்க 22 கிலோ யூரியாவையும் மேலுரமாக இட வேண்டும். பழைய ஆற்றுப்பாசனப் பகுதியில் நடவு செய்த 50-55 நாட்களில் ஒரே தவணையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும்.

கருணை ரகம் பயிரிட்டிருந்தால் நடவு செய்த 15-ஆம் நாள் முதல் தடவையாக 8 கிலோ தழைச்சத்து அளிக்க 18 கிலோ யூரியாவையும், நடவு செய்த 30-ஆம் நாள் 2-ஆம் தடவையாக ஏக்கருக்கு 8 கிலோ தழைச்சத்து அளிக்க 18 கிலோ யூரியாவையும் மேலுரமாக இடவும்.

### பயிர்ப் பாதுகாப்பு

நடவு செய்த 15-ஆம் நாள் வருமுன் தடுப்பாக (Prophylactic treatment) ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பாரத்தியானை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து (10 பெரிய மண்ணெண்ணெய் டின் அளவு) கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் பயன்படுத்துவதனுல் ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பாரத்தியானை 40 முதல் 60 லிட்டர் தண்ணீரில் (2 முதல் 3 பெரிய மண்ணெண்ணெய் டின் அளவு) கலந்து தெளிக்க வேண் வேண்டும்.

நடவு செய்த 30-ஆம் நாள் மேற்கூறிய அளவு மருந்துடன், 200 கிராம் டைத்தியோ கார்பேட் மருந்தையும் கலந்து தெளிக்க வேண்டும்.

தண்டு உருளும் தருணத்திலேயும், நடவு செய்த 15-நாள் தெளித்தது போலவே, தெளிக்க வேண்டும்.

நெற்பூவில் பால் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதத்தூளைத் தூவி விடவேண்டும்.

எனவே, மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு பெரும்பயன் அடையுமாறு குறுவைச் சாகுபடி செய்யும் உழவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

எறும்பு சேமிக்கிறது.

தேனீ சேமிக்கிறது. ஆனால், நாம் சேமிக்கிறோமா?

# எதிர்கால வாழ்வுக்கு எளிதான வழி



இந்த வினாவை ஒவ்வொருவரும் கேட்டுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அதற்கு விடை கிடைக்கும். நூறு காசு சம்பாதிப்பவன் ஆறு காசு சேமிக்கலாம்; சேமிக்க முடியும். 'முடியாது என்பது என் அகராதியில் இல்லை' என்றான் ஒரு வீரன். அதைப்போல மனிதனால் எதையும் சாதிக்க முடியும். முயற்சியும் உழைப்பும் இருந்தால் வெற்றி கிட்டுவது உறுதி.

சேமிப்பது என்பது ஒரு கலை; அக்கலை நிலையாக வர முயன்றால், வாழ்க்கையும் நிலை பெற்றுத் திகழும். வரவுக்கு மீறிச் செலவு செய்வதைவிட, வருவது அறிந்து செலவைக் குறைப்பதுதான் புத்திசாலித்தனம். 'சிக்கனம் இருந்தால் யாவரும் செல்வராகலாம்.' என்று மேலை நாட்டு அறிஞர் ஒருவர் சொன்னது பொய்யில்லை.

பெரிய குடும்பமானாலும் சரி, சிறிய குடும்பமானாலும் சரி சேமிக்கும் பழக்கம் அவர்களிடையே இருந்தால், அந்தக் குடும்பத்தின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நம் நாட்டில் சேமிப்பை ஊக்குவிக்க அஞ்சலகச் சேமிப்பு வங்கிகள், மற்றும் அரசுரிமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவை அயராது செயல்படுகின்றன. இவற்றுள், ஒரு சிறு கிராமக் குடிமகனும் எளிதாகச் சேமிக்க உறுதுணை புரிந்து சிறந்த முறையில் பல சலுகைகள் அளிப்பது அஞ்சலகச் சேமிப்பு வங்கியே. அஞ்சலகம் இல்லாத இடமே இல்லையென்று கூறலாம். பேரூர்களிலும், நகரங்களிலும்தான் வங்கிகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஆதலால், மிகச் சிறிய கிராமத்திலும் சேமிக்கும் ஆர்வமுள்ளவர்களின் தேவைகளைச் செவ்வனே பூர்த்தி செய்து பெரும் பயன்தரும் அஞ்சலக வங்கியில் சேமிப்பது சாலச் சிறந்தது.

அஞ்சலகத்துடன் பலவிதங்களில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள நாம் சேமிப்புக்கென்று தனியே ஓரிடத்தை நாடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. மேலும், அஞ்சலகச் சேமிப்பு வங்கி மூலம் சேர்க்கப்படும் மொத்தச் சிறு சேமிப்புத் தொகையில் 2/3 பங்கு ஒவ்வோர் ஆண்டும் அந்தந்த மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மேற்கொண்டுள்ள மாபெரும் ஆக்கப் பணிகளை ஊக்குவிக்க அஞ்சலக வங்கி மூலம் சேர்க்கப்படும் சிறு சேமிப்புத் தொகை பேருதவியாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் எவ்வயதினரும் பணம் சேர்க்கலாம். தனி நபரோ இருவர் அல்லது மூவர் கூட்டாகவோ சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கலாம். தனி நபருக்கும், கூட்டுச் சேமிப்புக்கும் முறையே ரூ. 25,000, ரூ. 50,000 உச்ச வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்து கொண்ட சங்கங்கள், நிறுவனங்கள், சொந்தமாகத் தொழில் நடத்துபவர் ஆகியோரும் சேம நிதித் தொகைகளைத் தங்கள் நிறுவனங்கள் பேரில் முதலீடு செய்யலாம்.

அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் முதலீடு செய்யப்படுகின்ற தொகைக்கு 1971, சனவரி 1 முதல் 4 சதவிகிதம் உயர் வட்டி வழங்கப்படுகிறது. மேலும், நிதியாண்டு முழுவதும் குறைந்தது ரூ. 100 சேமிப்புக் கணக்கில் இருந்தால் 4½ சதவிகிதம் வட்டியும், ''அடைப்பு வைப்புத் தொகை'' திட்டத்தின் மூலம் 4½ சதவிகிதம் வட்டியும் பெறலாம். இவை சேமிப்புக்குக் கிடைக்கும் மிக உயர்ந்த வட்டி விகிதங்களாகும்.

சேமிப்புப் பழக்கத்தை வளர்க்கவும், முதலீடு செய்பவருக்கு மேலும் ஊக்கமளிக்கவும், 'அடைப்புவைப்புத்தொகைத்திட்டம்' (Blocked Deposit Scheme) அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் இயங்கி வருகிறது இத் திட்டத்தின் கீழ் சேமிப்பில் குறைந்தது ரூ. 100 அல்லது அதன் பெருக்குத் தொகைகளை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு எடுக்காமல் இருப்பதாக அஞ்சலக அதிகாரிக்கு எழுதித் தெரிவித்துக் கொண்டால் 4½ சதவிகிதம் வட்டி வழங்கப்படுகிறது. இதன் மூலம் ரூ. 100 இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ரூ. 109.20 ஆகவும், மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ரூ. 144 ஆகவும் வளருகிறது. ''அடைப்பு வைப்புத் தொகை'' போகக் கணக்கில் மீதியுள்ள பணத்திற்கு 4½ சதவிகிதம் அல்லது 4 சதவிகிதம் வரையில் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு வட்டி கிடைக்கும்.

முதலீட்டைக் 'காசோலை' (செக்) மூலம் பெறவும் வசதியுள்ளது. கணக்கில் ரூ. 100-க்கு மேலிருந்தால், காசோலை மூலம் பற்று, வரவு வைத்துக் கொள்ளலாம். ஆனால்வைத்துள்ள கணக்கில் எப்போதும் ரூ. 50-க்கு குறையாமல் இருப்பு இருக்க வேண்டும். காசோலைப் புத்தகத்தை அஞ்சலகத்தில் கிடைக்கும் விண்ணப்பத்தாளைப் பூர்த்தி செய்து கொடுத்து இலவசமாகப் பெறலாம். காசோலைக்கு உடனுக்குடன் இரசீது கொடுக்கப்படும். பணமாக்கிய தேதியில் முதலீடு செய்பவரின் கணக்கில் வரவு வைக்கப்படும். உள்ளூர் காசோலைகளைப் பணமாக்க அஞ்சலகம் கட்டணம் வசூலிப்பதில்லை. வெளியூர் காசோலைகளுக்கு மட்டும் நூற்றுக்குப் பத்து காசு வீதம் (குறைந்த அளவு ஒரு ரூபாய், அதிக அளவு ஐந்து ரூபாய்) கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

அஞ்சலகச் சேமிப்பு வங்கியின் மூலம் கிடைக்கும் வட்டிக்கு வருமான வரி கிடையாது. அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் முதலீடு செய்யப்படும் இதர சிறு சேமிப்புத் திட்டங்களுடன் சேர்த்த மொத்த மதிப்பீடு ரூ. 1,50,000 வரை செல்வ வரி விலக்கு உண்டு.

சேமிப்பிலிருந்து எப்பொழுது வேண்டுமானாலும், எவ்வளவு தொகை வேண்டுமானாலும் (அடைப்பு வைப்புத் தொகையின் கீழ் முதலீடு செய்யப்பட்டிருக்கும் தொகை தவிர) எத்தனை முறை வேண்டுமானா

லும் பணம் எடுக்கலாம்.

சேமிப்புக் கணக்கை ஒரு அஞ்சலகத்திலிருந்து நாட்டிலுள்ள எந்த அஞ்சலகத்திற்கு வேண்டுமானாலும் கட்டணமெதுவுமின்றி மாற்றிக் கொள்ளலாம். கணக்கு வைத்திருப்பவர் ஒருவர் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டோரைப் பணம் பெற நியமனம் செய்திருந்தால், அவர் மரணமடைய நேர்ந்தால், பணம்பெற நியமிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதத் தாக்கீதும் இல்லாமல் பணம் உடனடியாக வழங்கப்படும்.

### கணக்கை எப்படி ஆரம்பிப்பது ?

சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பது மிக மிகச் சுலபம். எல்லா அஞ்சலகங்களிலும் கிடைக்கும் இலவச விண்ணப்பத்தாளைப் பூர்த்தி செய்து குறைந்த செலவுத் தொகையான ரூபாய் ஐந்துடன் அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் கொடுக்க வேண்டும். கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு பற்று, வரவுப் புத்தகம் (பாஸ் புத்தகம்) கொடுக்கப்படும்.

### பொது சேம நிதித் திட்டம்

அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரிபவர் தங்கள் ஊதியத்திலிருந்து ஒரு சிறு தொகையை மாதா மாதம் வருங்காலச் சேம நிதிக்குக் கட்டாயமாகச் செலுத்தி வருகின்றனர். இத்தொகை அவர்கள் ஓய்வு பெறுகின்ற காலத்தில் வட்டியுடன் கூடி ஒரு கணிசமான தொகையாகத் தரப்படுகிறது. பல ஆண்டுகள் சேவைக்குப் பிறகு, ஓய்வு பெறும் காலத்தில் நிம்மதியான வாழ்க்கை நடத்துவதற்கு இச் சேமநிதி பெரிதும் உதவுகிறது.

இத்தகைய ஒரு வசதி சொந்தமாகத் தொழில் நடத்துபவர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதுவரை இல்லாதிருந்தது, ஒரு பெரும் குறையாகவே இருந்து வந்தது. சேமிக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் சேமித்து வைத்திருந்த பணத்தைஎடுத்துச்செலவுசெய்து விடுகிறோம். இக் குறையைப் போக்கவே பொது மக்கள் அனைவருக்கும் பயனளிக்கக் கூடியவகையில், 15 ஆண்டு பொது சேம நிதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டின் தனிச்சிறப்பு**

இந்தியாவிலேயே, தமிழ் நாட்டில்தான் பிற்பட்டோர் நலத்துறை என்ற ஒரு துறை இருக்கிறது. அந்தத் துறைக்கென ஓர் அமைச்சர் நியமிக்கப்பட்டிருப்பதும் தமிழ் நாட்டில்தான். வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது.

சேமநிதி கணக்கை வயது வந்த யார் வேண்டுமானாலும் அவர் பேரிலாவது அல்லது வயது வராத ஒருவர் பேரிலாவது துவக்கலாம். இத் திட்டம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எல்லாக் கிளை அலுவலகங்கள் மற்றும் துணை நிறுவனங்கள் ஆகியவற்றில் மட்டுமே இயங்கி வருகிறது. கணக்கைத் துவக்கியவுடன் ஒரு சேமிப்புப் புத்தகம் (பாஸ் புத்தகம்) தரப்படுகிறது. இதில் எல்லாப் பற்று-வரவு விவரங்களும் அவ்வப்போது குறிக்கப்பட்டு வருகின்றன.

இது ஒரு 15 ஆண்டுக் கணக்கு. நீங்கள் செலுத்தி வந்த முதலீடும் அதற்கு வட்டியும் சேர்ந்து 15 ஆண்டுகள் இறுதியில், அரசுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகை ஏதாவது இருந்தால் அது போக, மீதி திரும்பக் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக, நிதியாண்டு 1971-72-ல் ஒரு சேம நிதிக் கணக்கை ஆரம்பித்திருந்தால், 1-4-1987க்குப் பிறகு சேமிப்பிலிருக்கும் முழுத் தொகையையும் வட்டியுடன் சேர்த்துப் பெறலாம். காலவரைக்குப் பிறகும் விரும்பினால், சலுகைகளில் எவ்வித இழப்பும் இல்லாமல் கணக்கைத் தொடரலாம்.

இத்திட்டத்தில் ரூபாய் ஐந்து அல்லது அதன் பெருக்குத் தொகைகளில் வரையறையின்றி முதலீடு செய்யலாம். ஆனால், ஒரு குறிப்பிட்ட நிதி ஆண்டில் (ஏப்ரல்-மார்ச்சு) செலுத்தப்படுகின்ற தொகை ரூ. 100க்குக் குறைவாகவோ அல்லது ரூ. 15,000க்கு அதிகமாகவோ இருக்கக்கூடாது.

இத் திட்டத்தின் தனிச் சலுகை என்னவெனில், ஒரு குறிப்பிட்ட நிதியாண்டில் அவரவர் வசதிக்கேற்ப எவ்வளவு தொகை வேண்டுமானாலும், எத்தனைத் தவணைகளில் வேண்டுமானாலும் செலுத்தலாம். அந்த நிதியாண்டில் நீங்கள் கட்டவேண்டிய மொத்தத் தொகையையும் ஒரே தவணையிலும் கட்டலாம்.

முதலீட்டுத் தொகைக்கு அரசினரால் அவ்வப்போது அறிவிக்கப்படும் வட்டி விகிதம் அளிக்கப்படுகிறது. தற்போது 5 சத விகிதம் கூட்டு வட்டி அளிக்கப்படுகிறது. வட்டிக்கு வருமான வரியும் செல்வ வரியும் கிடையாது.

கணக்குத் தொடங்கி மூன்று ஆண்டுகள் கழிந்த பிறகு முதன் முதலாகக் கடன் வாங்கலாம். நீங்கள் கடன் கேட்கும் தேதிக்கு முந்திய மார்ச்சு மாதம் 31-ஆம் நாள் உங்கள் கணக்கில் உள்ள முதலீட்டுத் தொகையில், 25 சத விகிதம் அதிக அளவுத் தொகை பணமாகக் கிடைக்கும். கடனை 2 சத விகிதம் சாதாரண வட்டியுடன் 24 மாதத் தவணைகளில் திரும்பச் செலுத்த வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால் கட்டப்படவேண்டிய கடன் தொகைமீது 6 சத விகிதம் வட்டி வசூலிக்கப்படும். முதலில் வாங்கிய கடன், வட்டியும் முதலுமாகத் திருப்பிச் செலுத்தபட்ட பிறகு நீங்கள் இரண்டாவது கடன் பெறலாம். கணக்கைத்தொடங்கி 5 ஆண்டுகள் முடிவடைந்த பிறகு கடன் பெற இயலாது.

காலவரை முற்றுப்பெறும் முன்னரே (அதாவது 15 ஆண்டுகள் முடியுமுன்) சேமிப்புப் பணத்தைத் திரும்பப் பெற வசதி உண்டு. ஆனால், கணக்கைத் தொடங்கிய ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் முதலீட்டில் பாதித் தொகையைத் திரும்பப் பெறலாம். முதல் முறை பணம் எடுத்த மூன்றாண்டுகளுக்குப் பிறகு, தேவைப்பட்டால், மறுமுறை பணம் எடுக்கலாம்.

பணம் போட்டிருக்கும் வங்கியில் கிடைக்கக் கூடிய பணம் எடுக்கும் விண்ணப்பத்தாளைப் பூர்த்திசெய்து அதனுடன் பற்று, வரவு புத்தகத்தையும் கொடுக்க வேண்டும். பணம் பெற எக்காரணமும் காட்ட வேண்டிய அவசியமில்லை. கோரிக்கை வங்கியினால் உடனே ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பணம் கொடுக்கப்படும்.

இச் சேமநிதி மற்றும் ஆயுள் இன்சூரன்ஸ், அங்கீகரிக்கப்பட்ட சேமநிதி, 10 அல்லது 15 ஆண்டு வளரும் மாதச் சேமிப்புக் கணக்கு ஆகிய திட்டங்களில் முதலீடு செய்யும் மொத்தத் தொகைக்குக் கூட்டாகச் சேர்த்து வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

கீழ்க்கண்ட உதாரணத்தின் மூலம் வருமான வரி விலக்கு எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்று அறியலாம்.

ஒருவர் ஆண்டு வருமானம் ரூ. 20,000 ஆக இருப்பின் அவர் ரூ. 6,000 வரையில் (அதாவது அவர் ஆண்டு வருமானத்தில் 30 சத விகிதம்) மேற்குறிப்பிட்டுள்ள சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யலாம். இந்த ரூ. 6,000 சேமிப்புத் தொகையில் ரூ. 3,500 வரை வரி விலக்குக் கோரலாம். அதாவது சேமிப்புத் தொகையில் முதல் ரூ. 1,000 வரை 100 சத விகிதம் வரி விலக்கும், மீதமுள்ள ரூ. 5,000-க்கு 50 சத விகிதம் வரி விலக்கும் அளிக்கப்படுகிறது. வரிவிலக்குக் கோருவதற்குத் தேவையான சான்றிதழ் வங்கி அஞ்சல் மூலம் அனுப்பும். ஆதலால், சரியான முகவரியை வங்கிக்கு அவ்வப்போது தெரிவிக்க வேண்டும். கணக்கை ஸ்டேட் பேங்கின் எந்தக் கிளைக்கும் மாற்றிக் கொள்ள வசதி உள்ளது.

ஒருவர் தமக்குப் தம் சேமிப்பை யாருக்கு அளிக்க விரும்புகிறாரோ அவரைப் பணம் பெறுவதற்கு நியமனம் செய்து வைத்தல் நல்லது. சேமிப்பவர் திடீரென்று மரணமடைந்தால் கணக்கிலுள்ள தொகை முழுவதும் நியமனம் செய்யப்பட்டவருக்குக் கால வரை (அதாவது 15 ஆண்டுகள்) முடியுமுன்னரே திருப்பி அளிக்கப்படும்.

சேமநிதியில் உள்ள பணம் எக்காரணத்தைக் கொண்டும் ஜப்தி செய்யப்படுவதற்கு எந்த நீதி மன்றத்தின் தீர்ப்பாணைக்கும் உட்பட்டதல்ல. தமிழ்நாடு அரசு சிறு சேமிப்புத் துறையின் கள அதிகாரிகளும் மற்றும் மத்திய அரசு தேசியச் சேமிப்பு நிறுவன அதிகாரிகளும் உங்கள் இல்லங்கள் தோறும் வந்து சேமிப்புத் திட்டத்தை விளக்கவும் சேவை புரியவும் காத்திருக்கின்றனர்.

**சம்பளப் பட்டியல் சேமிப்பைப் பற்றி தெரிந்து கொள்வோமா?**

"சம்பளம் வாங்கியவுடன் செலவுகளை ஈடு கட்டவே முடியவில்லையே, பிறகு எப்படி சேமிப்பது?' என்று அலுத்துக் கொள்பவர்களுக்கு இத் திட்டம் மிகுந்த பயனளிக்கக் கூடியது. சம்பளம் வழங்கும் அதிகாரியே உங்களுக்காக நீங்கள் குறிப்பிட்ட தொகையினை உங்கள் சம்பளத்திலிருந்து பிடித்து அஞ்சலக வங்கியில் மாதந் தோறும் கட்டி விடுகிறார். 5 ஆண்டுகள் இறுதியில் நீங்கள் கட்டிய தொகையும் வட்டியும் சேர்ந்து (6¾ சத விகிதம்) கீழ்க்கண்டவாறு நிறைவெய்தும்.

| கட்டும் தொகை | ஐந்து ஆண்டு இறுதியில் கிடைக்கும் தொகை. |
|---|---|
| ரூ. | ரூ. |
| 5 | 355 |
| 10 | 710 |
| 15 | 1,065 |
| 20 | 1,420 |
| 30 | 2,130 |
| 35 | 2,485 |

### திருச்சியில் ஒரு தொழிற்பேட்டை

திருச்சியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கத் தமிழ்நாடு அரசு ரூ. 15 இலட்சம் அனுமதித்துள்ளது.

தற்போது 10 கூடங்களைக் கொண்டு இயங்கி வரும் சிறு தொழிற்பேட்டையருகே இந்தப் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். திருவெறும்பூரில் உள்ள கொதிகலன் தொழிற்சாலைக்குத் தேவையான உறுப்புகள், சாதனங்களைத் தயாரிக்கத் துணைத்தொழில்களைத் துவக்கும் தொழில் முயற்சியாளர்களுக்காக 29 கூடங்கள் அமைக்கப்படும்.

இந்தத் தொழிற்பேட்டையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வாங்கக் கொதிகலன் ஆலை உறுதியளித்துள்ளது. சுமார் 400 ஏக்கர் மனையில் 100-க்கும் அதிகமான கூடங்களுடன் கூடியதாக இந்தத் தொழிற்பேட்டை படிப்படியாக விரிவாக்கப்படும். தற்போது தமிழ்நாட்டில் 50 தொழிற்பேட்டைகள் உள்ளன.

இத்திட்டத்திற்கு ஐந்தாண்டு அஞ்சலகத் தொடர் வைப்புத் தொகைத் திட்டம் என்று பெயர் (ரெகரிங் டெபாசிட் திட்டம்).

ஒருவர், இத்திட்டத்தில் ரூ. 5-ம் அதன் பெருக்குத் தொகையிலும் வரையறையின் தொகையிலும் வரையறையின்றி முதலீடு செய்யலாம். கணக்கைத் துவங்கி ஓராண்டுக் காலம் முடிவடைந்தவுடன் சேர்ந்த பணத்தில் பாதித் தொகையைக் கடனாகப் பெறலாம்.

தவணைகள் தவறினால் போட்ட பணம் கிடைக்குமா? நிச்சயம் கிடைக்கும். ஓராண்டுத் தவணைகள் தவறினால் முதலீட்டைக் குறைந்த வட்டியுடன் கட்டலாம். மேற்கொண்டு தவணைகள் கட்ட முடியாத நிலை ஏற்பட்டாலும், வரையறை முடிந்தவுடன், அதாவது 5 ஆண்டுகள் முடிவில் முதலும் வட்டியும் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.

உங்களுக்குப் பிறகு சேமிப்பில் உள்ள தொகை வட்டியோடு நீங்கள் நியமிக்கும் வாரிசுக்கு எந்தவிதத் தாக்கீதும் இல்லாமல் வழங்கப்படும். சிறுசேமிப்பு மற்றும் தேசியச் சேமிப்பு அலுவலர்கள் உங்களை அணுகி ஒப்புதல் பத்திரங்களில் உங்கள் கையெழுத்துக்களைப் பெற்று உங்கள் அலுவலகத்தில் சம்பளம் வழங்கும் அதிகாரியிடம் சேர்த்துவிடுவார்கள். பிறகு, மாதா மாதம் உங்கள் சம்பளத்திலிருந்து நீங்கள் குறிப்பிட்டுள்ள தொகையைப் பிடித்து அஞ்சலக வங்கியில் உங்கள் கணக்கில் சேர்த்து வருவார்கள். உங்கள் பெயரில் 'பாஸ்' புத்தகம் உங்களுக்குச் சம்பளம் வழங்கும் அதிகாரியே வைத்திருப்பார். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் அதனைக் கேட்டு வாங்கிக் கணக்கைச் சரி பார்த்துக் கொள்ளலாம்.

அஞ்சலகக் குறிப்பிட்ட கால (டைம்) டெபாசிட் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. அது என்ன?

ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் பணத்தைச் சேமித்து வைக்க விரும்புவோருக்கு உதவுமாறு இத்திட்டம் 1970-ல் துவங்கப்பட்டது. சேமிப்பு வங்கி கொண்ட எல்லா அஞ்சலகத்திலும் இத் திட்டத்திலடங்கிய குறிப்பிட்ட கால டெபாசிட் கணக்கு வைத்துக் கொள்ளலாம்.

ஒன்றிலிருந்து மூன்று, ஐந்து ஆண்டுகள் வரையில் கால வரம்புகள் கொண்ட இத் திட்டத்தில் 50-ஆல் பெருக்கக் கூடிய எந்தத் தொகையையும் டெபாசிட் செய்யலாம். டெபாசிட் தொகைக்கு உச்ச வரம்பு கிடையாது.

வயது வந்தோர் தனியாகவும், மற்ருெருவருடன் கூட்டாகவும் பணம் டெபாசிட் செய்யலாம். கால வரம்பு முடிந்த பின்னர் (அ) கூட்டாளிகள் இருவருமே அல்லது உயிருடனிருப்பவர், (ஆ) இருவரில் ஒருவர் அல்லது உயிருடனிருப்பவர், பணத்தைப் பெறலாம். மைனரும் இத் திட்டத்தில் தன் பெயரில் பணம் டெபாசிட் செய்யலாம்; மைனர் அல்லது புத்தி சுவாதீனமில்லாதவருக்காக அவர்களுடைய காப்பாளர் பணம் டெபாசிட் செய்யலாம்.

குறிப்பிட்ட கால டெபாசிட்டில் 50-ஆல் பெருக்கக் கூடிய எந்தத் தொகையுடனும் கணக்கு ஆரம்பிக்கலாம்.

ஓராண்டு, மூன்ருண்டு, ஐந்தாண்டு ஆகிய மூன்று வித டெபாசிட்கள் கொண்ட இத் திட்டத்தில் ஒருவர் தனியாகவோ அல்லது இன்னொருவருடன் கூட்டாகவோ ஒருவித டெபாசிட்டில் ஒரே கணக்குத்தான் வைத்துக் கொள்ளலாம்.

அஞ்சலகத்தில் கிடைக்கும் விவரங்களடங்கிய விண்ணப்பத்தாளைப் பூர்த்தி செய்து, அத்துடன் டெபாசிட் செய்ய எண்ணியுள்ள தொகையையும் அஞ்சலகத்தில் சேர்க்க வேண்டும். டெபாசிட் தொகையை ரொக்கமாக அல்லது தன் பெயருக்கு அல்லது அஞ்சலக அதிகாரியின் பெயருக்கெழுதிய காசோலையாகவோ செலுத்தலாம்.

ஒன்று, மூன்று அல்லது ஐந்தாண்டுக் கால வரம்புகள் கொண்ட திட்டங்களில் டெபாசிட் செய்யப்பட்ட தொகையைக் கால வரம்பு முடிந்த பின்னர் திரும்பப் பெறலாம்.

குறிப்பிட்ட கால டெபாசிட் பணத்தை அடமானம் வைக்கலாமா?

மத்திய, மாநில அரசைச் சேர்ந்த அதிகாரிகள், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா, ஷெட்யூல்ட் பாங்க், கூட்டுறவு பாங்க் அல்லது கூட்டுறவுச் சங்கம், நிறுவனம், அரசாங்கக் கம்பெனி, உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரி ஆகியோருக்கு இந்த டெபாசிட்டிலுள்ள பணத்தை அடமானம் வைக்கலாம். அடமானம் வைக்கும்போது அடமானம் வைப்பவரின் கணக்கில் ஒரே டெபாசிட்தான் இருக்க வேண்டும்.

'சிறு துளி பெருவெள்ளம்' என்பது போலச் சிறுகச் சிறுகச் சேமித்துத் தங்களுடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். பக்குவமாகச் செலவழித்தால் பற்ருக்குறையே இருக்காது. பிறரிடம் பல்லிளித்துக் கடன் கேட்க வேண்டிய அவசியமும் இராது. எனவே, சேமிப்போம்! சேமமுற வாழ்வோம்!

## கேலிச் சித்திரம்

இன்று கார்ட்டூன் வெளிவராத பத்திரிகையே இல்லை எனலாம். நகைச் சித்திரம் அல்லது கேலிச் சித்திரம் எனப்படும் கார்ட்டூன் தமிழகத்திற்கு மேலை நாட்டிலிருந்து 'இறக்குமதி' செய்யப்பட்டது! இது முதன் முதலில் இத்தாலியில் உருவெடுத்தது. பிறகு பிரான்ஸ், பிரிட்டன் முதலிய ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவியது. ஆனல் இன்று உலகெங்கணுமுள்ள பத்திரிகைகளில் முக்கிய இடம் பெற்றுத் திகழ்கிறது.

இந்தியாவில் இதை முதன் முதலில் வெளியிட்டவர் யார் தெரியுமா? திரு போத்தன் ஜோசப். தில்லியிலிருந்து வெளியாகும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையும், பம்பாயிலிருந்து வெளியாகும் 'ஃப்ரீ பிரஸ் ஜர்னல்' என்ற பத்திரிகையும் கார்ட்டூனை வெளியிட்டு, மற்றப் பத்திரிகைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தன.

இத்தகைய சித்திரங்கள் அரசியல் அல்லது சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறுவதாக அமைந்திருக்கும். அமெரிக்காவில் நாஸ்ட் (1840–1902) என்னும் ஓவியர் ஜனநாயகக் கட்சியின் அடையாளமாகக் கழுதையையும், குடியரசுக் கட்சியின் அடையாளமாக யானையையும் வரைந்தார். இப்போதும் அக்கட்சிகள் இந்த அடையாளங்களையே சுட்டிக்காட்டுகின்றனவாம்! பொதுவாகப் பத்திரிகைகளில் மற்ற செய்திகளோடு கார்ட்டூன் மட்டும் இடம் பெறுவதுண்டு. ஆனல் முழுக்க முழுக்கக் கார்ட்டூன் மட்டுமே வெளியாகும் பத்திரிகைகளும் இருக்கின்றன. இங்கிலாந்தில் *1841*-ல் தொடங்கிய 'பன்ச்' என்னும் கார்ட்டூன் பத்திரிகை இந்த வகையைச் சார்ந்ததாகும். இதற்கு முன்மாதிரியாக இருந்தவை. சார்லஸ் பெலபான் என்பவர் *1830*-ல் தொடங்கிய கார்ட்டூன் வார இதழும், *1832*-ல் தொடங்கிய கார்ட்டூன் நாளிதழுமாகும். இவைகளே உலகில் முதன் முதலாகத் தோன்றிய கார்ட்டூன் இதழ்களாகும்.

இந்த இதழ்களில் கேலிச் சித்திரங்கள் வரைந்த ஆனுரே டோமியே என்பவர் இத்துறையில் மிகச் சிறந்தது விளங்கி, பிரெஞ்சு மக்களைத் தட்டி எழுப்பினர். இன்று உலகில் சிறந்த கேலிச் சித்திரக்காரராக டேவிட்லோ என்பவர் புகழ்பெற்று விளங்குகிருர். இவரது சித்திரங்களைத் தாங்கிச் சில இந்திய இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. கேலிச் சித்திர இதழ்களில் 'சங்கர்ஸ் வீக்லி' குறிப்பிடத் தக்கதாகும்.

பத்திரிகையைத் தவிர, திரைப்படக் கேலிச் சித்திரங்களையும் நாம் பார்த்திருக்கிருேம். இதனை முதன் முதலாகத் தயாரித்தவர் எமீல் கோல் என்னும் பிரெஞ்சு ஓவியராவார். இவர் முதலில் தயாரித்த படம் 'பொம்மைகள் நாடகம்' என்பதாகும். இவ்வகைக் கேலிச் சித்திரப் படமெடுப்பதில் புகழ் பெற்றவர் வால்ட் டிஸ்னி என்னும் அமெரிக்க ஓவியராவார். இவருடைய 'மிக்கி எலி' உலகப் புகழ் பெற்றது. அமெரிக்காவில் இத்தகைய சித்திரங்களைக் கற்றுக் கொடுக்கும் பள்ளிகள் நிறைய இருக்கின்றன.

# தஞ்சை மாவட்ட உழவர்களுக்குத் தகுந்த சில பரிந்துரைகள்



அதிக மகசூல்!

அதிக வருவாய்!

இவையே தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் தீவிரச் சாகுபடித் திட்டத்தின் குறிக்கோள். இக் குறிக்கோளை எய்தப் பலபயிர் சாகுபடித்திட்டம்(Multiple Cropping Scheme) பெருந்துணையாக இருக்கும். பல பயிர்களை ஒரே நிலத்தில் தொடர்ந்து சாகுபடி செய்வதுடன், ஒவ்வொரு பயிருக்கும் வேளாண்மைத் துறையால் பரிந்துரைக்கப்படும் ஒருமித்த செய் நேர்த்தி முறைகளை ( Package of Practices ) விழுமிய முறையில் மேற்கொண்டால் தீவிரச் சாகுபடித் திட்டத்தின் குறிக்கோளை எளிதில் எய்திட இயலும். அதனால் தஞ்சை மாவட்டம் மட்டுமல்ல, தமிழகமே உயர்வடையும்!

இந்த ஆண்டில் (1972—73) தஞ்சை மாவட்டத்தின் நெல் உற்பத்தியை மேலும் 5 சதம் உயர்த்தவும், பணப் பயிரான பருத்தியின் சாகுபடியைத் தீவிரப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள 12½ இலட்சம் ஏக்கர் நன்செய் நிலங்களிலே, கீழ்க்கண்டவாறு, 21 இலட்சம் ஏக்கர் அளவில் பயிரிட வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

| நெற்பயிர்: | பரப்பு. (இலட்சம் ஏக்கரில்). |
|---|---|
| குறுவை | 5.00 |
| சம்பா | 7.50 |
| தாளடி | 4.00 |
| நெல் மொத்தம் | 16.50 |
| நெற்பயிரை அடுத்துக் கோடைப் பயிர். | |
| பயறுகள் | 3.50 |
| நிலக்கடலை | 0.65 |
| பருத்தி | 0.15 |
| மக்காச்சோளம், இதர சிறு தானியங்கள். | 0.17 |
| எள் | 0·03 |
| கோடைப் பயிர் மொத்தம் | 4.50 |
| கூடுதல் மொத்தம் | 21.00 |

கோடைப் பயிர்களுக்காக இந்த ஆண்டில் 3,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கவும், தீவிரச் சாகுபடித் திட்ட அலுவலகத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

நடப்பு ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 14.50 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் ரகங்களைப் பின்கண்டவாறு பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

| ரகம். | பரப்பு (இலட்சம் ஏக்கரில்). |
|---|---|
| கருணா | 2.75 |
| ஐ. ஆர். 8 | 1.50 |
| ஆடுதுறை-27 | 1.50 |
| கோ-25 | 4.40 |
| ஐ. ஆர். 20 | 2.20 |
| பொன்னி | 2.15 |
| மொத்தம் | 14.50 |

துவரை உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக நிலக்கடலையுடனும், நன்செய் வரப்புகளிலும் துவரை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை விளைபொருட்களின், உற்பத்தியை உயர்த்தவும், அதன் மூலம் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களின் வருவாயைப் பெருக்கவும் வேண்டிப் பின்கண்ட யோசனைகளைத் 'தமிழரசு' இதழின் சார்பில் படைக்கின்றோம்.

### பலபயிர் செய்வீர்!

தஞ்சை மாவட்டத்தில் முதற் போகத்திலும், இரண்டாம் போகத்திலும் உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளைப் பயிரிட்டு, இரண்டாம் போக அறுவடைக்குப் பின் கோடையில் நிலத்தைத் தரிசாகப் போடாமல் பருத்தி, நிலக்கடலை, மக்காச்சோளம், கம்பு, எள், பயறு வகைகள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை நிலத்திற்கும், நீர்ப்பாசன வசதிக்கும் ஏற்பத் தவறாது பயிர் செய்தால், தரணியே வியக்கும் அளவுக்குத் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள் உயர்வு பெறலாம்!

''மூன்று போகம் பயிரிடத் தண்ணீர் வசதி எல்லாருக்கும் இல்லையே! வடிமுனைக் குழாயோ அல்லது ஆழ்குழாய்க் கிணறோ அல்லது சாதாரண கிணறோ இருந்தால்தானே நீங்கள் சொல்லும் முறையில் முப்போகம் பயிரிட முடியும். அவ்வசதி இல்லாத உழவர்கள் முப்போகம் பயிரிடுவது எப்படி? '' என்று பலர் கேட்கலாம்.

வடிமுனைக் குழாயோ அல்லது ஆழ்குழாய்க் கிணறோ அல்லது சாதாரணக் கிணறோ இல்லாவிட்டாலும், காவிரியாற்று நீரைக் கொண்டே இருபோகம் நெல் பயிரிட்டு அறுவடை செய்து

விட்டு, மூன்றும் போகத்தில் நெல் வயலில் உள்ள ஈரத்தைக் கொண்டே பயறு வகைகளைப் பயிரிட்டுப் பயன் பெறமுடியும்.

வழக்கமாக மேட்டூர் அணை ஜூன் மாதம் முதல் தேதி பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டு, ஜனவரி இறுதியில் மூடப்படுகிறது. மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லையானால், பாசனத்திற்குத் திறந்துவிடப்படும் நாள் தள்ளியே போகும். அதுபோலவே மேட்டூர் அணை மூடப்படும் நாளும் தள்ளிப் போகக்கூடும். இதை மனத்திற் கொண்டு, பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படும் காலத்திற்குள்ளாகவே முதல் போகத்தையும், இரண்டாம் போகத்தையும் தண்ணீர் தட்டுப்பாடின்றி சாகுபடி செய்து அறுவடையை முடித்துவிட வேண்டும். இதற்கு, முன்கூட்டியே திட்டமிட்டு என்னென்ன ரகங்களை, எவ்வப்போது பயிரிடுவதென்று முடிவு செய்து கொள்ளவேண்டும்.

### என்னென்ன ரகங்களைப் பயிரிடலாம்?

''தாயைப் போல பிள்ளை! நூலைப் போல சேலை!'' என்பது போல, வித்தைப் பொருத்தே விளைச்சலும் இருக்கும்! ஆகவே அதிக மகசூல் பெற்று அதிக வருவாய் அடைய, தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டில் கீழ்க்கண்ட ரகங்களைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது :—

> **தமிழிலே மனு !**
>
> **புகைவண்டியில் நீண்ட தூரம் பயணம் செய்கிறவர்கள் படுக்கை—இருப்பிடம் ஆகியவற்றை பதிவு செய்து கொள்வதற்கு முன்னதாகவே ஒரு மனுவைப் பூர்த்தி செய்து தரவேண்டும். இந்த மனு இதுவரை ஆங்கிலத்தில் மட்டுமே அச்சடிக்கப் பெற்றுவந்தது. இப்போது தமிழிலும் இந்த மனுவை ரயில் துறையினர் அச்சிட்டுள்ளனர்.**

| ரகங்களின் பெயர்கள். | வயது (நாட்கள்.) | ஏக்கர் மகசூல் (கலம்.) |
|---|---|---|
| குறுவைக்கு— | | |
| கருணா | 108 | 75 |
| ஐ. ஆர் 8 | 135 | 90 |
| ஜெயா | 125 | 90 |
| ஐ. ஆர். 20 | 135 | 75 |
| முன் சம்பாவுக்கு— | | |
| ஐ. ஆர். 8 | 135 | 90 |
| கோ-25 | 180 | 75 |
| பின் சம்பாவுக்கு— | | |
| பொன்னி | 140 | 66 |
| தாளடிக்கு— | | |
| பொன்னி | 140 | 60 |
| ஐ. ஆர். 20 | 130 | 60 |
| கோ-25 | 165 | 60 |
| கல்சர்-28 | 95 | 45 |

### குறுவை

* 'கருணா' ரகத்திலிருந்து சிறந்த மகசூல் பெறவும், மழைக்கு முன்பே அறுவடை செய்யவும் விரும்பினால், வர நாற்றுகளாவது ஜூன் 30-ஆம் தேதிக்குள் (ஆனி 17-ஆம் தேதி) நாற்று விட்டுவிட வேண்டும்.

* குறுவையையும், தாளடியையும் தண்ணீர்த் தட்டுப்பாடின்றிப் பயிரிட்டு, காலத்தில் அறுவடை செய்ய விரும்பினால், 'ஐ.ஆர். 8', 'ஜெயா', 'ஐ.ஆர். 20' ஆகிய குறுவை ரகங்களை ஜூன் 30-ஆம் தேதிக்குள் (ஆனி 17) நாற்று விட்டு வைத்திருந்து, காவிரியாற்றில் தண்ணீர் வந்தவுடன் நட்டு விடவேண்டும்.

### சம்பா

* நீங்கள் சம்பாவிலும் அதிக மகசூல் பெற விரும்பினால், முன் சம்பாப்பட்டத்திலேயே 'ஐ.ஆர். 8' நெல்லை நற்று விடவேண்டும்.

* நீங்கள் சம்பாவை அடுத்து நிலக்கடலை பயிரிட விரும்பினால், நடுத்தர கால வயதுடைய 'ஐ.ஆர். 8' ரகத்தையே பயிரிட வேண்டும். புதிய ஆற்றுப் பாசன பகுதியில் (New Delta) 'ஐ.ஆர். 8' நெல்லை அடுத்து நிலக்கடலை பயிரிடலாம்.

* நீங்கள் விரும்பினால் 180 நாட்கள் வயதுடைய 'கோ. 25' ரகத்தை ஒரு போகச் சம்பா நிலத்தில் பயிரிடலாம்.

* பின் சம்பாப்பட்டத்திற்குப் 'பொன்னி' மிகவும் ஏற்றது.

### தாளடி

* தண்ணீர்த் தட்டுப்பாடின்றித் தாளடியிலும், அதிக மகசூல் பெற விரும்பினால், பழைய டெல்டா பகுதியில் பொன்னியையும், புதிய டெல்டா பகுதியில் ஐ.ஆர். 20-யும் பயிரிடுவதே நல்லது.

* குறுவைச் சாகுபடிகாலந்தாழ்ந்து விட்டால், பிந்திய தாளடிக்கு ஐ.ஆர் 20 ரகமே சிறந்தது. இதைவிட மிகவும் பிந்திய தாளடிப் பட்டத்தில் அதாவது மார்கழியில் பயிரிட 95 நாட்கள் வயதுடைய 'கல்சர்-28' என்ற ரகம் சிறந்தது. அந்த ரகம் நேரடி விதைப்புக்கும் ஏற்றது.

* உங்கள் நிலம் ஆரம்ப காலத்தில் மழையின் காரணமாக நீர் தேங்கும் பகுதியாக இருந்தால் பொன்னியைப் பயிரிடுங்கள். நாற்றுகளை நெருக்கி நடவேண்டும்.

* தாளடியை அடுத்துப் பயறுகளை விதைக்க விரும்பினால், பொன்னி, ஐ.ஆர். 20 ரகங்களை மட்டுமே பயிரிடுங்கள்.

### களர் நிலம்

* உங்கள் நிலம் களர் நிலமாக இருக்குமானால், ஆகஸ்டு முதல் ஜனவரி வரையான பருவத்தில் 145 நாட்கள் வயதுடைய 'பேராவூருணி-1' (PVR 1) என்னும் ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது. இந்த ரகம் ஏக்கருக்கு 54 கலம் வரை மகசூல் கொடுக்க வல்லது.

### மானாவாரி நெல்

* மானாவாரிப் பகுதிகளில் ஆகஸ்டு முதல் டிசம்பர் வரையான பருவத்தில் 145 நாட்கள் வயதுடைய 'கோ 31' என்னும் ஒட்டுமானாவாரி சம்பாவைப் பயிரிட்டு ஏக்கருக்கு 45 கலம் வரை மகசூல் பெறலாம்.

### ஆழ்நீர்ப் பகுதி

* ஆழ்நீர்ப் பகுதிகளில் ஜூலை முதல் டிசம்பர் வரையான பருவத்தில் 140 நாட்கள் வயதுடைய 'தலை ஞாயிறு-1' (TNR-1) என்னும் ரகத்தைப் பயிரிட்டு ஏக்கருக்கு 36 கலம் வரை மகசூல் பெறலாம்.

### கோடைப் பயிர்

* பாசன வசதியுடைய நிலங்களில் சம்பா அல்லது தாளடி நெல் அறுவடைக்குப் பிறகு, வயலில் ஈரம் இருக்கும்போதே தை, மாசி மாதங்களில் 'பி.ஆர்.எஸ். 72' ரகப் பருத்தியைப் பயிரிட்டுப் பயன் பெறலாம்.

* ஒரு போகச் சம்பா நெல் அறுவடைக்குப் பிறகு பாசன வசதியுடைய மணற்கால் நிலங்களில் மார்கழியில் 'டி.எம்.வி. 2', 'டி.எம்.வி. 7', 'பொள்ளாச்சி-1' ஆகிய நிலக்கடலை ரகங்களைப் பயிரிடலாம். பங்குனி, சித்திரையில் 'கங்கா-5' ரக மக்காச் சோளத்தையும், 'எச்.பி. 3' கம்பு ரகத்தையும் இறைவையாகப் பயிரிடலாம்.

* பாசன வசதியுடைய இருபோக மணற்கால் நிலங்களிலும், கோடையில் 'டி.எம்.வி. 2' 'டி.எம்.வி. 7', 'பொள்ளாச்சி-1' ஆகிய நிலக்கடலை ரகங்களைப் பயிரிடலாம்.

* பாசன வசதியில்லாத நிலங்களில் உளுந்து, பச்சைப் பயறு ஆகியவைகளை நெல் அறுவடைக்கு ஒரு வாரம் முன்பாக விதைக்கலாம்.

* கோடை மழையில் எள் விதைக்கலாம்.

### உங்களுக்கு ஏற்ற ரகங்கள் எவை ?

எந்தெந்தப் பருவத்தில், என்னென்ன ரகங்களைப் பயிரிடலாம் என்று பொதுவாகத் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. உங்களுக்குள்ள பாசன வசதிக்கும், நிலத்தின் தன்மைக்கும், காவிரியில் தண்ணீர் விடப்படுவதற்கும், மூன்றும் போகத்தில் நீங்கள் பயிரிட விரும்பும் பயிருக்கு ஏற்ற வகையிலும் எந்தெந்த ரகங்களை எவ்வெப்பொழுது நாற்று விட்டு, நட்டு, அறுவடை செய்வது என்பதைத் திட்டவட்டமாக முடிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு முடிவு செய்ய, கீழே நான்கு முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. உங்களுக்கு இருக்கும் வசதிக்கும், வாய்ப்புக்கும் ஏற்ப இம்முறைகளை மேற்கொண்டால் அதிக மகசூல் பெற்று அதிக வருவாய் அடையலாம். எனவே, உங்களுக்கு ஏற்ற முறையை நீங்களே முடிவு செய்து கொண்டு திட்டமிட்டுச் செயல்பட்டு வெற்றி பெறுங்கள் என்று வேண்டுகின்றோம்.

### முறை—1

உங்களிடம் வடிமுனைக் குழாய் அல்லது ஆழ்குழாய்க் கிணறு அல்லது கிணறு இருக்குமாயின் காவிரியாற்றில் தண்ணீர் வருவதற்கு முன்பே, 'ஐ.ஆர். 8', 'ஜெயா', ஐ.ஆர். 20' ஆகிய ரகங்களை நாற்று விட்டு வைத்திருந்து, காவிரித் தண்ணீர் விடப்பட்ட உடனே, வயலை உழுது நட்டு விடலாம். இவ்வாறு செய்தால் குறுவைக்குப் பிறகு பயிரிடப்படும் தாளடியையும் காவிரியாற்றுத் தண்ணீரைக் கொண்டே காலத்தில் அறுவடை செய்து விடலாம்.

மேட்டூர் அணையிலிருந்து ஜூன் முதல் தேதியோ அல்லது அதற்குப் பிறகு ஜூன் 30-ஆம் தேதிக்குள்ளோ தண்ணீர் விடப்படுவதாக வைத்துக் கொள்ளுங்கள். தண்ணீர் விடப்பட்ட பிறகு மேற்கூறிய ரகங்களை நாற்று விட்டு நடுவதென்றால் தாளடியில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும். இதைத் தவிர்ப்பதற்கு வடிமுனைக் குழாய் அல்லது ஆழ்குழாய்க் கிணறு அல்லது கிணறு மூலம் நீர்ப் பாய்ச்சி ஜூன் முதல் தேதி முதல் ஜூன் 30-ஆம் தேதிக்குள் (வைகாசி 19-ஆம் தேதி முதல் ஆனி 17-ஆம் தேதிக்குள்) நாற்று விட்டுவிட வேண்டும். இவ்வாறு நாற்று விட்டு நட்டுவிட்டால், அக்டோபர் 14-ஆம் தேதியிலிருந்து நவம்பர் 11-ஆம் தேதிக்குள் (புரட்டாசி 29-ஆம் தேதியிலிருந்து ஐப்பசி 27-ஆம் தேதிக்குள்) மேற்கூறிய ரகங்களை அறுவடை செய்து விடுவதுடன், தாளடியையும் காலத்தில் பயிரிட்டுத் தண்ணீர்த் தட்டுப்பாடின்றி அறுவடை செய்து விடலாம்.

நவம்பர் 11—ஆம் தேதியிலிருந்து நவம்பர் 21-ஆம் தேதிக்குள் (ஐப்பசி 27-ஆம் தேதி முதல் கார்த்திகை 7-ஆம் தேதிக்குள்) உடனே உழவு செய்து, தாளடியில் ஐ.ஆர். 20 ரகத்தை நட்டு விடலாம். தாளடி நடுவதற்கு அக்டோபர் 11-ஆம் தேதி முதல் அக்டோபர் 21-ஆம் தேதிக்குள் (புரட்டாசி 26-ஆம் தேதி முதல் ஐப்பசி 6-ஆம் தேதிக்குள்) ஐ.ஆர். 20 ரகத்தை நாற்று விட்டு வைத்திருக்க வேண்டும். இவ்வாறு நாற்று விட்டு நட்டால், தாளடியைப் பிப்ரவரி 18-ஆம் தேதியிலிருந்து 28-ஆம் தேதிக்குள் (மாசி 7-ஆம் தேதி முதல் மாசி 21-ஆம் தேதிக்குள்) அறுவடை செய்து விடலாம். ஜனவரி இறுதியில் மேட்டூர் அணை மூடப்பட்டாலும், மேலும் ஒரு மாதம் வரை தஞ்சை மாவட்ட நிலங்களுக்குப் பொதுவாக ஓரளவு தண்ணீர் கிடைக்கும் என்பதை இந்த இடத்தில் நினைவு கூர்வது நல்லது.

**சோவியத் அஞ்சலகங்களில் பொறியியல்!**

**சோவியத் ரஷ்யாவில் தாமே இயங்கும் அஞ்சலகங்கள் விரைவில் உருவாக இருக்கின்றன. வாடிக்கையாளர்கள் கொடுக்கும் தந்திச் செய்திகளை இயந்திரங்கள் தாமாகவே தெரிவித்து, அதற்குரிய கட்டணத்தையும் தெரிவித்து விடுகின்றன. பார்சல்கள் கட்டுவதற்கும் கூட இந்த இயந்திரங்களைப் பயன்படுத்த விருக்கிறார்கள். சில வினாடிகளிலே, எடையை நிறுத்துப் பார்த்து......அதற்குரிய கட்டணத்தை ஓர் இயந்திரம் குறித்துக் கொடுக்கிறது.**

தாளடி அறுவடைக்குப் பின் நெல் வயலில் உள்ள ஈரத்தைப் பயன்படுத்தி பி.ஆர்.எஸ். 72 பருத்தி விதைகளைப் ஊன்றி, பிறகு வடிமுனைக் குழாய் அல்லது ஆழ்குழாய்க் கிணறு அல்லது கிணறு மூலம் பாசனம் அளித்துப் பருத்தியிலிருந்து மட்டும் ஏக்கருக்கு ரூபாய் 1,250 வரை இலாபம் பெறலாம். அல்லது தாளடி அறுவடைக்குப்பிறகு உழுது, பின்பு 'டி.எம்.வி. 2' அல்லது 'டி.எம்.வி. 7' அல்லது 'பொள்ளாச்சி-1' ஆகிய நிலக்கடலை ரகங்களை இறைவையாகப் பயிரிடலாம். இம் முறையின் மூலம் முப்போகம் பயிரிட்டு உழவர்கள் முன்னேறலாம்.

### துப்பறிவது எப்படி ?

தமிழ் நாட்டில் உள்ள காவல் துறை அதிகாரிகளுக்குத் துப்பு துலக்குவதில் நவீன பயிற்சி அளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இதுபோன்ற பயிற்சி இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டுக் காவல்துறையினருக்கு அளிக்கப்படுகிறது.

துப்பு, துலக்குவதில் உள்ள பல நுட்பமான செயல்கள் இந்தப் பயிற்சியின்போது கற்றுத்தரப் படும். மற்றும் துப்பு துலக்குபவருக்கு, இரசாயனப் பயிற்சி, ரேகைப்பயிற்சி ஆகியவையும் கொடுக்கப்படும்.

---

(குறிப்பு.—வடிமுனைக் குழாய் அல்லது ஆழ்குழாய்க் கிணறு அல்லது கிணறு உள்ள உழவர் பெருமக்கள் தாராள மனப்பான்மையுடன் தங்கள் நிலத்திலேயே மற்ற உழவர்களுக்கும் கூட்டுறவு முறையில் சமுதாய நாற்றங்கால் அமைத்து நாற்று விட்டுக் கொடுக்கலாம்).

### முறை—2

குறுவைக்கு குறுகிய கால ரகத்தை விரும்பினாலும், காவிரியாற்றில் தண்ணீர் விடப்பட்ட பின்பு தான் நாற்று விட முடியும் என்றாலும் குறுவைக்குக் 'கருணா' ரகமே சிறந்தது. ஜூன் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் (வைகாசி 19-ஆம் தேதி முதல் ஆனி மாதம் 2-ஆம் தேதிக்குள்) காவிரியில் தண்ணீர் விடப்பட்டால், ஜூன் 15-ஆம் தேதியிலிருந்து ஜூன் 30-ஆம் தேதிக்குள் (ஆனி 2-ஆம் தேதி முதல் ஆனி 17-ஆம் தேதி வரை) 'கருணா' ரகத்தை நாற்று விட்டு விடவேண்டும். இவ்வாறு விடப்படும் நாற்றை நட்டால், குறுவையை அக்டோபர் 1-ஆம் தேதியிலிருந்து அக்டோபர் 15-ஆம் தேதிக்குள் (புரட்டாசி 16-ஆம் தேதி முதல் புரட்டாசி 30-ஆம் தேதிக்குள்) அறுவை செய்துவிடலாம்.

'கருணா' அறுவடைக்குப்பின் நிலத்தை உழுது, அக்டோபர் 30-ஆம் தேதிக்குள் (ஐப்பசி 15) தாளடியில் 'பொன்னி' ரகத்தை நடலாம். 'பொன்னி' நடுவதற்குச் செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதிக்குள் (புரட்டாசி 15) நாற்று விட்டு விடவேண்டும். இவ்வாறு செய்தால் பிப்ரவரி 17-ஆம் தேதிக்குள் (மாசி 5-ஆம் தேதிக்குள்) தாளடியை அறுவடை செய்து விடலாம்.

தாளடி அறுவடைக்கு 7 முதல் 10 நாட்கள் முன்பாக அதாவது பிப்ரவரி 8-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதிக்குள்ளாக 'ஆடுதுறை-1 உளுந்து', அல்லது 'ஆடுதுறை-1 பச்சைப்பயறு' அல்லது 'பைசாகி மூங்' என்னும் பச்சைப்பயறு வகைகளை நெற்பயிரிலேயே விதைத்து விட வேண்டும். நிலத்தில் உள்ள ஈரத்தைக் கொண்டே (பாசன மின்றியே) பயறு வகை விதைகள் முளைத்து, வளர்ந்து, காய்த்துப் பலன் அளிக்கும். எனவே, காவிரியில் தண்ணீர் வந்த பின்பே நாற்று விட முடியும் என்ற நிலையில் இருப்பவர்கள் இம்முறையைப் பின்பற்றி முப்போகம் பயிரிட்டுப் பயன் பெறலாம்.

### முறை—3

''ஜூன் 15-ஆம் தேதி வரை மேட்டூர் அணை திறக்கப்படவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது எப்படி முப்போகம் பயிரிட முடியும் ?'' என்று நீங்கள் கேட்கலாம்.

ஜூன் 15-ஆம் தேதி வரை மேட்டூர் அணை திறக்கப்படாமல் இருந்து ஜூன் 15-ஆம் தேதி முதல் ஜூன் 30-ஆம் தேதிக்குள் திறக்கப்படுவதாக வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுதும் குறுவைக்குக் 'கருணா' ரகத்தையே பயன்படுத்த வேண்டும். 'கருணா' நெல்லை ஜூலை 1-ஆம் தேதியிலிருந்து ஜூலை 27-ஆம் தேதிக்குள் (ஆனி 18 முதல் ஆடி 12 வரை) நாற்று விட்டுவிட வேண்டும். இக் காலத்தில் விடப்படும் நாற்றைக் காலத்தில் நட்டுப் பயிரிட்டால், அக்டோபர் 16-ஆம் தேதியிலிருந்து நவம்பர் 12-ஆம் தேதிக்குள் (ஐப்பசி 1 முதல் ஐப்பசி 28-ஆம் தேதிக்குள்) 'கருணா' ரகத்தை அறுவடை செய்து விடலாம்.

நவம்பர் 12-ஆம் தேதி முதல் நவம்பர் 21-ஆம் தேதிக்குள் (ஐப்பசி 28-ஆம் தேதி முதல் கார்த்திகை 7-ஆம் தேதிக்குள்) 'ஐ.ஆர். 20' நெல்லைத் தாளடியில் நட்டுவிட வேண்டும். 'ஐ.ஆர். 20' நெல்லை அக்டோபர் 11-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதிக்குள் (புரட்டாசி 26-ஆம் தேதி முதல் ஐப்பசி 6-ஆம் தேதிக்குள்) நாற்று விட்டுவிட வேண்டும். 'ஐ.ஆர். 20' பிப்ரவரி மாதம் 18-ஆம் தேதியில் இருந்து 28-ஆம் தேதிக்குள் (மாசி 6 முதல் மாசி 12-ஆம் தேதிக்குள்) அறுவடையாகி விடும். தாளடி அறுவடைக்கு 7 முதல் 10 நாட்கள் முன்பாகவே, முன்பு கூறியபடி பயறு வகைகளை விதைத்து விடலாம். எனவே, ஜூன் 30-ஆம் தேதி மேட்டூரில் தண்ணீர் திறந்து விட்டாலும், முப்போகம் பயிரிடலாம் என்பது உறுதி.

### முறை—4

''எதிர்பாராதவிதமாக ஜூலையில்தான் தண்ணீர் விடப்படுவதாக வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது என்னங்க செய்வது?'' என்று நீங்கள் கேட்கலாம்.

எதிர்பாராத விதமாக ஜூலையில்தான் தண்ணீர் விடுவதாகக் கொண்டாலும், குறுவையில் 'கருணா' ரகத்தையோ அல்லது ஆடுதுறை-27 ரகத்தையோ 'தபாக்' நாற்றங்கால் முறையில் நாற்று விட்டு, கூடுமான வரை விரைவாக நட்டுவிட வேண்டும். எதிர்பாராத விதமாக மேலும்காலதாமதமானாலும் குறுவை அறுவடை முடிந்த பின்பு, 'கல்சர்-28' (அன்னபூர்ணா) என்னும் ரகத்தை டிசம்பர் 1 முதல் டிசம்பர் 20 -ஆம் தேதிக்குள் (கார்த்திகை 17 முதல் மார்கழி 6 வரை ) நட்டுவிட வேண்டும். இவ்வாறு செய்ய நவம்பர் 12 முதல் 30-ஆம் தேதிக்குள் (ஐப்பசி 28 முதல் கார்த்திகை 16-ஆம் தேதிக்குள்) நாற்று விடவேண்டும். 'கல்சர்-28' பிப்ரவரி 15 முதல் மார்ச்சு 5-ஆம் தேதிக்குள் (மாசி 4 முதல் மாசி 22-ஆம் தேதிக்குள்) அறுவடைக்கு வந்துவிடும். அதன் அறுவடைக்கு 7 முதல் 10 நாட்கள் முன்பாகவும் பயறு வகைகளை விதைக்கலாம்.

ஆகவே, காலந் தாழ்த்தி மேட்டூர் அணை திறக்கப்பட்டாலும் கவலைப்படாமல் மேற்கூறிய முறையில் தகுந்த ரகங்களைப் பயிரிட்டால் தஞ்சை மாவட்டத்தில் தப்பாமல் முப்போகம் பயிரிட முடியும்.

எனவே, மேற்கூறிய நான்கு முறைகளில் உங்களுக்கு உகந்ததை மேற்கொண்டு அதிக மகசூல் பெற்று, அதிக வருவாய் அடைந்து, தரணி போற்ற முன்னேறுங்கள் என்று தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களை வேண்டிக் கொள்கின்றோம்.

# வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

ம. ராஜலட்சுமி, நா. க. வலசு,
பொருளூர் (அஞ்சல்),
கள்ளிமந்தயம் (வழி),
பழநி வட்டம்.

பகுப்பதில் அன்னம் பணிவதில் நாணல்
நகுவதில் முல்லைசெய்ந் நன்றி—மிகுவதிலே
குக்கலென வாழ்ந்தால் குணக்குன்றாம்; மானேகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ம. இராஜலட்சுமி, கள்ளிமந்தயம்.

நாடெனக் கென்ன நலன்செய்யும் என்றெண்ணிப்
பாடுபடும் புன்மைமனப் போக்கொழித்து—நாடுயர
மிக்க மகிழ்வோ டுழைப்பேன் எனும்நற்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—துறவி, சென்னை-12.

அன்பு மனையாளை ஆருயிராம் தன்மகவை
நன்செய் விளைகின்ற நானிலத்தை—அன்றுவாய்
மைக்காகத் தானீந்த மன்னனைப்போல் நாமும்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—அ. காந்தி, பி.எஸ்சி., பி.டி., தேவத்தூர்.

பூவிழந்து பொட்டிழந்து புன்னகையும் தானிழந்து
பாவியராய் வாழ்ந்திடுதல் நன்றாமோ?—பூவுலகில்
மைக்கண்ணாள் வாழ்வு மலர்தல் நன்றெனும்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் வீ. கந்தசாமி, ஆத்தூர்.

தானும்முன் னேறத்தன் தாய்நாடும் முன்னேற
வானும்மண் ணுந்தன் வசமாக—மானமறம்
மிக்கோங்க, மாற்றாரும் வேட்கும் படியாம்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—பூ. அண்ணாமலை, செஞ்சி.

வானம் சிறிதாகும் வாழ்வும் வளமனைத்தும்
தானளிக்குந் தீந்தமிழே, தாயே! உன்—மானஉரி
மைக்காகப் போரிடுதல் மாண்பாகும்! என்றும்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—காசிவிசுவநாதன், அச்சிறுபாக்கம்.

எப்படியும் வாழ்வதுதான் இவ்வுலக வாழ்வாமோ?
இப்படித்தான் வாழ்வென்றே, எல்லையிடல்—தப்பாமோ?
கைக்காக மோதிரம்போல் காதலுறுங் கொண்டகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன் கோட்டை.

மாசறு பொன்னே வலம்புரி மாமுத்தே
பேசும்பொற் சித்திரமே பேரழகே—கூசவைக்கும்
மைக்கண்ணில் தோன்றி மயக்கிடும் உன்புன்ன
கைக்காக வாழ்தல் கடன்.

—ஆர். உமா. சின்னாளப்பட்டி.

கண்ணால் கணைதொடுத்துக் காதல் தனைக்கொடுத்தீர்!
எண்ணச் சிறகிட்டேன் ஏழைநான்!—கண்ணாநீர்
தைக்காகக் காத்திருந்தீர்! தாங்கள் வரும்வரு
கைக்காக வாழ்தல் கடன்.

—கோ. ப. முருகநாதன், பி.ஏ., கோவை-22.

நாட்டை மதித்தல் நமதுரிமை ; தம்வயிற்றுப்
பாட்டை நினைத்தல் பரிதாபம்—வீட்டுநன்
மைக்காக வாழ்தல் மனையறம் ; என்றும்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

# வெண்பாப் போட்டி

என்னில் குடியிருப்பாள், என்துயரில் பங்கெடுப்பாள்
அன்னை வளர்த்ததுபோல் அப்படியே—என்னைவிழி
மைக்காட்டில் வைத்தாள், மனைவியெனும் அந்தமங்
கைக்காக வாழ்தல் கடன்.

—சு. ப. குமரப்பன், திருச்சி-2.

அன்னை எனக்கில்லை ; ஆன்றகல்விச் சாலைக்கோ
என்னை அனுப்பவும் தந்தையில்லை—பின்னேநான்
கைம்பெண்ணாய்க் கண்ணீரில் மூழ்கியுள்ள என்னுயிர்த்தங்
கைக்காக வாழ்தல் கடன்.

—கா. வாலிதாசன், புதூர்.

இறப்பால் இறுதி இருந்தும் மடமைப்
பிறப்பால் வெறுப்பான் பிறறை—சிறப்பில்லை
காக்கை கரைந்துண்ணும் காழ்ப்பில்லாக் காலவரு
கைக்காக வாழ்தல் கடன்.

—சோ. தமிழரசு, இராமநாதபுரம்.

துன்பங்கள் ஏராளம்! தூக்கிட்டுக் கொள்ளலாம்
என்னுமோர் எண்ணம் இருந்தாலும்—என்றனையே
கைக்காசு போக்கிமனம் காதலுடன் செய்தமங்
கைக்காக வாழ்தல் கடன்.

—இரா. பாரடே, காஞ்சிபுரம்-2.

ஈண்டு வருத்திய இன்மையும் இன்னலும்
மாண்ட(து) உணர்ந்துநம் மக்கள்தாம் —மீண்டு(ம்) மீண்டும்
வாக்களிப்பர் என்றரசு வைத்துள்ள நன்னம்பிக்
கைக்காக வாழ்தல் கடன்.

—இரா. இராமகிருட்டினன், பி.ஏ. பி.டி., கந்தர்வகோட்டை.

மண்ணீரும் வானும் மலையும் மருணிலமும்
வெண்ணிலவும் ஒன்தீ விரிசுடரும்—தண்காலும்
வைப்பாக என்றென்றும் வாழ்வோம் ; அவைவாழ்த்து
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் எம். மண்ணு, உத்திரமேரூர்.

கண்ணிய மாங்கடமை கட்டுப்பா டென்றண்ணு
கண்ட வழிசெல் கலைஞரொடு—கண்மங்கிக்
கைக்கோலை நம்பிவாழ் காலம் வரினுங்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ஆ. கலைச்செல்வன், கடலூர்-1.

வண்டிற்காய்ப் பூத்தல் மலர்க்கடன் ! அம்மலர்த்தேன்
உண்டுகரு வுண்டாக்கல் வண்டுகடன் !—தன்னரசே !
வாக்களித்தோம் எம்கடன் ! நீ வாட்டமுற்ற எம்புன்ன
கைக்காக வாழ்தல் கடன்.

—கோ. நெடுஞ்செழியன், பி.எஸ்சி., பி.டி., மேலைச்சேரி.

மொழியே உயிர்மூச்சு ; முன்னேற்ற மென்னும்
வழியே நெடும்பயண வாழ்வு ;—அழியாநன்
மைக்காகப் பாடு படலே நலமாங்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் அ. ஆறுமுகம், எம்.ஏ., பி.டி., இலப்பைக்குடிக்காடு.

கல்லில் சிலைவடித்துக் கற்கோவில் கட்டியிங்கு
இல்லாப் பொருளெல்லாம் ஈந்திங்குப்—பல்தொழில்வாழ்க்
கைக்காக வாழ்கின்ற மானிடனே ! லட்சியவாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—இரா. கோபால், அன்னப்பட்டி.

பைங்கூழின் பாலில்லை ; பாலூட்டுந் தெம்பில்லேன் ;
எங்கோவே யென் இறந்தால்? என்றாலும்—எங்கோ தாய் !
பொய்யுமுகிற் காண்பயிராய்ப் பேசவராச் சேய்க்குறுந
கைக்காக வாழ்தல் கடன்.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

பண்ணிசைத்துப் பாடுகின்ற பைங்குயிலே ! நீயிங்குக்
கண்ணசைத்து வாவென்று காட்டுகையில்—பண்ணிசைத்
தேன்
செக்கர்வா னம்போல் சிரிக்கின்றாய் உன்னுடன்வாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—மெய். அருள்மொழியன், முகவை மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
அறியாத தென்னே அறத்தார்—அறிந்துவறு
மைக்காக வாழ்ந்து மறுமையில் பெற்றால்ஈ
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் வ. ச. வடிவேல் முருகன், மதுரை மாவட்டம்.

தையில் மணமுடிப் பேன் தையலே என்றியம்பிக்
கையில் ' உறுதி ' செய்தார் காதலத்தான்—ஐயன்மீர்
தைக்குத்தை போயினியும் காணேன்! அவர்வரு
கைக்காக வாழ்தல் கடன்.

—எஸ். ஏ. கேசவன், புளியங்குடி.

காலில் நடுநடுக்கம் ; கையில் சிறுகுச்சி ;
தோலில் சுருக்கமெலாம் தோன்றியதே ;—பாலைப்போல்
மக்குமயிர் ; இனிமேல் மண்ணில் மரணக்கூ
கைக்காக வாழ்தல் கடன்.

—ஆர். ஜெயபால்; சென்னை 26.

எங்கும் தமிழ்முழக்கம், இன்பத் தமிழரசு
தங்கி விளைந்தோங்கத் தாழாமல்—பொங்கியே
கைக்கும் வறுமையிருள் காய்நிலவாய் நின்றுநல்வாழ்க்'
கைக்காக வாழ்தல் கடன்.

—பொ. காளியப்பன், போளூர்

ஆயிரம் விண்மீனால் ஆகும் பயனென்ன?
தூய ஒருநிலவால் தோன்றுமொளி !—சேயிழையே!
மொய்க்கப்பெற் றென்னபயன்? முன்கட்டுப் பாட்டுச்செய்
கைக்காக வாழ்தல் கடன்.

—மலை. மா. ஆறுமுகம், செங்கை மாவட்டம்.

ஆயகலை நூல்கள் அனைத்துணர்ந்தும் மாற்றானை
நாயினுங் கீழாக நத்தியே—தீயபொய்ம்
மைக்காக வாழ்தல்நல் மாண்பாமோ?—தூயவாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—சோ. சு. புவராசன், அரக்கோணம்.

நாளும் உடல்வளர, நன்நோக்க முங்குறிக்
கோளும் சிறிதேனும் கொண்டாயா?—மேலும்ஆ
சைக்காய் அலைகின்றாய், சிந்தையே ! நல்லகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—க. கிருட்டிணமூர்த்தி, அரிமளம்.

சின்ன இடையழகி செவ்வந்திப் பூவிழியாள்
அன்ன நடைபயிலும் வண்ணமயில்—அன்னையெனப்
பொய்க்காத அன்புடையாள் பூக்கும் இளம்புன்ன
கைக்காக வாழ்தல் கடன்.

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன், பி.ஏ.,
திருச்சி-2.

நாணுகின்ற தன்மையே நால்வகைச் செல்வத்தைப்
பேணுகின்ற பெண்ணுக்குப் பேர்தரும்—நாணுதலோய்!
கைக்கொண்ட ஆளன் கருத்தறிந்(து) அன்னான்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—கே. ஏ. அருச்சுனன், மதுரை-14.

ஈனத் தனமாக இவ்வுடலை ஓம்பிநித்தம்
மானங் கெடவாழ்தல் மாண்பாமோ?—ஞானமுற
முத்தமிழைப் போற்றி முழுமை யுயர்வாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—ஒளியரசன், கரூர்-2.

பாட்டன் தொகுத்ததுவோ பாடுபட்டுத் தன்னுழைப்பால்
ஈட்டக் கிடைத்ததுவோ இப்பணத்தைப்—பூட்டிநிதம்
வைக்காமல் நாடி வருவோர்க்கு நல்கிடும்ஈ
கைக்காக வாழ்தல் கடன்.

—சி. சௌ. கருப்பன், திருச்சி-15.

நான்மறைக்(கு) ஒப்பாக நந்தமிழர் தம்நாட்டில்
வான்புகழும் தேவன் வரைந்திட்டான்—தேன்துளிகள்
மொய்க்கும் சுவையுடைய மூத்த குறளின்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ஜெயபாலன், மதுரை-1.

# வெண்பாப் போட்டி

நிறஇன பேதங்கள் நீங்கும், மனிதர்
உறவினில் தோழமை ஓங்கும்—அறவழி
பொய்க்கா திலங்கும் பொதுமைப் புதுநலக்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ஏ. வேலு, விக்கிரமசிங்கபுரம்.

பெண்ணை விலைபேசும் பேதையர் வாழ்கின்ற
மண்ணை நினைத்திட்டால் மாய்ந்திடுவேன்—கண்ணே தங்
கைக்குக் களிமணநாள் காணும் வரைஉன்வாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—பி. மாரிமுத்து, ஒட்டப்பிடாரம்.

பாரிடையே சூழ்ந்துநிற்கும் போர்ஒழியும் ; வான்குளிர்ந்து
நீர்கொட்டும் ; முத்துமுத்தாய் நெல்விளையும்—ஆர்வமுடன்
பாமரரும் நன்னூல் படிப்பரென்ற நன்னம்பிக்
கைக்காக வாழ்தல் கடன்.

—வயி. அறிவுடை நம்பி, சித்தனேந்தல்.

அன்னை மணிவயிற்றில் ஐயிரண்டு திங்கள்தாம்
உன்னைச் சுமந்தா ளுயிரீந்தாள்—பின்னைவாழ்க்
கைக்கும் பெரிதுழைத்தாள்! அன்னையவள் நல்லவாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—இரா. கு. நடராசன், வேலூர்.

போர்புரியச் சென்றிடுவேன் பொற்கொடியே! நானழிந்தால்
ஆருயிராம் நம்மகனை ஆளாக்கிப்—பாரிதனில்
தக்கோன் எனவளர்ப்பாய், என்றாரே அக்கோரிக்
கைக்காக வாழ்தல் கடன்.

—குகதாஸ் விசுவநாதன், தூக்கநாயக்கன்பாளையம்.

வையந் தழைத்தோங்கி வாழ நினைப்பவர்கள்
கொய்த அறநெறியில் கொள்கையினை—நெய்தவர்கள்
கைக்காக வாழுங் கடைநகம்போல் தங்கள்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—ம. பிட்டர், நகரப்பட்டி.

செந்நீர் வியர்நீராய்ச் செங்கதிரோன் வெம்மையிலே
தன்மேனி வெங்கருப்பாய்த் தானாக—என்றுமுண்
மைக்காக வாழேழை மாண்புயரச் செய்யும்வாழ்க்
கைக்காக வாழ்தல் கடன்.

—அன்பு. செயராமன், அரக்கோணம்.

தேன்போலும் இன்சொல் தெளிவான எண்ணங்கள்
வான்போற்றும் நற்செய்கை வள்ளண்மை—மீன்பிறழ்நோக்
கைக்கொண்ட மான்விழியே! கற்றவர்கள் வேண்டும்கொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—சேவியர், காவேரி நகர்.

சிறுகுடும்பம் போதும் சிரிப்போடு வாழ!
பெருமைதரும் வாழ்வும் பிறக்கும்—கரும்புமனத்
தைக்கொண்டு காப்போம் தரணியினை என்றகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—விட்டல், கோவை-19.

விரைந்துவரு வேனென்றார் வேற்றாரைச் சார்ந்து
பெருந்துயரைத் தந்தெம் பெருமான்—பிரிந்தாற்றா
மைக்காக மானேனால் மற்றென் கனவில்வரு
கைக்காக வாழ்தல் கடன்.

—அ. குமரப்பன், சீர்காழி.

திக்கெங்கும் தோன்றாவன் தீரரொடு நற்செயலில்
மிக்காரும் இங்கேதான் மேம்பட்டார்—தக்காருண்
மைக்காக வாழ்ந்தார்கள் மாண்புற்றார் காட்டியகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—வா. க. சி. கமலக்கண்ணன், அமரபூண்டி.

உண்டு களித்தே உறங்கித் தினந்தோறும்
கண்ட பயனென்ன காரிகையே !—வண்டமிழ்நன்
மைக்கேற்ற தொண்டால் மகிழ்வடையும் நன்னம்பிக்
கைக்காக வாழ்தல் கடன்.

—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

சிங்கநிகர் செந்தமிழர் சீர்பெறவே தன்னுரிமைச்
சங்கமதைக் கண்ட தமிழ்ப்பெரியார்—தங்கத்தந்
தைக்காக வாழ்ந்த தமிழறிஞர் அண்ணாகொள்
கைக்காக வாழ்தல் கடன்.

—மறைமலரடியான், திருச்சிற்றம்பலம்.

சொந்தமொழி செந்தமிழைத் தூற்றிப் பலபேசி
வந்தமொழி இந்திக்கு வால்பிடித்து—தந்தபணப்
பைக்காக வாழ்வாரைப் பார்நீக்கி எந்தமிழ்நங்
கைக்காக வாழ்தல் கடன்.

—சி. வேலாயுதம், தஞ்சை.



# உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்

**4** நினைத்தேன்; நிறைவு பெறும்

லிங்கத்தின் வீடு, எந்தத் தெருவென்று சொல்ல முடியாதபடி, வடக்கு மந்தையை அடுத்து, தோப்புக்குள்ளே தனியாக இருக்கிறது. பரம்பரைச் சொத்தாகவே முல்லைக்கால் பாசனத்தில் நான்கு ஏக்கர் நன்செய் உண்டு.

மீனம்மா பாட்டியென்றால் அந்தக் கிராமத்தில் அறியாதவர்கள் இருக்க முடியாது. மீனம்மாளுக்கு, லிங்கத்தின் தகப்பன் பொன்னுச்சாமி ஒரே மகன். இளமையிலிருந்தே பொன்னுச்சாமி சீக்காளி. லிங்கத்துக்குப் பத்து வயது நடக்கும்போதே, ஒரே வருடத்தில் முன்னும் பின்னுமாகத் தாயையும் தகப்பனையும் இழந்து விட்டான்.

ஒற்றைக்கு ஒரு பேரனையும், காடு கரையையும், அன்றும் சரி, இன்றும் சரி, கண்காணித்து வருபவள் இந்த மீனம்மா பாட்டிதான். கிழவியின் கங்காணத்தில் கூலியாட்கள் கருத்துடன் பாடுபடுவார்கள். அறுவடைக் காலங்களில், பனியிலும், மழையிலும் களத்து மேட்டிலே கிடப்பாள்.

எதிலும் கரராக இருக்கும் இந்தக் கிழவி, கிராமத்திலிருக்கும் வரை முறையெல்லாம் கடந்து, உற்றம் சுற்றம் எல்லாம் ஒருவனாக இருக்கும் பேரனுக்கு, கட்டுப்பட்டுத் தாலியிழந்த அரசியை, எப்படி மறுமணம் செய்து கொள்ளச் சம்மதித்தாள் என்பது இப்பொழுதும் ஊருக்குள் விடுபடாத சிக்கலாகத்தான் இருக்கிறது.

முத்துப் பாண்டியனும், லிங்கமும், கோவணம் கட்டாத பருவத்திலிருந்தே கண்ணெதிரே ஓடியாடித் திரிந்தவர்கள். பொழுதுக்கும் இங்கேதான் ஓடி வந்து விடுவான் பாண்டியன். பெரிய வீட்டிலிருந்து தேடிவந்து அடித்து இழுத்துக்கொண்டு போவார்கள்.

லிங்கமும் அவனும் ஒரு தட்டிலே சோறுண்பார்கள்.

மீனம்மா பாட்டிக்கு முத்துப் பாண்டியனிடம் தனிப்பட்ட பாசம் இருக்கத்தான் இருக்கிறது. விவரம் தெரிந்த பருவத்திலிருந்தே, இந்தப் பாட்டியிடம் பாண்டியன் எதையாவது சொல்லிக் கொண்டே இருப்பான். பாட்டியும் கேட்டுக்கொண்டே இருப்பாள்.

அப்படியே—என்றைக்குமே கேட்டுக் கொண்டிருக்க வைத்து விட்டானே பாண்டியன்.

இவனும்—அவனுமாகக் கூட்டுச் சேர்ந்து, ஒரு பொழுதுக்குள், மூச்சைப் பிடித்தது போல, அந்தப் பரபரப்பூட்டும் முடிவைப் பற்றி நினைத்துப் பார்ப்பதற்குக் கூடச் சந்தர்ப்பம் கொடுக்காமல், பாண்டியனது பேச்சு மயக்கத்திலே கிழவியை மூழ்க வைத்து, அதிகாலையில் சொல்லி, மாலைப் பொழுதுக்குள் திருமணம் முடிந்து, கழுத்தில் மாலையோடு வந்து நின்றார்கள்.

கிழவி என்ன செய்வாள்?

முற்பகலில், வீட்டின் முன் கூடத்திலே கால்களை நீட்டி உட்கார்ந்து விட்டாள் மீனம்மா பாட்டி.

மனது அதையே தான் நினைத்துக் கொண்டிருக்கிறது.

ஆதியிலேயே, அரசியைப் பேரனுக்குக் கட்டி வைக்க வேண்டும் என்ற எண்ணம், கிழவிக்கு உள்ளூர இருக்கத்தான் செய்தது. 'பெரிய வீட்டில், அவ்வளவுக்குத் துணிந்து பெண்ணைக் கொடுப்பார்களா? என்ற நினைவில் வாய் திறக்கவில்லை.

அதற்குப் பிறகுதான், கட்டிக் கழித்து, இப்படியொரு போராட்டத்துக்குப் பிறகு, அந்தப் பெண்ணே, இந்த வீட்டிற்கு வர வேண்டுமென்று காத்துக் கொண்டிருந்ததே!

உள்ளூரிலே மீனம்மாளுக்கு ஒன்றுவிட்ட தம்பி முத்தையா என்றைக்குமே அப்படி ஒட்டுதலாகவும் இருந்தது கிடையாது. இருந்தாலும், உறவுமுறை விட்டுப் போகக்கூடாது என்பதைக் கொண்டு, முத்தையாவின் பேத்தி பெண் பூமயிலை, பேரன் லிங்கத்துக்குக் கட்டி வைக்கும் முடிவோடு, பேச்சும் தொடங்கி, முத்தையாவும் அடிக்கடி இங்கே வந்து போய்க் கொண்டிருந்தான்.

தட்டிப் பறித்தது போல, பேரனுக்கு இப்படியொரு முடிச்சு விழுந்து விட்ட பிறகு, முத்தையா கருவிக்கொண்டே தான் இருக்கிறான். அவனுக்கு நல்லதையே நினைக்கத் தெரியாது.

அன்றைக்குக், கோவில் வாசலில் நின்று கொண்டிருந்தவன், பாதை வழி வரும்போது காறித் துப்புகிறான்.

இந்தக் கண்ணுக்குப் பிறகு, இப்படி ஊரையே பகைத்து, தனித்து நின்று பேரன் என்ன செய்யப் போகிறானோ?

பாட்டி, குனிந்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

இத்தனைக்கும் நடுவில் இங்கே வாழவந்த பெண்ணுக்கு, எந்த நேரமும் முகம் இருளடைந்து கிடக்கிறது. இப்படி இருந்தால் வீடு நிறையுமா?

அப்போது, ''பாட்டி'' என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் மீனம்மா பாட்டி. பின்னால் அரசி நின்று கொண்டிருந்தாள்.

'' வெந்நீர் வைக்கட்டுமா பாட்டி'' என்று கேட்டாள்.

அவளைத் திரும்பிப் பார்த்த போது, பாட்டிக்குக் கோபம் தான் வந்தது.

'' என்னமோம்மா—எனக்கு எதுவும் புரியலே. நீ என்னக்கி கலகலன்னு இருக்கப் போறியோ—அப்பத்தான் இங்கேயும் விடியப் போகுது'' என்றாள் பாட்டி.

அரசி, குனிந்து முகத்தைத் துடைத்துக்கொண்டே, ''அடுப்படியிலே இருந்தேன் பாட்டி'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''அதான் தெரியுதேம்மா. அங்கே நின்னுதான் அழுதுக்கிட்டிருக்கே. அவனும் அழட்டும் நானும் சேர்ந்துக்கிறேன். அழுதுக் கிட்டே இருப்போம்'' என்றாள் பாட்டி சற்றுக் கோபமாக.

அரசி தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தாள். அவளது கண்கள் கலங்கின. பேசாமல் திரும்பி உள்ளே போய் விட்டாள்.

பாட்டிக்கும் கண்கள் கலங்கின.

நடக்காதது நடந்துபோச்சு.

இத்தனை காலமாக எல்லாத்தையும் கட்டிக் காத்திட்டு, பால் பொங்க வேண்டிய நேரத்திலே மெத்தனமா இருக்கலாமா?

இருந்தாச்சு.

வாசலிலே ஆளரவம் கேட்டது.

'' நான்தான் பாட்டி'' என்று சொல்லிக்கொண்டே படியேறி வந்தான் பாண்டியன்.

'' வாடாப்பா — இப்பத்தான் நினைச்சேன். நீயும் வந்து நிக்கிறே. இந்தப் பக்கமே வர்றதில்லையின்னு வச்சிட்டியா? '' என்று கால்களை மடக்கி வரவேற்புக் கொடுத்தாள் பாட்டி.

'' பொண்ணு கொடுத்த வீட்டுக்கு அடிக்கடி வரலாமாபாட்டி'' என்று கேட்டுப் பாட்டிக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டான் பாண்டியன்.

'' நீ என்ன லேசுப் பட்டவனா? இந்த வயசிலே பேசிப் பேசி எத்தனை காரியத்தைச் சாதிச்சிருக்கே.'' என்றாள் பாட்டி சற்று ஆத்திரத்தோடு.

'' எல்லாத்திலேயும் உங்க ஆசிதான் அடிப்படையா இருந்திருக்கு பாட்டி. இனிமேலும் இருக்கும். இந்த நம்பிக்கை எப்பவும் எனக்கு இருக்கு'' என்றான் பாண்டியன் புன்னகையுடன்.

அவனுக்குத் தெரியும் பாட்டியைக் குளிர வைக்கும் விதம்.

அதற்குள்ளாகப் பாண்டியனின் குரல் கேட்டு, அரசி முன் பக்கம் ஓடிவந்து, 'வாங்கண்ணா' என்றாள்.

பாண்டியன் தங்கையை ஏறிட்டுப் பார்த்தான். பார்வை அவளது முகத்திலேயே தயங்கியது.

சிரிக்க முயற்சிக்கிறாள். அது சிரிப்பாக இல்லையே. தலையைச் சீவி முடித்து இரண்டு நாட்களாவது ஆகி இருக்க வேண்டும். நெற்றியில் வைத்திருந்த குங்குமம், வியர்வையில் கரைந்து, காயம் பட்டு விட்டதைப்போல புருவத்திலே வழிந்திருக்கிறது.

தமையன் தன்னையே பார்ப்பதைக் கண்டு, அரசி, வாய் திறக்காமலே தலை குனிந்து கொண்டாள்.



பாண்டியன் இடையிலிருந்த பாட்டியைப் பார்த்தான்.

ஒன்றும் சொல்லவில்லையானாலும் அவள் இருக்கும் கோலத்தைப் பாருடா?' என்று சொல்லுவது போலிருந்தது.

''உன் முகத்தைக் கண்ணாடியிலே பார்த்துக்கிறதே இல்லையாம்மா?'' என்று தங்கையின் முகம் பார்த்துக் கேட்டான் பாண்டியன்.

அரசி சிரிக்கத்தான் செய்தாள்.

''சமையல் ஆகிக்கிட்டிருக்கு. முடிச்சதும் சீவி முடிச்சுக்கணும்''

''நானும்தான் சொல்லிச் சொல்லி அலுத்துப் போயிட்டேன்'' என்று பாட்டி இடையிலே சொன்னாள்.

''சாப்பிடுங்கண்ணா'' என்று சொல்லிவிட்டு அவசரத்தோடு உள்ளே திரும்பினாள் அரசி.

''அரசி சின்னப் பொண்ணு. உங்க கண்ணுக்கு முன்னாலே வளர்ந்த பேத்தி தானே.'' என்ற பாண்டியன், பாட்டியின் மறுமொழியை எதிர்பாராமலே, ஒரு வேகத்தோடு, தங்கையைத் தொடர்ந்து வீட்டுக்குள்ளே சென்றான்.

''அப்படி நினைச்சுத்தான் மெல்லவும் முடியாம விழுங்கவும் முடியாம உட்கார்ந்திருக்கேன்'' என்று மீனம்மா பாட்டி பெருமூச்சோடு சொன்னது அவனது காதுகளில் விழுந்திருக்காது.

சமயலறைக்கு முன்னால் தொட்டி முற்றத்தில், பரபரப்போடு தன் முகத்தைக் கழுவிக் கொண்டு திரும்பியபோது, பின்னால் பாண்டியன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திகைத்துப்போய்விட்டாள் அரசி.

''நம்ம வீட்டுக்குப் போயிருந்தீங்களாமே அண்ணா?'' என்று கேட்டாள்.

''பொதுக் காரியத்துக்காகப் போயிருந்தேன்'' என்றான் பாண்டியன்.

''அம்மாவைப் பார்த்திங்களா?'' என்று குழந்தையைப் போல அவசரத்துடனே கேட்டாள் அரசி.

''இப்ப அம்மாவைப் பாக்கணும்ங்கிறது முக்கியம் இல்லை அரசி'' என்றான் பாண்டியன்.

அரசி ஒன்றும் சொல்லாமல் தலை குனிந்து கொண்டாள். இமைகளில் நீர் கோர்த்து மினுமினுத்தது.

''உனக்கு இங்கே என்ன குறையம்மா இருக்கு. எதை நினைச்சு நீ கண் கலங்குறே'' என்று கேட்டான் பாண்டியன்.

''ஒரு குறையும் இல்லையே'' என்றாள் அரசி தலை நிமிராமல்.

''நீ சொல்ற பதில் திருப்தியா இல்லையே? நீ எதையோ நினைச்சுப் பொருள் இல்லாமக் கவலைப்படுறேங்கிறது புரியுது'' என்றான் பாண்டியன்.

பொங்கி வந்த கண்ணீரைத் தமையனுக்கெதிரே துடைத்துக் கொள்ள பயந்தபோது, கன்னங்களில் வழிந்தோடியது.

''பக்கத்திலே இருந்துக்கிட்டு, அப்பாவையும், அம்மாவையும் பார்க்க முடியலைங்கிறது எனக்கு வேதனையா இருக்கு. என்னாலே மறக்க முடியலையே'' என்றாள் அரசி.

அவளையே பார்த்துக்கொண்டிருந்த பாண்டியன், ''இந்தக் கவலையை லிங்கத்துக்கிட்டேயாவது மனம் விட்டுச் சொன்னியாம்மா'' என்று கேட்டான்.

அரசி தலையசைத்தாள்.

பாண்டியன் சொன்னான்.

''உனது கண்ணீரைப் பற்றி லிங்கம் எங்கிட்டச் சொல்லி இருக்க வேண்டியவன். சொல்லலே. அவன் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரமாட்டான். இன்னும் சின்னப் பொண்ணு இல்லையம்மா நீ. ஒருத்தனுக்கு வாழ்க்கைத் துணைவி. உன் கடமையை நீ உணரணும். உளுத்துப் போன பழைய சம்பிரதாயத்தை எதிர்த்து, ஊரையே பகைச்சு, துணிவே துணையின்னு வாழ்றதுக்கு அடியெடுத்து வச்சிருக்கோம். நாம வாழ்றது பின்னாலே வர்றவங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டா இருக்கணும்'' என்றான்.

''இனிமே எதை நினைச்சும் கலங்க மாட்டேண்ணா'' என்றாள் அரசி ஏறிட்டுப் பார்த்து.

''தங்களுக்குன்னு, தனியா ஒரு கௌரவம் இருந்திச்சே, அது போச்சேன்னுதான் அவங்க குமுறிக்கிட்டு இருக்காங்க. பெற்ற மகளோட வாழ்வைப் பத்திக் கவலைப்படலே. இனிமேலும் அடுக்கடுக்கா ஒவ்வொரு நாடகத்தையும் நடத்தி வைக்க நேரம் பார்த்துக் காத்திருக்காங்க. நாங்க எதையும் தாங்கிக்க எதிர்பார்த்து நிக்கிறப்ப, நீ அப்பாவையும் அம்மாவையும் நினைச்சு வேதனைப்படுறது வேடிக்கையா இல்லையா?'' என்று கேட்டான் பாண்டியன்.

''இனிமே நம்மை என்ன செய்யப் போறாங்களாம்'' என்று கேட்டாள் அரசி.

பாண்டியன் சிரித்தான்.

''எதுவும் செய்யலாம். எதிர்பார்த்துக் கிட்டுத்தான் இருக்கணும். ஆனா எதுக்காகவும் கண் கலங்கக்கூடாது'' என்றான் பாண்டியன்.

அரசி ஏதோ சொல்ல எத்தனித்தபோது, முன்பக்கமிருந்து பாட்டி அழைக்கும் குரல் கேட்டது.

''பாட்டி என்னமும் கடிந்து சொன்னாலும், எதையும் மனசிலே வச்சுக்காம கலகலப்பா இருக்கணும். இப்ப, தாய், தகப்பன் எல்லாமே பாட்டிதான்'' என்று சொல்லிவிட்டு, அரசி பின் தொடர வாசல் பக்கமாக வந்தான் பாண்டியன்.

வெளித் திண்ணையிலே, மைக்கேலின் மகன் பீட்டர் பாட்டியோடு பேசிக்கொண்டிருந்தான்.

''உடனடியா உன்னைப் பாக்கணுமாம். தவியாத் தவிக்கிறானே இவன்'' என்றாள் பாட்டி பாண்டியனைத் திரும்பிப்பார்த்து.

''எங்கேயெல்லாம் தேடிக்கிட்டு வாரேன். வாங்க சார்'' என்று பாட்டியைத் தொடர்ந்து பீட்டரே ஆரம்பித்தான்.

பீட்டருக்குப் பதினாறு வயதிற்கு மேலிருக்கும். இன்னமும் கால் சராய் போட்டுக் கொண்டுதான் திரிகிறான். எதிலும் வயதுக்குத் தகுந்த விநயம் இருக்காது அவனுக்கு. அவனோடு பேசிக் கொண்டிருந்தால் சிரிப்போடு பொழுதுபோகும்.

''என்ன சங்கதி பீட்டர்'' என்று பாண்டியன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

''வாங்க சார் போவலாம். ரொம்ப அவசரம்'' என்று சொல்லிக் கையைப் பிடித்து இழுப்பவனைப் போல நெருங்கி வந்தான் பீட்டர்.

பாண்டியன் பாட்டியைத் திரும்பிப் பார்த்தான்.

''போயிட்டு வாரேன் பாட்டி'' என்றவன், அரசியைத் திரும்பிப் பார்த்து, "லிங்கம் வந்ததும் வரச் சொல்லம்மா'' என்று சொல்லிவிட்டு, பீட்டர் பின்தொடர படிகளில் இறங்கி நடந்தான்.

''இந்த லூஸ் பய பின்னாலே இவன் எதுக்குப் போறான்'' என்று மூக்கிலே விரலை வைத்துக் கேட்ட பாட்டி, அரசியைத் திரும்பிப் பார்த்தாள்.

திண்ணையின் விளிம்பிலே, தூணைப் பிடித்தவாறு நின்ற அரசி, இருவரும் நடந்து செல்வதையே இமையாது பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது உதடுகளிலே புன்னகை தவழ்ந்தது.

(வளரும்)

## முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

**TANSI**

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழி-ற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

### தொழில்

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக் கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனுமல், டிசிசி கம்பிகள்

### விவசாயம்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை யேற்றங்கள்
- கரும்பாலை
- வடிகுழாய்க் குழாய்கள்

### அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

### ஏற்றுமதி

- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

# கல்லெழுத்துக் கற்க...



தமிழகத்தில் பல்வேறு இடங்களில் காணக்கிடைக்கும் கலைச் செல்வங்களையும் வரலாற்றுச் சின்னங்களையும் போற்றவும் வேண்டும் என்பது நம் பேரன்பு மிக்க தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆர்வமாகும். அன்று கலை ஆர்வம் மிக்க அரசர்களாலும், அவர்கள் தேவியர்களாலும், பிறராலும் உலகம் வியக்கும் வகையில் தோற்றுவிக்கப்பட்ட கலைப் படைப்புகளின் பெருமையை கலை உள்ளம் படைத்த பெருந்தகையால்தானே அறிந்து செயல்பட முடியும்! அவர்கள் அளித்து வரும் ஊக்கத்தினால் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை தமிழக கலைச் செல்வங்களையும், வரலாற்று சின்னங்களையும் பாதுகாக்கும் பணியில் சிறப்பாக ஈடுபட்டு வருகிறது.

தமிழகத்தில் கோயில்களிலும், ஏராளமானகல்வெட்டுகள்காணக் கிடைக்கின்றன. சுமார் 30,000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 6,000 கல்வெட்டுகளின் வாசகங்களே முழுமையாக அச்சிடப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுகள் தமிழக வரலாற்றை அறிவதற்கும் தமிழ் மொழியில் காலப் போக்கில் ஏற்பட்ட ஒரு சில மாறுபாடுகளை அறிவதற்கும், கட்டட அமைப்பிலும் கலை வரலாற்றிலும் ஏற்பட்ட வளர்ச்சிகளை அறிந்து கொள்ள மிகவும் இன்றியமையாதவை. தமிழக அரசர்கள் அன்று எவ்வாறு அரசாட்சி செய்தனர் என்பதையும், அன்றிருந்த அதிகாரிகளின் பொறுப்பு யாது? ஊர்ச் சபைகள் எவ்வாறு பணிபுரிந்தன? ஊர்ச் சபைக்கும் அரசுக்கும் இருந்த தொடர்புகள் எத்தகையவை? ஊர்ச் சபைக்கும் தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு யாது? முதலிய இன்றியமையாத வரலாற்றுச் செய்திகளைக் கல்வெட்டுகளிலிருந்துதான் அறிந்து கொள்ள முடியும்.

**இரா. நாகசாமி.**

இக்கல்வெட்டுகள் அனைத்தும் இன்றைய எழுத்துக்களில் இல்லை. எழுத்துகள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரையில் காலப் போக்கால், எழுதியவரின் பழக்கத்தால், எழுதப்பட்ட பொருளின் தன்மையால், பல்வேறு மாற்றங்களைப் பெற்று வந்துள்ளது. ஆதலின் பண்டைய கல்வெட்டுகளைப் படிக்க பண்டைய எழுத்துக்களின் அமைதியும், வளர்ச்சியும் பற்றி அறிதல் தேவை. அத்துடன் தமிழகத்தில் கி.பி. 600-லிருந்து இன்று வரை எடுப்பிக்கப்பட்ட கோயில்களும், சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும், ஓவியங்களும் ஏராளம் இருக்கின்றன. இவை அன்றைய மக்களின் வாழ்வோடு பிணைந்து நின்றவை. இவற்றையும் வரலாற்றின் அடிப்படையிலே அறிந்துகொள்வது மிகமிகத் தேவையான ஒன்றாகும்.

பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் பல தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இடிந்தும் அழிந்தும் போகும் நிலையில் உள்ளன. கல்வெட்டுகள் வண்ணம் பூசப்பட்டும், சிமெண்ட் பூசப்பட்டும் மறைக்கப்படுகின்றன. சிற்பங்கள் சிதைக்கப்படுகின்றன. இவை, இவற்றின் அருமை பெருமை தெரியாத காரணத்தாலும், அறியாமையின் காரணத்தாலும் அழிக்கப்படுகின்றன. ஆதலின் வரலாற்றைச் செவ்வனே அறிந்து கொள்வதற்கும், வருங்காலச் சந்ததியினர் இவற்றைப் போற்றிப் பாதுகாக்கும் அறிவு பெறவும், அவற்றை மக்களிடையே எடுத்துக் கூறுவது இன்றியமையாத பணியாகிறது. இதை மனத்தில் கொண்டு தமிழகக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் கல்வெட்டுகளை அனைவரும் படிக்கவும், கலைப் பெருமையை அறிந்து கொள்ளும் வகையில் ஒரு பயிற்சியை தமிழக அரசோடு நடத்த வேண்டுமென்றும், அதை இத்துறை எடுத்துச் செயலாற்ற வேண்டுமென்றும் பணித்தார்கள். அதை ஏற்று இத் துறை கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயலாற்றி வருகிறது.

தமிழக அரசு தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்களில் சுமார் 40 பேர்களுக்குப் பயிற்சி கொடுக்க வகை செய்து, சென்ற ஆண்டு, கோடை விடுமுறையில் மே மாதம் மூன்று வாரங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி அளிக்கப்பட்ட மூன்று வாரங்களில் முதல் வாரம் தமிழக எழுத்துகள், வரலாறு, கலை, தொல்லியல் பற்றிய வகுப்புகள் நடத்தப்பட்டன. பண்டைய தமிழ் எழுத்துக்களையும், வட்டெழுத்தையும் எழுதவும் படிக்க



ஆனைமலையிலுள்ள தீர்த்தங்கர் சிலைகளையும் கல்வெட்டுகளையும் காணும் காட்சி

வும் பயிற்சியளிக்கப்பட்டது. பிற எழுத்துக்களின் வளர்ச்சியும், தமிழகக் கல்வெட்டுகளில் அமைதியும், கல்வெட்டுகளைக் கொண்டு வரலாற்றை அமைப்பது எப்படி, கலையை அறிந்து கொள்வது எப்படி , என்பதும் கற்றுத் தரப்பட்டன. கோயில்கள் ஏன் தோற்றுவிக்கப்பட்டன ? எவ்வாறு தோற்றுவிக்கப்பட்டன ? யாரால் தோற்றுவிக்கப்பட்டன ? அங்கு வழிபாடு எவ்வாறு நடைபெற்றது ? இசையும், கூத்தும் இக்கோயில்களில் பெற்றிருந்த பங்குகள் யாவை ? முதலியனவும் போதிக்கப்பட்டன. இரண்டாவது வாரம் பயிற்சியில் பங்கு பெற்றவர்களைக் கடல்மல்லை, காஞ்சி, திருவதிகை, தில்லை, கங்கை கொண்ட சோழபுரம், குடந்தைக் கீழ்க்கோட்டம், தாராசுரம், திருப்புறம்பியம், திருப்பழனம், திருவையாறு, தஞ்சை, சித்தன்னவாசல், கொடும்பாளூர், குடுமியாமலை, திருப்பரங்குன்றம், ஆனைமலை, மதுரை, திருச்சி, திருவரங்கம், ஆகிய இடங்களிலுள்ள வரலாற்றுச் சின்னங்களுக்கு நேர்முகமாக அழைத்துச் சென்று, அங்குள்ள கட்டட அழகையும், கல்வெட்டின் பெருமையையும், சிற்பங்களின் எழிலையும், செப்புத் திருமேனிகளின் பண்பையும் நேர்முகமாக எடுத்துரைக்கப்பட்டது. கல்வெட்டுகளைப் படியெடுக்கும் முறையும் ஆங்காங்கு கற்பிக்கப்பட்டது.

மூன்றாவது வாரத்தில் தமிழக வரலாற்றைக் கால அடிப்படையில் அதே காலத்தில் இந்தியாவின் வடபால் திகழ்ந்த அரசுகள், கலைகள், கல்வெட்டுகள் முதலியனவும் கற்பிக்கப்பட்டன. தமிழக வரலாற்றை முதலில் அறிந்து பின்னர் அதன் மூலம் பிற இந்திய வரலாறுகளை அறியும்போது அவைகளைத்தெளிவாகவும், விரிவாகவும் அறிந்து கொள்ள முடிந்தது. மூன்று வாரங்கள் பயிற்சி பெற்றவர்களுக்கு இறுதியில் சான்றிதழ் நல்கப்பட்டது. பயிற்சியில் பங்கு பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 வீதம் உதவித் தொகை தமிழக அரசு அளித்தது. தவிர மேலே குறித்த வரலாற்றுச் சிறப்புடைய இடங்களுக்கு அரசின் செலவிலேயே பங்கு பெற்றவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். சென்ற ஆண்டு பங்கு பெற்றவர்களில் பெண்கள் நான்கு பேர்களாவர். கல்லூரி பயிலும் மாணவியர் இருவரும் இப்பயிற்சியில் பங்கேற்றனர். சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தமிழ்த்



தொல்பொருள் ஆய்வுத்துறையின் கல்வெட்டுப் பயிற்சிமுகாம் நிறைவு விழாவில் நானும் கலந்து கொண்டு, ஏராளமான பணிகளுக்கிடையில் என் இதயம் கவர்ந்த பணிகளில் இதுவும் ஒன்று என்ற நிலையில் உங்களோடு சில மணித்துளிகளைக் கழிப்பதில் மிகுந்த பெருமை அடைகின்றேன். எத்தனையோ தொல்லைகள் இருந்தாலும், அவைகளிலிருந்து ஓரளவு விடுபட்டுச் சற்று நிம்மதி காணுகின்ற நல்ல இடமாக எனக்குத் தோன்றுகின்ற இடம், தமிழ்ச் சான்றோர்கள் கூடியிருக்கின்ற இவை போன்ற இடங்களாகும்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு தொல்பொருள் ஆய்வுத் துறை அமைக்கப்பட்டு அது தன்னுடைய கடமையைச் செவ்வனே செய்து வருகின்றது. மேலும் அது சிறப்புற வேண்டிய வகையில்தான் இன்றைக்குக் குமரி மாவட்டத்தினுடைய கல்வெட்டுகளைப் பற்றிய நூலொன்று அறநிலையத் துறை அமைச்சரால் வெளியிடப்பட்டு இருக்கின்றது.

இருக்கின்ற பன்னிரண்டாயிரம் ஆலயங்களில் அவை குறைவானவை அல்ல. ஆனால் நூறு ஆலயங்கள், தஞ்சாவூரில் இராஜராஜன் கட்டிய இராஜராஜேஸ்வரத்தைப் போல, கங்கை கொண்ட சோழபுரத்தைப் போல வேலூரில் இருக்கின்ற ஆலயத்தைப் போல, கோட்டைக்குள்ளே இருக்கின்ற ஆண்டவன் இல்லாத ஆலயம் என்று சொல்லுகிறார்களே, அப்படிப் பட்ட ஒரு நூறு அல்லது நூற்று இருபத்தைந்து ஆலயங்கள் மாநில அரசினருடைய பொறுப்பிலே இல்லாமல், மத்திய அரசின் பொறுப்பிலே இருக்கின்றன.

நான் இங்கே சொல்லுவதெல்லாம் ஆதிக்கச் சுமைகளை மத்தியிலே இருப்பவர்கள் தலையிலே சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எதற்காக அதிகச் சுமைகளை மத்தியிலே குவித்து வைக்க வேண்டும் ?. இந்த நூறு கோயில்களையும் நீங்களே பாதுகாத்து வாருங்கள் என்று எங்களுக்குக் கட்டளையிடலாமே ! இந்த அதிகாரத்தை ஏற்கக்கூட மாநில அரசு தகுதியற்றதாக்கப்படுவதா ? தொன்மையைப் பேணிக் காப்பதில் நாம் யாருக்கும் சளைக்காதவர்கள் நமது தமிழ்நாட்டிலுள்ள கலைச் செல்வங்கள் மிக உயர்ந்தவை; சிறந்தவை ! பெருமைக்குரியவை ! அந்தக் கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாக்கின்ற பொறுப்பு தமிழ்நாட்டிலே இருக்கின்ற நமக்கு இருப்பதைவிட வேறு ஒருவருக்கும் இருக்கும் என்று யாரும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆகவே அந்தப் பொறுப்புகளை நாம் மேலும் மேலும் ஏற்பதற்கு நம்முடைய பணியிலே தீவிரப் படவேண்டும்.

[22—5—1972-ல் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தொல்பொருள் ஆய்வுத் துறையின் கல்வெட்டுப் பயிற்சி முகாம் நிறைவுவிழாவில்முதல்வர் ஆற்றிய உரையில் ஒருபகுதி.]

துறை ஆராய்ச்சி மாணவர் ஒருவரும் இதில் பங்கு பெற்றார்.

இப்பயிற்சி முடிந்தவுடன் தன் ஊருக்குச் சென்றவர் தன் ஊரில் ஒரு நடுகல் இருப்பதை இத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதன் அடிப்படையில் அப்பகுதியாகிய செங்கம் வட்டத்திற்கு சென்று இத்துறை ஆய்வு செய்தபோது இதுகாறும் கிடைத்திராத நடுகற்கள் அறுபது, கல்வெட்டுகளோடு கூடியவை இத்துறையால் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இந் நடுகற்கள் தமிழ் இலக்கியத்திற்கும், வரலாற்றிற்கும் சிறந்த செய்திகளை எடுத்து அளித்து வருகின்றன. தமிழக அரசு இத்துறையில் எடுத்துக்கொண்டுள்ள முயற்சி பயனளிக்கத் தொடங்கியுள்ளது என்பது இதிலிருந்து தெள்ளிதின் விளங்கும்.

இரண்டாவது ஆண்டாக இவ்வாண்டும் கோடையில், கல்லூரி பேராசிரியர்களுக்கும் பள்ளி ஆசிரியர்களுக்கும் மே 2-ஆம்தேதி தொடங்கி 22-ஆம் தேதி வரையில் இப்பயிற்சி தமிழக அரசால் நடத்தப்பட்டது. மாண்புமிகு நாவலர் அவர்கள் தலைமையில், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார்கள். 22-ஆம் நாள் நிறைவு விழாவுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அன்போடு தலைமையேற்று பயிற்சியில் பங்கு கொண்ட ஆசிரியப் பெருமக்களுக்குச் சான்றிதழ் நல்கியதோடு, தமிழகக் கலைகள் என்னும் அரும் நூலையும் வெளியிட்டு அருளினார்கள்.

இவ்வாண்டு பயிற்சியில் ஒரு சிறப்பு. தமிழகக் காவல் துறை புலனாய்வுப் பிரிவைச் சார்ந்த துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு சந்திரமௌலி அவர்கள் இந்தப் பயிற்சி பெற்றார்கள். பண்டைய கலைச் சின்னங்கள் களவு போவதைத் தடுப்பதில் தமிழக அரசு முன்னணியில் நிற்கிறது என்பது அனைவரும் அறிந்த விஷயம். சிலைகள் களவு போவதைத் தடுப்பதற்காகத் தமிழக அரசு தனியாக ஒரு சிறப்புப் பகுதியைப் புலனாய்வுப் பிரிவில் அமைத்துள்ளது. அதிலுள்ளவர்கள் இப்பயிற்சி பெறுவதால் கலைப் பொருட்களின் கடத்தலைக் கண்டுபிடிக்கச் சிறந்த ஆற்றல் ஏற்படும். இந்தியாவிலேயே காவல் துறையைச் சார்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் இவ்வாறு பயிற்சி பெறுவது இதுவே முதல் தடவையாகும். தமிழக அரசின் ஆர்வம் காரணமாக இன்னும் சில அதிகாரிகள் இப்பயிற்சி பெற இருக்கின்றனர். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பயிற்சி பெற்ற மாணவர்கள் தமிழ் எழுத்திலும், வட்டெழுத்திலும், வரவேற்பு ஒன்றினைப் படித்தளித்தார்கள். தமிழக முதல்வர் அவர்கள் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதில் தமிழக அரசு எடுத்துள்ள சிறந்த முயற்சிகளையும், மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறை எடுத்துள்ள சீரிய முயற்சிகளையும், தமிழகச் சிற்பங்களின் கல்வெட்டுகளின் அமைப்புகளையும் பற்றி ஒப்பற்ற சிறப்புரை ஆற்றினார்கள். தன் எருமைகளைக் காத்து நின்ற வீரன் ஒருவனைக் கள்வர்கள் அடித்து வீழ்த்த அவன் அருகில் நின்ற நன்றி மறவாத நாய் கள்வர்களைக் கடித்துத் துரத்தியதை ஒரு நடுகல் குறிக்கிறது. அந்நடுகல்லை வரலாற்று ஆசிரியர்களும் வியக்கும் வண்ணம் முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.



தாராசுரம் கல்வெட்டின் தோற்றம்

இதுபோன்று ஆசிரியர்களுக்கு ஓர் ஆண்டுக்காலத்திற்குச் சிறப்பு பயிற்சி அளிக்க இத்துறையின் கீழ் ஒரு நிரந்தர ‘கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்’ (Institute of Epigraphy) ஒன்று நிறுவ வேண்டும் என்று நாவலர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அதன்படி ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது நிறுவப்பட்டவுடன், தமிழகக் கல்வெட்டுகள் மட்டுமின்றி தமிழகத்தோடு அக்காலத் தொடர்பு கொண்ட ஈழம், கடாரம், இன்னம் கீழை நாடுகள் முதலிய இடங்களில் காணப்படும் எழுத்துகளும், வரலாற்றுத் தொடர்புகளும் சிறப்பாக ஆராய வழிவகை ஏற்படும்.

Your deposits with

**THE TAMIL NADU STATE CO-OPERATIVE BANK LTD., MADRAS**

Assist the bank to finance agriculture and agro-industries which form the backbone of the Nation's economy.

*Schedule of Rates.*

| | Per cent per annum. |
|---|---|
| Current Account | 0·50 |
| Savings Bank account (on monthly minimum balances) | 4·00 |
| **SEASON DEPOSITS**—Rs. 1,000 and over | |
| 15 days | 2·00 |
| 46 days | 3·00 |
| **FIXED DEPOSITS**—Rs. 100 and over | |
| 91 days | 4·75 |
| 6 months | 5·25 |
| 12 months | 6·25 |
| 24 ,, | 6·75 |
| 36 ,, | 7·25 |
| 60 months and over | 7·50 |

*Additional*—1/2 per cent per annum for deposits of *Charitable, Religious, and Educational Institutions.*
*Interest Paid Monthly* on Rs. 1,000 and over and for periods of one year , nd over.

**RECURRING DEPOSITS**—

Rs. 5 per month in

| Months | | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Yields | Rs. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

*Local Branches*—Mylapore, Egmore, Triplicane, T. Nagar, Gandhinagar, Shenoynagar, Greenways Road, Kellys. Santhome, Mylapore Tank, Shastrinagar, Anna Salai (Kamadhenu), Ashok Nagar, Anna Nagar, Anna Salai (Anna Silai)

Opening shortly: Nungambakkam and Jawaharnagar.

R. KANAKASABAI,
*Chairman.*

P. N. T. CHARY,
*Secretary.*



**காலக் கண்ணாடி**

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத் தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங் களும், பிற தஸ்தாவேஜுகளுமே, சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த ' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

# வாழ்வோர் யார்?





எழுந்தாலும் 'நெற்கதிர்'போல் எழுதல் வேண்டும்!
எரிந்தாலும்'விளக்கை'ப்போல் எரிதல் வேண்டும்;
அழுதாலும் 'தேனடை' போல் அழுதல் வேண்டும்;
அசைந்தாலும் 'தென்ற' லைப்போல் அசைதல் வேண்டும்;
விழுந்தாலும் 'விதை' யைப் போல் விழுதல் வேண்டும்;
விரைந்தாலும் 'கார்முகில்' போல் விரைதல் வேண்டும்;
விழுதுவிடும் ஆல்போல நிழலைத் தந்து
வியனுலகில் வாழ்பவரே என்றும் வாழ்வார்!

எத்தனையோ மன்னரிங்கே இருந்தார்; போனார்;
எழில்'பாரி' மட்டும்ஏன் நெஞ்சில் நின்றான்?
கத்தரிக்காய்த் தலையிலுள்ள காம்புக் கிரீடம்
கறிக்குழம்பில் வந்திடுமா? அதுபோல் சேர்க்கும்
சொத்திங்கே உயிர்போனால் தொடர்ந்தா ஏகும்?
தொகைதொகையாய்ச் சொன்னாலும் செல்வம் தன்னை
வைத்திருப்போர் உணர்வாரோ? நல்ல சொற்கள்
வைக்கின்ற 'நடுகல்'லில் ஏற வேண்டும்!

எவ்வளவோ தமிழரசு செலவ ழித்தும்
எத்தனையோ பள்ளிபல கட்ட வேண்டும்;
எவ்வளவோ அரசாங்க நிதிதந் தாலும்
இன்னும்மருத் துவமனைகள் போத வில்லை;
எவ்வளவோ அவ்வளவே என்றில் லாமல்
இந்நாட்டு மக்கள்தொகை பெருகும் என்றால்
எவ்வளவோ அவ்வளவு மட்டும் வைத்தே
இருப்பதனை அறப்பணிக்குத் தந்தால் என்ன?

கோடிகளை இருப்பறையில் சேர்த்துச் சென்ற
கொழுத்தவரைப் பழுத்தவரை நினைத்தோ மாநாம்?
ஆடுகின்ற ஆட்டமெலாம் ஆடிச் செல்லும்
ஆர்ப்பாட்டப் புயற்காற்றைப் போற்று வோமா?
தேடுகின்ற செல்வத்தைத் தேகந் தன்னைச்
சீர்மணக்கும் சந்தனம்போல் தேய்த்தோர் மட்டும்
ஏடுகளில், எழில்நெஞ்சில் நிலைத்து நின்றார்;
இறந்துமிங்கே வாழ்வாரே 'வாழ்வார்'என்பேன்.



கவிஞர் கா.வேழவேந்தன் எம்.எல்.ஏ

கோவில்களிலிருந்து உபரியாகக் கிடைக்கும் வருமானம் ஏழைகளுடைய திருமணங்களை நடத்துவதற்கு உதவும். இந்த உதவியைக் கொண்டு ஆண்டுதோறும் திருமணங்களைக் கோவில்களில் நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

துணி, தாலி, பண்ட பாத்திரங்கள் ஆகியவைகளை வாங்குவதற்கு மேற்கண்ட உபரி நிதியிலிருந்து பணம் அளிக்கப்படும். கோவில் நிதியிலிருந்து வயதானவர்களுக்கு விடுதிகள் கட்டுவதற்கான திட்டங்களும் பரிசீலனையில் இருக்கின்றன.

அரிய விக்கிரகங்கள் திருட்டுப் போகாமல் தடுப்பதற்காக ஒரு மத்திய இடத்தில் அவைகளைச் சேகரித்து வைத்துப் பாதுகாப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொருத்த வரையில் திருக்குவளையில் உள்ள சிவன் கோவிலிலும், மேற்குத் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொருத்தவரை தஞ்சை சரசுவதி மகாலிலும் இவைகளைச் சேர்த்து வைப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

* * *

கிராமப் பகுதிகளிலிருந்து நகரங்களுக்கு மக்கள் குடியேறுவது நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இதைக் கட்டுப்படுத்தாவிடில், நகரங்களில் மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவது பெரும் சுமையாகிவிடும். எனவே நகரங்களுக்கு, கிராம மக்கள் வந்து சேருவதைத் தடுக்கும் முறையில் சில இடங்களை நகரங்களாக உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்கென ஒரு மசோதா கொண்டு வரப் பட இருக்கிறது.



இதற்காக ரூ. 500 கோடியில் ஓரளவு சிறிய திட்டம் ஒன்று இப்போது தயாராகி வருகிறது. இதன்படி சென்னையைச் சுற்றி ஐந்தாண்டுக் காலத்தில் துணை நகரங்கள் உருவாக்கப்படும்.




கிராம மின் வசதி நடவடிக்கையில் தமிழ்நாடு முதலிடம் பெற்று வருகிறது.

தமிழகத்தில் மொத்தமுள்ள 14,124 கிராமங்களில் 90 சதவிகிதம் கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டு விட்டது. தமிழகத்தின் பல பகுதிகளில் கிராம மின்வசதி நிறுவனத்தின் கடனுதவிகளைத் தமிழகம் தக்க அளவில் பயன்படுத்தி முற்போக்காகச் செயல்படுகிறது. இந்த விரிவுத் திட்டம் முனைப்பாக உள்ளது.

தற்போது மாநில மின் வசதி வாரியம் தந்த பதினொரு திட்டங்களுக்குக் கடன் வழங்கியிருக்கிறது. இந்த உதவி வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு, கோவை, மதுரை, திருச்சி, முகவை, நெல்லை ஆகிய மாவட்டங்களுக்குப் பயன்படும்.



கிராமப்புற மின் வசதி அமைப்பு என்கிற அடிப்படைக் கட்டுக்கோப்பு வெகு கணிசமாக உருவாகியுள்ள மாநிலம் தமிழ்நாடுதான். இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த மாநிலத்தில் மின்வசதி பெறாமல் உள்ள கிராமங்களுக்கு மின்வசதி தருவதற்கு நடவடிக்கைத் திட்டம் இந்த ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும் என்பதில் ஐயமேயில்லை.

* * *

சென்னை நகரில் இன்று வட்டங்கள் தோறும் மாட்டு வண்டிகள் மூலமாகக் குப்பைகளை எடுத்து வருகிறார்கள். இது படிப்படியாக அகற்றப் பட்டு, சென்னையில் லாரிகள் மூலம் நகரத் துப்புரவுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பத்தாண்டுத் திட்டமாகும்.

தேசிய நெடுஞ்சாலைகளில் குப்பைகளை அகற்றப் பெரிய லாரிகளும், பேருந்து செல்லும் தடங்களில் உள்ள குப்பைகளை அகற்ற நடுத்தர லாரிகளும், நெருக்கமான தெருக்களில் உள்ள குப்பைகளை அகற்றச் சிறிய லாரிகளும் பயன்படுத்தப்படும்.

ஜார்ஜ் டவுன் பகுதியில் 18, 19, 20-வது வட்டங்களிலும் திருவல்லிக்கேணி ஜாம் பஜார் பகுதியிலும் இரவு நேரங்களில் கூடக் குப்பைகளை அகற்றும் பணி துவக்கப்படவிருக்கிறது.

* * *

கல்லூரிப்பாட நூல்களைத் தாய் மொழியில் வெளியிடும் பணியில் இந்திய மாநிலங்கள் அனைத்திலும் தமிழ்நாடே முன்னணியில் இருக்கிறது. இந்தி பேசா மாநிலங்கள் எல்லாமாக சேர்ந்து



இதுவரை வெளியிட்டிருக்கும் பாட நூல்களின் எண்ணிக்கை 733. தமிழ் மொழியில் வெளியாகியுள்ள கல்லூரிப் பாடநூல்களின் எண்ணிக்கை 267. இந்தி மொழியில் இதுவரை வெளியான நூல்களின் எண்ணிக்கை 185 மட்டுமே.

* * *

தமிழ் நாட்டிலிருந்து முதல் தடவையாகப் பந்துகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவை மலேயா நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படும். சென்னையிலுள்ள ஒரு கம்பெனியார் 'ஸ்பீரியோ' என்ற பெயரில் விளையாட்டுப் பந்துகள் தயாரிக்கின்றார்கள். மாதம் 500 பந்துகள் வீதம் ஏற்றுமதி செய்யப்படும். இதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 2·5 இலட்சம் அந்நியச் செலாவணி கிடைக்கும்.



# முத்து மாலை

பூங்கொடி

ரகு ஓர் ஏழைச் சிறுவன். அவனுக்கு அன்புத் தங்கை ஒருத்தி இருந்தாள். ரகு எட்டாவது படித்துக் கொண்டிருந்தான். ஏழையாயிருந்தாலும் பார்க்க ஒழுங்காக, அழகாக இருப்பான். கந்தையானாலும் கசக்கிக் கட்டுவான்; கூழானாலும் குளித்துக் குடிப்பான்.

வறுமைக் குடும்பத்திலே பிறந்த அவன் சிறு வயதிலேயே மிக்கத் துன்பத்தை அனுபவித்து வந்தான். அவனுடைய அப்பா உடம்பு சரியில்லாமல் வீட்டிலேயே படுத்துக் கிடந்தார். அவன் அம்மா வீட்டு வேலை செய்து ரகுவைப் படிக்கவைத்தாள்.

ஏழை ரகுவை எல்லா ஆசிரியர்களுமே விரும்பினார்கள். ஆடம்பரமில்லாமல், ஆணவமில்லாமல், நன்றாகப் படிக்கும் மாணவனை யார்தான் விரும்பமாட்டார்கள்?

தேர்வுகளில் ரகுதான் முதல் மதிப்பெண்கள் வாங்குவான். இதனால் மற்ற 'மக்கு' மாணவர்கள் அவன்மீது பொறாமை கொண்டார்கள். அவனை ஒழித்துக்கட்ட முடிவு செய்தார்கள். அவனைக் கண்டால் யாரும் பேசுவதில்லை. அவன் போகும்போதும் வரும்போதும், அவனைக் கேலி செய்வார்கள். அவனது கிழிந்த சட்டையை ஒருவன் மேலும் கிழித்துவிட்டு ஓடி விடுவான். ஒருவன் கல் எடுத்துப் போட்டுவிட்டு ஒன்றும் தெரியாதவன் போலப் பதுங்கி விடுவான்.

இவற்றையெல்லாம் ரகு பொறுத்துக் கொண்டான். இதைப் பற்றி அவன் ஆசிரியரிடம் புகார் சொல்லவில்லை; அவர்களுடைய பெற்றோர்களிடமும் இது பற்றிச்சொன்னதில்லை. ''பொறுமையே பெருமை தரும்'' என்பதை அவன் பாடத்தில் படித்திருக்கிறான்.

நாள் ஆக ஆக ரகுவின் அப்பாவுக்கு உடம்பு மோசமாகிக் கொண்டே வந்தது. இதனால் ரகுவும் அவனது தாயும் மிகவும் கவலைப் பட்டார்கள். சம்பாதிக்க ஆள் இல்லாவிட்டால் குடும்பம் நடத்த முடியுமா? வாழத்தான் முடியுமா?

ரகுவை வேலையில் விடலாம் என்றாலோ, அவன் சிறுவன். மேலும், அவன் படித்துக் கொண்டிருக்கிறான். கருணை உள்ள சிலர் அவன் படிக்க உதவி செய்து வந்தார்கள். அந்த நிலையில் அவனது படிப்புக்கு முற்றுப் புள்ளி வைப்பது நல்லதா? கூடாது என்றே அவன் தந்தையும் கூறினார்.

ரகுவின் அம்மாவால்தான் குடும்பமே நடந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் ரகுவின் அப்பா பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தார். அன்று யாருக்குமே உணவு இல்லை. ரகு பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தான். பாத்திரங்களெல்லாம் காலியாகக் கிடந்தன. அடுப்பில் பூனை தூங்கிக்கொண்டிருந்தது. அப்பாவையும், அம்மாவையும், தங்கையையும் மாறி மாறிப் பார்த்தான். அவனையறியாமலேயே அவன் கண்களில் கண்ணீர் கசிந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்ட ரகு, தண்ணீரை வயிறு நிறையக் குடித்துவிட்டுப் பள்ளிக்குக் கிளம்பினான்!

அவன் தாய் இந்தத் துன்ப நிலையைக் கண்டு கண்ணீர் விட்டாள், அவள், வேலை செய்யும் வீட்டில் விலை உயர்ந்த முத்துமாலை காணாமற்போய் விட்டதாம். அதனால் அவள் மீது அந்த வீட்டார் சந்தேகப்பட்டு அவளை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அதனால்அன்று பட்டினி; அன்று இரவாவது சமைக்கலாம் என்று ரகுவின் அம்மா யார் யாரையோ கேட்டுப் பார்த்தாள். யாரும் ஒரு காசும் கொடுக்க மறுத்து விட்டார்கள். ஏழை யென்றால் மோழையும் பாயுமல்லாவா ?

நீதிக்கு ஒரு கதை

பகல் பள்ளிக்கூடம் சென்ற ரகு அன்று இரவு வரையும் வீட்டுக்கு வரவில்லை. இதனால் திடுக்கிட்டுப் போன ரகுவின் தாய் எங்கெல்லாமோ அவனைத் தேடினாள். எங்குமே ரகு கிடைக்கவில்லை. 'பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பது போல அவர்களுக்குத் துன்பத்துக்கு மேல் துன்பம் வந்துகொண்டே இருந்தது.

ரகுவின் வகுப்பில் மாணிக்கம் என்பவன் படித்துக் கொண்டிருந்தான். அவன் பணக்காரப் பையன். மாணிக்கத்துக்குப் பெயர்தான் மாணிக்கமே தவிர, படிப்பிலே அவன் மக்காக இருந்தான். அவனும் பொறாமைக் கும்பலிலே சேர்ந்தவன்தான். அவனை அந்தக் கும்பலின் தலைவன் என்று கூடச் சொல்லலாம்.

மாணிக்கத்தின் வீட்டில்தான் அந்த முத்துமாலை காணாமல் போய் விட்டது. முத்துமாலை காணாமல் போன அன்று அவன் வீட்டிலே ஒரே அமர்க்களமாயிருந்தது. வீடெல்லாம் அலசிப்பார்த்தார்கள். எங்குமே அது கிடைக்கவில்லை. உடனே போலீசுக்குத் தகவல் கொடுத்தார்கள்.

ரகுவின் அம்மா, மாணிக்கத்தின் வீட்டில்தான் வேலைசெய்து வந்தாள். அதனால் அவளை விசாரிக்கும்படி மாணிக்கத்தின் அம்மா போலீசாரிடம் கூறினாள். போலீசார் அவளை மிரட்டி' 'முத்துமாலை எங்கே?' என்றார்கள். உடனே அவள் ''அது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது'' என்று உண்மையைக் கூறிக் கதறி அழுதாள். இது மாணிக்கத்துக்கு ஆனந்தமாக இருந்தது. இறுதியில் போலீசாரே அவளை விட்டு விட்டனர். ஆனால், மாணிக்கத்தின் அம்மாவுக்கோ 'அவள்' மீதே சந்தேகமாய் இருந்தது.

''முத்துமாலை திருடிய சிறுவன் கைது!'' அன்றையச் செய்தித்தாளில் இப்படி ஒரு செய்தி வெளி வந்திருந்தது. திருடியவன் பெயரும், அவன் படிக்கும் பள்ளியின் பெயரும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

''என்ன? ரகுவா? அவனா முத்துமாலையைத் திருடினான்? இருக்கவே இருக்காது'' ரகுவின் பள்ளி ஆசிரியர்கள் பேசிக் கொண்டார்கள். ரகு கைதான சேதி கேட்ட அவன் அம்மா




## புத்திசாலி!

அவன் ஒரு சோம்பேறி.

தெருவைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது, கல் ஒன்று தடுக்கியதால் கீழே விழுந்து விட்டான் அவன். சில வினாடிகள் எழுந்து நின்றான்; தூசியைத் தட்டி விட்டுக் கொண்டு புறப்பட்டான். பத்தடி தொலைவு நடந்தவுடன் மறுபடியும் விழுந்து விட்டான். விழுந்தவன், உடனே எழுந்திருக்காமல், கவலையுடன் தனக்குள் சொல்லிக் கொண்டான்!

"அடடா! இரண்டாவது முறையும் கீழே விழுவேன் என்று தெரிந்திருந்தால் முதல் முறை விழுந்தபோது எழுந்திருக்காமல் இருந்திருப்பேனே!"

'கோ' வெனக் கதறி அழுதாள். நோயில் நொந்து போயிருக்கும் அவன் அப்பாவோ, மேலும் மனம் நொந்தார்.

இங்கே நோயுற்ற நிலையில் கணவன் இருக்கிறார்; அங்கே கைதான நிலையில் மகன் இருக்கிறான். இங்கே இருப்பதா? அங்கே போவதா? அவள் அழுதாள். அந்தச் சிறுமியும் கூட அழுதாள்.

அன்று விசாரணை.

நீதி மன்றத்தில் பள்ளிப்பிள்ளைகள் பலர் கூடி இருந்தார்கள். ஓரிரு ஆசிரியர்களும் அங்கு வந்து இருந்தார்கள்.

''தம்பீ! முத்துமாலையை நீ தானே திருடினாய்?'' நீதிபதி கேட்டார்.

''இல்லை, ஐயா!''

''பொய் பேசாதே!''

''உண்மைதான் சொல்கிறேன் ஐயா. நான் திருடவே இல்லை''

''அதற்குச் சாட்சி உண்டா?''

''என் மனச்சாட்சிதான்''

''அதெல்லாம் நம்ப முடியாது; முத்துமாலையை நீதான் திருடியிருக்கிறாய். உன்சார்பில் சாட்சிஇல்லாமலிருப்பதிலிருந்தே அது மெய்யாகிவிட்டது. ஆகையால் ... ...நீதிபதி முடிக்கவில்லை.

அப்போது ''சற்று இருங்கள்! சாட்சி நானிருக்கிறேன்'' என்ற குரல்கேட்டு அனைவரும் திடுக்கிட்டுப்பார்த்தனர். ரகுவின் தலைமையாசிரியர் வந்து கொண்டிருந்தார்! மாணவர்களும், ஆசிரியர்களும் ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

''ரகு நிரபராதி, குற்றவாளி மாணிக்கம்தான்!'' என்றார் உறுதியாகத் தலைமையாசிரியர்.

''எப்படிச் சொல்கிறீர்கள்?'' நீதிபதி கேட்டார்.

''மாணிக்கம் வீட்டில் அவன் தந்தையோடு ஒருநாள் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது பலகணி பக்கம் இரண்டு சிறுவர்களின் குரல் கேட்டது. நான் அதைக் கவனித்துக் கேட்டேன்.

''டேய் ராமு, ரகு இப்போது மாட்டிக் கொண்டான்'' என்றான் ஒருவன்.

''எப்படி மாணிக்கம்?'' என்று இன்னொருவன் கேட்டான். அதற்கு மாணிக்கம், ''மத்தியானம் பள்ளிக்கூடத்துக்கு ரகு வந்தானல்லவா? அப்போது அவனுக்குத் தெரியாமல் முத்துமாலையை அவன் பையில் போட்டுவிட்டேன். சாயங்காலம் அவன் வெளியே வரும்போது, நம்ம பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில் காவல் நிலையம் இருக்கிறது பாரு, அங்கே போய் சொல்லி விட்டேன். இப்போ ரகு மாட்டிக் கொண்டான்''.

''இவ்வாறு இருவரும் பேசிக் கொண்டார்கள். அந்த இருவரும் இதோ இருக்கிறார்கள்!'' என்று அந்த இரண்டு பேர்களையும் பிடித்து இழுத்துவந்து, நீதிபதி முன் நிறுத்தினார் தலைமையாசிரியர்.

இருவரும் பயத்தால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தனர்.

''நான்தான் முத்துமாலையை அவன் பையில் போட்டேன்'' என்று மாணிக்கம் நடுங்கிக் கொண்டே உண்மையைக் கூறி விட்டான்.

மாணிக்கமும் சிறுவனானதால் நீதிபதி அவனைக் கண்டித்து, ''பொறாமை ஒரு கொடிய நோய். அந்த நோய்க்குத் தக்க மருந்து அன்பு. அதை அனைவரும் விரும்பவேண்டும். பொய்யும், பித்தலாட்டமும் ஒரு போதும் வெற்றி பெறாது. உண்மைதான் வெற்றிபெறும்; அதற்கு அழிவே இல்லை'' என்று புத்திமதி சொல்லி அனுப்பினார்



# வேண்டுதல் பதிகம்

புலவர் சி. துரைசுவாமி



அறியாமை கல்வியினால் அகற்ற வேண்டும்.
ஆட்சிக்கு நீதியுள்ள அரசு வேண்டும்.
இரப்போரே இல்லாமல் செய்ய வேண்டும்.
ஈட்டும்பொருள் உலகில்சுழன் றெய்தல் வேண்டும்.
உடைமைகளைத் தான்முயன்று சேர்க்க வேண்டும்.
ஊரெல்லாம் இன்பநிலை ஓங்க வேண்டும்.
எளிமையற்ற நாடாக மாற்ற வேண்டும்.
ஏழ்மையற உழைப்பினிலே ஏற்றம் வேண்டும்.
ஐயமற குடிக்கரசே ஆற்ற வேண்டும்.
ஒற்றுமையால் நாட்டினில்நாம் இருக்க வேண்டும்.
ஓங்குகின்ற கலைவளங்கள் பெருக்க வேண்டும்.
ஔடதமாய் நாம்உலகிற் காற்ற வேண்டும்.
கடமைதனைத் தவறாமல் செய்ய வேண்டும்.
காலம்வீண் போக்காமல் கருத வேண்டும்.
கிளைபோன்று அனைவருடன் பழக வேண்டும்.
கீர்த்திமிக நாட்டுஞ்செயல் போற்ற வேண்டும்.
குணமிகுந்த அறிஞருடன் கூட வேண்டும்.
கூடுகின்ற அவையில்வெற்றி கொள்ள வேண்டும்.
கெட்டாலும் புறம்கெடுக்கா தெண்ணம் வேண்டும்.
கேட்டவரின் துயர்களைய நாட்டம் வேண்டும்.
கைம்மாறு கருதாமல் உதவ வேண்டும்.
கொடுங்கோன்மை விடுத்தரசே ஆற்ற வேண்டும்.
கோவுக்கு உறுதுணையாய்க் குடிகள் வேண்டும்.
சரித்திரத்தில் நாட்டுயர்வைக் காட்ட வேண்டும்.
சாத்திரப்பொய் மார்க்கங்களை ஒதுக்க வேண்டும்.
சிந்தனையில் உலகறிவைத் தேக்க வேண்டும்.
சீர்திருத்தி மூடமையை அகற்ற வேண்டும்.
சுவைமிகுந்த பயன்சொல்லே சொல்ல வேண்டும்.
சூதாய்ந்து வெல்லுமதி படைத்தல் வேண்டும்.
செல்வம்வரின் அறத்தொழிலைப் பெருக்க வேண்டும்.
சேய்போன்று வாய்மையகம் வளர்க்க வேண்டும்.
சைவத்தின் உயர்வறிந்து போற்ற வேண்டும்.
சொல்லனைத்தும் செயல்வடிவில் காட்ட வேண்டும்.
சோம்பலின்றி எந்நாளும் உழைக்க வேண்டும்.
சௌந்தரமாய் ஊர்வடிவைச் செய்தல் வேண்டும்.
ஞாயத்தை எடுத்துரைக்கும் நெஞ்சம் வேண்டும்.
தன்கையால் உழைத்துண்டு வாழவேண்டும்.
தாழ்ந்தவரின் வாழ்வுயர ஆற்ற வேண்டும்.
திட்டமிட்டுச் சேமிப்புச் செய்தல் வேண்டும்.
தீண்டாமைக் கொடுமைதனை ஒழிக்க வேண்டும்.
துன்பம்வரின் துணிந்துமனம் ஆற்ற வேண்டும்.
தூய்மையிலே விளங்கிறையாம் போற்ற வேண்டும்.
தெய்வநிலை அன்பின்வழி காட்ட வேண்டும்.
தேட்டங்கொண்டு நல்லவைகள் கேட்க வேண்டும்.
தைப்பொங்கல் ஏர்த்தொழில்மேல் போற்ற வேண்டும்.
தொழிற்கூடம் நாடனைத்தும் பெருக்க வேண்டும்.
தோழமையில் அயல்நாட்டார் தொடர்பு வேண்டும்.
நன்மைதரும் கூத்திசையில் நாட்டம் வேண்டும்.
நாட்டுக்கே உழைத்திடவும் வேட்கை வேண்டும்.

நினைவனைத்தும் நன்றின்பால் செலுத்த வேண்டும்.
நீடுபுகழ் தோன்ற புவி வாழ வேண்டும்.
நுண்ணறிவில் பல புதுமை செய்தல் வேண்டும்.
நூல்நிலையம் பட்டிதொட்டி நிறுவவேண்டும்.
நெறியோடு அரியசெயல் புரிய வேண்டும்.
நேயமுடன் அகம்புறமும் வாழ வேண்டும்.
நைந்தபொருள் உண்ணுமல் தவிர்க்க வேண்டும்.
நொந்திடினும் மதிசிதையா திருக்க வேண்டும்.
நோய்எனவே தீமைகளை நினைக்கவேண்டும்.
பயிலுங்கலை இளமையிலே பயில வேண்டும்.
பார்புகழ அறிவோடு வாழ வேண்டும்.
பிழையின்றிப் புவிவாழ்ந்தபெருமைவேண்டும்.
பீழைதரும் வினைபொருதா திருக்கவேண்டும்.
புண்ணியங்கள் முடிந்த வகை செய்தல் வேண்டும்.
பூத்துவரும் புதுமைகளைக் காத்தல்வேண்டும்.
பெண்களுக்குத் தகும் உரிமை வழங்க வேண்டும்.
பேடியென வாழ்வதையே, தவிர்க்க வேண்டும்.
பைந்தமிழை உலகமெல்லாம் பரப்ப வேண்டும்.
பொதுநலத்தைப் பேணியிகம் வாழ வேண்டும்.
போற்றுதல்பின் இகழாமல் போற்ற வேண்டும்.
மடமைகளை ஒழித்திடவும் தியாகம் வேண்டும்.
மாற்றுரை மதித்தொழுகும் மரபு வேண்டும்.
மிகைப்படுத்தித் தனைப்புகழா தடக்கம் வேண்டும்.
மீட்டும்யாழ் குழலிசையில் தேற வேண்டும்.
முதலெண்ணி வினைமேவி முடித்தல் வேண்டும்.
மூதாதை அறிவின்வழி நடக்க வேண்டும்.
மெலிந்தவரைத் துன்புறுத்தா திருக்க வேண்டும்.
மேன்மைதரும் செயல்புரிய எண்ண வேண்டும்.
மையம்நின்று வழக்கனைத்தும் தீர்க்க வேண்டும்.
மொழியினைத்தன் உயிராகக் காத்தல் வேண்டும்.
மோகவலை தவிர்த்துலகில் வாழ வேண்டும்.
மௌனமுடன் ஞானத்தை வளர்க்க வேண்டும்.
வறுமைவரின் போர்தொடுத்து விரட்ட வேண்டும்.
வாட்டமற நாட்டைவள மாக்க வேண்டும்.
விஞ்ஞான வளத்தில் மிக்க விளங்கவேண்டும்.
வீட்டுக்கோர் வருவாயின் விதியும் வேண்டும்.
வெறிபிடித்த சாதிமதம் விரட்ட வேண்டும்.
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்க வேண்டும்.
வைத்தியத்தை அறிவோடு வளர்க்க வேண்டும்.

## மூளையோ மூளை

முழு வளர்ச்சி அடைந்துள்ள மனிதனின் மூளை மூன்று ராத்தல் எடையுள்ளது.

மனிதக் குரங்கு மூளையின் எடை 1¾ ராத்தல்.

நாய் மூளையின் எடை 6 அவுன்ஸ்.

பூனை மூளையின் நிறை ஒரு அவுன்ஸ்.

குதிரை மூளையின் நிறை ஒரு அவுன்ஸ்.

சாதாரண மனிதன் தன் மூளையின் எடை போல நாற்பது மடங்கு கனமுள்ளவனாக இருப்பான்.

ஒவ்வொரு 1000 ராத்தல் உடல் கனத்திற்கு ஒரு ராத்தல் கனமுள்ள மூளையினையுடைய விலங்கு எது தெரியுமா? யானை.

கார்டு என்னும் ஒருவகை மீன் உண்டு. அது தனது மூளையின் எடையைவிட 5000 மடங்கு எடையுள்ளது.

35 டன் எடையுள்ள பேருருவம் (Giant) கொண்ட ஒரு வகைப் பல்லியின் மூளையின் எடை என்ன தெரியுமா? ஒரே ஒரு ராத்தல்தான்.

மனிதன் மண்டை ஓட்டில் மூளையிருக்கும் பரப்பளவு 1,300 கன சென்டிமீட்டராகும்.

ஜாவாக் குரங்குமனிதனின் மண்டை ஓட்டில் மூளை இருக்கும் பரப்பளவு 900 கன சதுர செ.மீ. ஆகும்.


ஆராய்ச்சி
மணி
6
கதை: இளவல்
படம்: கோபன்னா
டாக்டர் பொன்மலை வீட்டில்...
மாணிக்கம்.. நீ இங்கேயே இரு; நான் உள்ளே போறேன். டாக்டர் பொன்மலை என்னைக் கண்டவுடன் அதிர்ச்சி அடைந்துடுவார்.
மணி நானும் உன்னோடு வர்றேண்டா உன்னைக் கண்டு பொன்மலை பயப்படறதை நானும் பார்க்கணும்.
வாவு! நான் சொல்றதைக் கேளுடா. நமக்குத் துணையா வந்திருக்கிற போலீஸ்காரங்க நோயாளிங்க மாதிரி கீழே இருக்காங்க... நான் கூப்பிட்டவுடன் உள்ளே வா.
மாடியிலுள்ள பொன்மலையின் தனி அறைக்குள் மணி சென்றான்...
ஐயய்யோ டாக்டர்...
டாக்டர் பொன்மலையை யாரோ சுட்டு இருக்காங்க...!
யாரும் கிட்டே போகாதீங்க... நான் போன் பண்ணிட்டு வர்றேன்
மணிக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடப் போகிறது என்று பயந்தேன். ஆனால் பொன்மலை கொலை செய்யப் பட்டுக்கிடக்கிறார். ஆல்ரைட்! நடக்கவேண்டியதைப் பாருங்க! மணி, மாணிக்கம் என்கூட வாங்க!
போலீஸ் அலுவலகத்தில்...
மணி, உன் வீரச்செயல்களை எல்லாருக்கும் எடுத்துச் சொல்லி பத்திரிகை நிருபர்களுக்கு முன்னால் உனக்குப் பரிசளிக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் இப்பொழுது வேண்டாம் என்று முடிவு செய்து விட்டேன்
என் சார்?
பொன்மலை கொலை செய்யப் பட்டதால் உங்களுக்கும் ஆபத்து! அவரைக் கொலை செய்தவன் தெரியும் வரை நீங்கள் இங்கிருந்து போகக் கூடாது.
என் அக்காவைப் போய்ப் பார்க்கணும் சார். மாணிக்கத்தோட அக்கா போய் சொல்லியிருப்பாங்க...!
பள்ளிக்கூடம் எல்லாம் திறந் புது புத்தகங்கள் வாங்கணும் சார்


கண்டிப்பான உத்தரவு நீங்கள் எங்கேயும் போகக் கூடாது!
தங்கம் வீட்டில்...
தங்கம், மணியும் மாணிக்கமும் வந்தார்களா?
அந்த வால்கள் எங்கே போகப் போகின்றன? தானாக வருகி றாங்க..!
அப்பாவிடம் மணி உயிரோடு இருப்பதைச் சொல்லி விட்டேன். மணி எப்போ வருவான்னு கேட்டுக்கிட்டிருக்காங்க... நீ சொன்னியே போலீஸ்காரங்க ஒரு பெரிய திருட்டுக் கூட்டத்தை மணி மூலம் பிடிச்சிருக்காங்கன்னு
அதையும் அப்பாவிடம் சொன்னேன்
உஷ் சத்தமா பேசாதே கயல்விழி! பக்கத்து அறையிலே அப்பா இருக்கிறார். யாரிடமும் சொல்லக் கூடாதுன்னு சொல்லியிருக்கார்
தங்கம், மணியோட இந்த வேலைகள் எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கவில்லை! இந்த வயசிலே இதெல்லாம் செய்யலாமா? நேற்று டாக்டர் பொன்மலையை யாரோ கொலை செஞ்சிருக்காங்க பாவம்!
உன் அப்பாவுக்கு மணி கவலை போய் டாக்டர் பொன்மலையைப் பற்றிக் கவலை வந்திருக்கும்
சீக்கிரம் கதவைச் சாத்துங்க... எங்களை போலீஸோ, வேறு யாரோ தேடிக்கிட்டு வந்தாலும் இல்லைன்னு சொல்லுங்க...
மணி, மாணிக்கம், என்னடா செஞ்சிட்டு இப்படி ஓடி வர்றீங்க...?

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள்



# வேலை வாய்ப்பு விளம்பரங்கள்.

## நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும், கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி 12—7—1972-ம் தேதி மாலை 3.00 மணிவரையில் கோயம்புத்தூர் ரத்தின சபாபதிபுரம் வெங்கட்ரமண சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப் படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். (1) | | கோட்டம். (2) | முன்வைப்புத் தொகை. (3) ரூ. |
|---|---|---|---|
| 1 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஏ. மாதிரி கட்டடம் .. | கோயம்புத்தூர் | 13,450 |
| 2 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். பி. மாதிரி கட்டடம் .. | ஷ | 940 |
| 3 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல் சி-1 மாதிரி கட்டடம் .. | ஷ | 700 |
| 4 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். சி-2 மாதிரி கட்டடம் .. | ஷ | 700 |
| 5 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். டி. மாதிரி கட்டடம் .. | ஷ | 550 |
| 6 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். இ-1 மாதிரி கட்டடம் .. | ஷ | 571 |
| 7 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். இ-2 மாதிரி கட்டடம் .. | ஷ | 571 |
| 8 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். எப். மாதிரி கட்டடம் .. | ஷ | 700 |
| 9 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஜி-1 மாதிரி கட்டடம் .. | ஷ | 600 |
| 10 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஜி-2 மாதிரி கட்டடம் .. | ஷ | 600 |
| 11 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்துக் கட்டுதல். எச். மாதிரி கட்டடம் .. | ஷ | 525 |
| 12 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஐ. மாதிரி கட்டடம் .. | ஷ | 385 |
| 13 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஜே-1 மாதிரி கட்டடம் .. | ஷ | 715 |
| 14 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஜே-2 மாதிரி கட்டடம் .. | ஷ | 715 |
| 15 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். ஜே-3 மாதிரி கட்டடம் .. | ஷ | 715 |
| 16 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். கே-1 மாதிரி கட்டடம் .. | ஷ | 870 |
| 17 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். கே-2 மாதிரி கட்டடம் .. | ஷ | 870 |
| 18 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். கே-3 மாதிரி கட்டடம் .. | ஷ | 915 |
| 19 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். எல் மாதிரி கட்டடம் .. | ஷ | 660 |
| 20 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். எம்.1 மாதிரி கட்டடம் .. | ஷ | 170 |
| 21 | வால்பாறையில் தற்போதுள்ள வார சந்தை கட்டடத்தைத் திருத்திக் கட்டுதல். எம்-2 மாதிரி கட்டடம் .. | ஷ | 170 |

ஒப்பந்தங்கள் நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்த கோட்டப் பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கு ரூபாய் 10 உடன் விற்பனை வரியும் செலுத்தி 1—7—1972 முதல் 11—7—1972 வரை பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக் காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையை அந்தந்த கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்குக்காரண்டி முன்வைப்புத் தொகையாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும். தவிர ரிசர்வு பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிக் கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். தவறினால் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர், (நெ. கி. ப.).
கோயம்புத்தூர்-2.

இரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2.

(த.21)

## பயிற்சி

### மீனவர் பயிற்சி நிலையம், தூத்துக்குடி

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மீனவர் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சிகள் 24–7–1972 முதல் (10 மாத காலம்) அளிக்கப் படும்.

1. நவீன மீன்பிடி முறை.
2. சிறுதரக் கம்மியர் பயிற்சி (ஜூனியர் மெக்கானிக் பயிற்சி).

நவீன மீன்பிடி பயிற்சிக்கு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் மட்டும் தான் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் 35 வய திற்கு உட்பட்டவர்களாகவும், கடலில் மீன்பிடி அனுபவம் உள்ள வர்களாகவும் இருக்கவேண்டும். விண்ணப்பங்கள் 10–7–1972 மாலை 5 மணி வரை மீன்துறை உதவி இயக்குநர் மீனவர் பயிற்சி நிலையம் தூத்துக்குடி–1, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களை மேற்கூறிய உதவி இயக்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ச. சே. ஆரோக்கியசுவாமி,
மீன் துறை இயக்குநர், தூத்துக்குடி.

(த.4)

## வட ஆர்க்காடு மாவட்டத்தில் கள்ளு சில்லரை விற்பனைக் கடைகள்

வடார்க்காடு மாவட்டத்தில் கள்ளு சில்லரை விற்பனைக் கடைகளின் 1—9—1972 முதல் 31—8—1973 வரைக்கான 12 மாதத்திய பாத்தியதையை சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சித் தலைவராலோ (அல்லது) நியமிக்கப்பட்ட இதர அதிகாரியாலோ சம்மந்தப்பட்ட தாலுக்கா அலுவலகங்களில் கீழே கொடுக்கப்பட்ட தேதிகளில் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

### இராணிப்பேட்டை கோட்டம்

| | | |
|---|---|---|
| 1—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | வாலாஜா தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 2—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |
| 4—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | அரக்கோணம் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 5—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |
| 6—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | வேலூர் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 7—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |
| 10—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ஆர்க்காடு தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |

### திருப்பத்தூர் கோட்டம்

| | | |
|---|---|---|
| 1—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | திருப்பத்தூர் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 2—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |
| 4—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | குடியாத்தம் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 5—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |
| 8—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | வாணியம்பாடி தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 9—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |

### திருவண்ணாமலை கோட்டம்

| | | |
|---|---|---|
| 2—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | திருவண்ணாமலை தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 3—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |
| 6—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | செங்கம் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 7—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |
| 8—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | போளூர் தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 9—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |

### செய்யாறு கோட்டம்

| | | |
|---|---|---|
| 3—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | செய்யாறு தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 4—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |
| 5—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ஆரணி தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 6—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | வந்தவாசி தாலுக்காவிலுள்ள கள்ளுக் கடைகள். |
| 7—7—1972 .. .. | காலை 9 மணி .. .. .. | ,, |

2. ஏல நிபந்தனைகள், மற்றும் ஒவ்வொரு தேதியிலும் ஏலம் போடப்படும் கடைகள், கடைகள் ஏற்படுத்தப்படும் இடங்கள் முதலிய விவரங்களை வேலை நாட்களில் காலை 10–30 மணி முதல் மாலை 5–00 மணி வரை வேலூர் (கோட்டை) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும், சம்பந்தப்பட்ட கோட்டாட்சித் தலைவர் அலுவலகங்களிலும், தாலுக்கா அலுவலகங்களிலும் தக்க கட்டணம் செலுத்தி ஏலம் கேட்க விரும்பும் நபர்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்த விவரங்கள் மேற்கண்ட அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளிலும், சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளிலும் விளம்பரம் செய்யப்படும்.

(த. 1)

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

---

## 1972–73-ம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் அமைக்கவிருக்கும் கள் மற்றும் சாராயக் கடைகள்

1—9—1972 முதல் 31—8—1973 முடியும் காலத்திற்கு

தருமபுரி மாவட்டத்தில் அமைக்கவிருக்கும் கள்ளுக்கடைகள் மற்றும் சாராய சில்லரை விற்பனைக் கடைகளை வருகிற 1—9—1972 முதல் 31—8—1973-ம் நாளுடன் முடிவடையும் பன்னிரண்டு மாதத்திற்கான காலத்தில் நடத்தும் உரிமையை சம்பந்தப்பட்ட தாலூகா அலுவலகங்களில், கீழ்க்கண்ட தேதிகளில், சம்பந்தப்பட்ட தாலூகாவின் பெயருக்கெதிரில் குறிக்கப்பட்டுள்ள அலுவலரால் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

### கள்ளுக் கடைகள்.

| தாலூகாவின் பெயர். | ஏலம் விடப்படும் நாள் | ஏலம் விடப்படும் கடைகளின் எண்கள். | ஏலம் விடும் அலுவலர். |
|---|---|---|---|
| 1 தருமபுரி .. .. .. | 1—7—1972 .. .. | 40 (க.க. எண். 1 முதல் 40 வரையில்) .. .. | கோட்டாட்சியர், தருமபுரி. |
| | 2—7—1972 .. .. | 28 (க.க. எண் 41 முதல் 68 வரையில்) .. .. | ஷை |
| 2 கிருஷ்ணகிரி .. .. | 3—7—1972 .. .. | 40 (க.க. எண் 1 முதல் 40 வரையில்) .. .. | கோட்டாட்சியர், ஒசூர். |
| | 4—7—1972 .. .. | 40 (க.க. எண் 41 முதல் 80 வரை) .. .. .. | ஷை |
| 3 அரூர் .. .. .. | 5—7—1972 .. .. | 43 (அனைத்து கள்ளுக்கடைகளும்) .. .. .. | கோட்டாட்சியர், தருமபுரி. |
| 4 ஒசூர் .. .. .. | 6—7—1972 .. .. | 44 (அனைத்து கள்ளுக்கடைகளும்) .. .. .. | கோட்டாட்சியர், ஒசூர். |
| 5 ஊத்தங்கரை .. .. | 7—7—1972 .. .. | 24 (அனைத்து கள்ளுக்கடைகளும்) .. .. .. | கோட்டாட்சியர், தருமபுரி. |
| 6 டெங்கணிக்கோட்டை .. | 8—7—1972 .. .. | 30 (க. க. எண் 1 முதல் 30 வரை) .. .. .. | கோட்டாட்சியர், ஒசூர். |
| 7 பாலக்கோடு .. .. .. | 9—7—1972 .. .. | 36 (அனைத்து கள்ளுக்கடைகளும்) .. .. .. | கோட்டாட்சியர், தருமபுரி. |
| 8 டெங்கணிக்கோட்டை .. | 10—7—1972 .. .. | 20 (க.க. 31 முதல் 50 வரை) .. .. .. .. | கோட்டாட்சியர், ஒசூர். |

## சாராய சில்லரை விற்பனைக் கடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 தருமபுரி | 11—7—1972 | 44 (அனைத்து சாராயக் கடைகளும்) | கோட்டாட்சியர், தருமபுரி. |
| 2 கிருஷ்ணகிரி | 12—7—1972 | 20 (அனைத்து சாராயக்கடைகளும்) | கோட்டாட்சியாயர், ஒசூர். |
| 3 அரூர் | 13—7—1972 | 35 (அனைத்து சாராயக் கடைகளும்) | கோட்டாட்சியர், தருமபுரி. |
| 4 ஒசூர் | 14—7—1972 | 24 (அனைத்து சாராயக் கடைகளும்) | கோட்டாட்சியர், ஒசூர். |
| 5 ஊத்தங்கரை | 15—7—1972 | 20 (அனைத்து சாராயக் கடைகளும்) | கோட்டாட்சியர், தருமபுரி. |
| 6 டெங்கணிக்கோட்டை | 16—7—1972 | 33 (அனைத்து சாராயக் கடைகளும்) | கோட்டாட்சியர், ஒசூர். |
| 7 பாலக்கோடு | 17—7—1972 | 21 (அனைத்து சாராயக் கடைகளும்) | கோட்டாட்சியர், தருமபுரி. |

(ஏலம் மேற்கூறிய நாட்களில் காலை 9 மணிக்குத் துவக்கப்படும்)

ஏல விதிமுறைகள், ஏலம் விடப்படும் கள்ளுக்கடைகள் மற்றும் சாராய சில்லரை விற்பனைக்கடைகள் ஆகியவற்றின், பட்டியல் ஆகிய விவரங்கள் தருமபுரி மாவட்ட ஆட்சியர், கோட்ட ஆட்சியர்கள், அனைத்து தாலூகா, துணைத் தாலூகா மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் உள்ள செய்திப் பலகைகளில் ஒட்டி பிரசுரம் செய்யப்படும். ஏல அறிவிப்பின் நகல்களை அதற்கான கிரயத் தொகையைச் செலுத்தி மேற்கூறிய அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ரா. பத்மநாபன்,
மாவட்ட ஆட்சியர்.

(த. 6)

---

## தென் ஆர்க்காடு மாவட்டம்

இதனால் எல்லோருக்கும் தெரிவிப்பது யாதெனில், தென்ஆர்காடு மாவட்டம் அடியிற்கண்ட தாலுக்காவிலுள்ள சாராயக் கடைகளை 1972-ம்ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் 1973-ம் ஆண்டு ஆகஸ்டு 31-ம் தேதி வரையில் ஓராண்டு காலத்துக்கு விற்பனை செய்யும் உரிமையை அந்தந்த தாலுக்காக்களுக்கு எதிரில் குறிப்பிட்டிருக்கும் தேதிகளில் பகல் 10 மணிக்கு அந்தந்த தாலுக்கா அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி அவர்களால் பகிரங்கமாய் ஏலம் போடப்படும். இது சம்பந்தப்பட்ட மற்ற விவரங்களை கலெக்டர் அலுவலகத்திலோ, ரெவின்யூ டிவிஷனல் அலுவலகத்திலோ, தாலுக்கா அலுவலகத்திலோ சென்று தெரிந்து கொள்ளலாம்.

| தாலுக்கா. | ஏலத்தேதி. | கடைகளின் வரிசை எண் விவரம். |
|---|---|---|
| 1 திண்டிவனம் | 17—7—1972<br>18—7—1972 | 1 முதல் 28 முடிய.<br>29 முதல் 53 வரை. |
| 2 கள்ளக்குறிச்சி | 17—7—1972<br>18—7—1972 | 1 முதல் 34 வரை.<br>35 முதல் 68 வரை. |
| 3 செஞ்சி | 19—7—1972<br>20—7—1972 | 1 முதல் 22 வரை.<br>23 முதல் 43 வரை. |
| 4 விருத்தாசலம் | 19—7—1972<br>20—7—1972 | 1 முதல் 30 வரை.<br>31 முதல் 60 முடிய. |
| 5 திருக்கோவிலூர் | 21—7—1972<br>22—7—1972 | 1 முதல் 34 முடிய.<br>35 முதல் 68 முடிய. |
| 6 விழுப்புரம் | 24—7—1972<br>25—7—1972 | 1 முதல் 25 முடிய.<br>26 முதல் 50 முடிய. |
| 7 கடலூர் | 26—7—1972<br>27—7—1972 | 1 முதல் 40 முடிய.<br>41 முதல் 79 முடிய. |
| 8 சிதம்பரம் | 28—7—1972<br>29—7—1972 | 1 முதல் 34 முடிய.<br>35 முதல் 67 முடிய. |

ரா. சண்முகசிகாமணி, ஐ. ஏ. எஸ்.,
மாவட்ட ஆட்சியாளர்,
தென்ஆர்க்காடு மாவட்டம், கடலூர்.

(த.24)

---

## ஒப்பந்தப் புள்ளி

### தருமபுரி நகராட்சி

கீழ்க்கண்ட நகராட்சி வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ் கையொப்பமிட்டவரால் 12—7—1972-ம் தேதி புதன் கிழமை மாலை 4-00 மணி வரை வரவேற்கப்படுகிறது. இதர விவரங்களை நேரிலோ (அல்லது) தபாலிலோ கோரிப் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் பெயர்—சாலை விநயகர் கோவில் வீதியில் நகராட்சி துவக்கப்பள்ளிக்கு முன்னால் 4 கடைகள் கட்டுதல் (தெற்குப் புறம்).

மதிப்பீட்டுத் தொகை—ரூ. 14,500.

செலுத்த வேண்டிய காப்பீட்டு தொகை—மதிப்பீட்டில் 5 சதவீதம்.

எஸ். காளியப்பன், எம்.ஏ.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தருமபுரி.

(த.10)

## திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உள்நாட்டுச் சாராயம் விற்பனை செய்யும் கடைகள்

1972-73-க்குரிய வருடத்தில் (1-9-1972 முதல் 31-8-1973 வரை) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 11 வட்டத்திலும் 2 வது வட்டத்திற்கு ஏற்படவிருக்கும் 545 கள்ளுக்கடைகளும், 275 சாராயக் கடைகளும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ஜாபிதாக்களின்படி அந்தந்த வட்ட, துணை வட்ட தலைமை அலுவலகங்களில் குறிப்பிட்டுள்ள நாட்களில் காலை 10 மணிக்குப் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலம் மாதாந்திர கிஸ்து அடிப்படையில் 12 மாத காலத்திற்கு விடப்படும்.

2. மதுத்துறை ஆணையரால் 5-6-1972-ம் தேதியில் வெளியிடப்பட்டு 6-6-1972-ல் தமிழ்நாடு அரசின் விசேட கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட அறிக்கையில் கண்டுள்ள விதிகளின்படியும், தமிழக அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் உத்திரவுகளின் பேரிலும் ஏலம் உறுதி செய்வது அல்லது ரத்துச் செய்வது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

3. ஏல கண்டிஷன்களும், ஏலம் விடப்படும் கடைகளின் விவரங்கள் அடங்கிய அச்சிடப்பட்ட விளம்பரம் எல்லா டிவிஷனல் ஆபீஸ், தாலுகா ஆபீஸ், துணைத் தாசில்தார் ஆபீஸ்களிலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

### கள்ளுக்கடைகள்

| வரிசை எண்ணும் தாலுகாவின் பெயரும். | ஏலம் நடக்கும் தேதி. | நேரம் காலை | ஏலம் விடப்படும் கடைகள். | ஏலம் நடத்தும் இடம். | ஏலம் நடத்தும் அதிகாரியின் பெயர். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. திருநெல்வேலி .. .. .. .. | 1—7—1972 சனிக்கிழமை. | 10-00 | 28 | தாலுகா ஆபீஸ், திருநெல்வேலி. | கோட்டாட்சித் தலைவர், திருநெல்வேலி. |
| ,, | 3—7—1972 திங்கட்கிழமை. | 10-00 | 28 | ஷை | ஷை |
| 2. தென்காசி .. .. .. .. | 4—7—1972 செவ்வாய்க்கிழமை. | 10-00 | 30 | தாலுகா ஆபீஸ், தென்காசி. | ஷை |
| ,, | 5—7—1972 புதன்கிழமை. | 10-00 | 22 | ஷை | ஷை |
| 3. செங்கோட்டை .. .. .. .. | 6—7—1972 வியாழக்கிழமை. | 10-00 | 14 | தாலுகா ஆபீஸ், செங்கோட்டை. | ஷை |
| 4. அம்பாசமுத்திரம் .. .. .. | 1—7—1972 சனிக்கிழமை. | 10-00 | 31 | தாலுகா ஆபீஸ், அம்பாசமுத்திரம். | கோட்டாட்சித் தலைவர், சேர்மாதேவி. |
| ,, | 3—7—1972 திங்கட்கிழமை. | 10-00 | 30 | ஷை | ஷை |
| 5. நாங்குனேரி .. .. .. .. | 4—7—1972 செவ்வாய்க்கிழமை. | 10-00 | 36 | தாலுகா ஆபீஸ், நாங்குனேரி. | ஷை |
| ,, | 5—7—1972 புதன்கிழமை. | 10-00 | 36 | ஷை | ஷை |
| 6. சங்கரன்கோவில் .. .. .. | 1—7—1972 சனிக்கிழமை. | 10-00 | 36 | தாலுகா ஆபீஸ், சங்கரன்கோவில். | கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி. |
| 7. சிவகிரி .. .. .. .. .. | 3—7—1972 திங்கட்கிழமை. | 10-00 | 20 | டிப்டி தாசில்தார், ஆபீஸ், சிவகிரி. | ஷை |
| 8. விளாத்திகுளம் .. .. .. .. | 5—7—1972 புதன்கிழமை. | 10-00 | 31 | தாலுகா ஆபீஸ், விளாத்திகுளம். | ஷை |
| 9. ஓட்டப்பிடாரம் .. .. .. .. | 6—7—1972 வியாழக்கிழமை. | 10-00 | 23 | டிப்டி தாசில்தார் ஆபீஸ், ஓட்டப்பிடாரம். | ஷை |
| 10. கோவில்பட்டி .. .. .. .. | 8—7—1972 சனிக்கிழமை. | 10-00 | 40 | தாலுகா ஆபீஸ், கோவில்பட்டி. | ஷை |
| 11. தூத்துக்குடி .. .. .. .. | 1—7—1972 சனிக்கிழமை. | 10-00 | 19 | தாலுகா ஆபீஸ், தூத்துக்குடி. | உதவிக் கலெக்டர், தூத்துக்குடி. |
| 12. ஸ்ரீவைகுண்டம் .. .. .. .. | 4—7—1972 செவ்வாய்க்கிழமை. | 10-00 | 43 | தாலுகா ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம். | ஷை |
| 13. திருச்செந்தூர் .. .. .. .. | 6—7—1972 வியாழக்கிழமை. | 10-00 | 25 | தாலுகா ஆபீஸ், திருசசெந்தூர். | ஷை |
| 14. ,, .. .. .. .. | 7—7—1972 வெள்ளிக்கிழமை. | 10-00 | 28 | ஷை | ஷை |
| 15. ,, .. .. .. .. | 8—7—1972 சனிக்கிழமை. | 10-00 | 25 | ஷை | ஷை |

சாராயக் கடைகள்

| வரிசை எண்ணும், தாலுகாவின் பெயரும். (1) | ஏலம் நடக்கும் தேதி. (2) | நேரம். காலை (3) | ஏலம் விடப்படும் கடைகள். (4) | ஏலம் நடத்தும் இடம். (5) | ஏலம் நடத்தும் அதிகாரியின் பெயர். (6) |
|---|---|---|---|---|---|
| 1. திருநெல்வேலி .. .. .. | 11—7—1972 செவ்வாய்க்கிழமை. | 10-00 | 35 | தாலுகா ஆபீஸ், திருநெல்வேலி. | கோட்டாட்சித் தலைவர், திருநெல்வேலி. |
| 2. தென்காசி .. .. .. .. | 13—7—1972 வியாழக்கிழமை. | 10-00 | 25 | தாலுகா ஆபீஸ், தென்காசி. | டிை |
| 3. செங்கோட்டை .. .. .. | 15—7—1972 சனிக்கிழமை. | 10-00 | 6 | தாலுகா ஆபீஸ், செங்கோட்டை. | டிை |
| 4. அம்பாசமுத்திரம் .. .. .. | 11—7—1972 செவ்வாய்க்கிழமை. | 10-00 | 19 | தாலுகா ஆபீஸ், அம்பாசமுத்திரம். | கோட்டாட்சித் தலைவர், சேர்மாதேவி. |
| 5. நாங்குனேரி .. .. .. .. | 13—7—1972 வியாழக்கிழமை. | 10-00 | 31 | தாலுகா ஆபீஸ், நாங்குனேரி. | டிை |
| 6. சங்கரன்கோவில் .. .. .. | 11—7—1972 செவ்வாய்க்கிழமை. | 10-00 | 23 | தாலுகா ஆபீஸ், சங்கரன்கோவில். | கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி. |
| 7. சிவகிரி .. .. .. .. | 13—7—1972 வியாழக்கிழமை. | 10-00 | 10 | டிப்டி தாசில்தார் ஆபீஸ், சிவகிரி. | டிை |
| 8. கோவில்பட்டி .. .. .. .. | 15—7—1972 சனிக்கிழமை. | 10-00 | 21 | தாலுகா ஆபீஸ், கோவில்பட்டி. | டிை |
| 9. விளாத்திகுளம் .. .. .. | 17—7—1972 திங்கட்கிழமை. | 10-00 | 19 | தாலுகா ஆபீஸ், விளாத்திகுளம். | டிை |
| 10. ஓட்டப்பிடாரம் .. .. .. | 19—7—1972 புதன்கிழமை. | 10-00 | 20 | டிப்டி தாசில்தார் ஆபீஸ், ஓட்டப்பிடாரம். | டிை |
| 11. தூத்துக்குடி .. .. .. .. | 11—7—1972 செவ்வாய்க்கிழமை. | 10-00 | 11 | தாலுகா ஆபீஸ், தூத்துக்குடி. | உதவிக் கலெக்டர், தூத்துக்குடி. |
| 12. ஸ்ரீவைகுண்டம் .. .. .. | 13—7—1972 வியாழக்கிழமை. | 10-00 | 28 | தாலுகா ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம். | டிை |
| 13. திருச்செந்தூர் .. .. .. | 15—7—1972 சனிக்கிழமை. | 10-00 | 27 | தாலுகா ஆபீஸ், திருச்செந்தூர். | டிை |

சி. ராமச்சந்திரன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்.

(த.15)

## அறிக்கை

### ஊராட்சி ஒன்றியம், நிலக்கோட்டை

### மகளிர் மன்றங்களின் பெயர்கள்.

1. திருமதி வசந்தா, கண்வீனர், மகளிர் மன்றம் நிலக்கோட்டை (அஞ்சல்).
2. திருமதி ஏ. அமிர்தம், கண்வீனர் மகளிர் மன்றம், முருகத் தூரான்பட்டி, மாலைய கவுண்டன்பட்டி (அஞ்சல்).
3. திருமதி ஒ. கருப்பாயி, கண்வீனர் மகளிர் மன்றம், பள்ள பட்டி (அஞ்சல்).
4. திருமதி மீனும்மாள், கண்வீனர் மகளிர் மன்றம், முசுவனூத்து (அஞ்சல்).
5. திருமதி எனுசம்மாள், கண்வீனர் மகளிர் மன்றம், சாண்டலர் புரம், பள்ளபட்டி (அஞ்சல்).
6. திருமதி அன்னகாமு, கண்வீனர் மகளிர் மன்றம், குண்டலப் பட்டி, சிறுநாயக்கன்பட்டி (அஞ்சல்).
7. திருமதி ராக்கு சந்தானம், கண்வீனர் மகளிர் மன்றம், மூத்தால புரம், விளாம்பட்டி.
8. திருமதி கருப்பாயி அம்மாள், கண்வீனர் மகளிர் மன்றம், விளாம் பட்டி (அஞ்சல்).
9. திருமதி விமலா, கண்வீனர், மகளிர் மன்றம் மட்டப்பாறை, ராமராஜபுரம் (அஞ்சல்).
10. திருமதி சீதாம்மாள், கண்வீனர், மகளிர் மன்றம் ராமராஜபுரம் (அஞ்சல்).
11. திருமதி எஸ். நவமணி, கண்வீனர், மகளிர் மன்றம், கல்லடிப் பட்டி, பள்ளபட்டி (அஞ்சல்).
12. திருமதி பேச்சியம்மாள், கண்வீனர் மகளிர் மன்றம், சிவஞான புரம், குல்லிசெட்டிபட்டி (அஞ்சல்).
13. திருமதி பாக்கியம், கண்வீனர் மகளிர் மன்றம், மேட்டுப்பட்டி, அணைப்பட்டி (அஞ்சல்).
14. திருமதி இன்னேசியம்மாள், கண்வீனர் மகளிர் மன்றம், குல்லி செட்டிபட்டி, குல்லிசெட்டிபட்டி (அஞ்சல்).
15. திருமதி திருமக்காள், கண்வீனர், மகளிர் மன்றம், சிறுநாயக்கன் பட்டி (அஞ்சல்).
16. திருமதி சரஸ்வதி, கண்வீனர் மகளிர் மன்றம், வீலிநாயக்கன் பட்டி, நிலக்கோட்டை (அஞ்சல்).
17. திருமதி தமிழரசி, கண்வீனர் மகளிர் மன்றம், தும்மலப்பட்டி, நூத்தலாபுரம் (அஞ்சல்.)
18. திருமதி செல்லத்தாயி, கண்வீனர் மகளிர் மன்றம், கொக்குப் பட்டி, கோடாங்கிநாயக்கன்பட்டி (அஞ்சல்).
19. திருமதி முத்துராக்கு, கண்வீனர் மகளிர் மன்றம், குறும்ப பட்டி, நிலக்கோட்டை (அஞ்சல்).
20. திருமதி தவமணி, மகளிர் மன்றம் கண்வீனர், பச்சமலையான் கோட்டை, பச்சமலையான்கோட்டை (அஞ்சல்).
21. திருமதி கமலம், கண்வீனர் மகளிர் மன்றம், அம்மையநாயக்க னூர், அம்மையநாயக்கனூர் (அஞ்சல்).
22. திருமதி டி. சரஸ்வதி, கண்வீனர், மகளிர் மன்றம், மைக்கேல் பாளையம் (அஞ்சல்).
23. திருமதி சின்னம்மாள், கண்வீனர், மகளிர் மன்றம், சீரங்கம் பட்டி, நிலக்கோட்டை (அஞ்சல்).
24. திருமதி மூக்கம்மாள், கண்வீனர், மகளிர் மன்றம், உச்சணம் பட்டி, நரியூத்து (அஞ்சல்).
25. திருமதி சீனியம்மாள், கண்வீனர், மகளிர் மன்றம், மாவுத்தம் பட்டி, கொடை ரோடு (அஞ்சல்).
26. திருமதி மேரி, கண்வீனர் மகளிர் மன்றம், அம்மாப்பட்டி, கொடைரோடு (அஞ்சல்).
27. திருமதி ஏ. எஸ். செல்லத்தாய், கண்வீனர், மகளிர் மன்றம், அழகம்பட்டி, ஜம்புதுரைக்கோட்டை (அஞ்சல்).
28. திருமதி வீரம்மாள், கண்வீனர், மகளிர் மன்றம், சிலுக்குவார் பட்டி, சிலுக்குவார்பட்டி (அஞ்சல்).
29. திருமதி ராஜாத்தி, கண்வீனர், மகளிர் மன்றம், சக்கயநாயக்க னூர், ஜம்புதுரைக்கோட்டை (அஞ்சல்).
30. திருமதி உமா, கண்வீனர், மகளிர் மன்றம், செம்பட்டி, செம்பட்டி (அஞ்சல்).

ஆணையர்,
ஊராட்சி ஒன்றியம், நிலக்கோட்டை

(த. 9)

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1972-73-ம் ஆண்டுக்கு (1—9—72 முதல் 31—8—73 முடிய உள்ள காலத்துக்கு) கள் இறக்கும் உரிமையும் சேர்த்து கள்ளுக்கடைகளும், சாராயக்கடைகளும் சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகங்களில் கீழே கண்டுள்ளபடி நிர்ணயித்துள்ள தேதிகளில் ஏலம் விடப்படும். குறிப்பிட்ட தேதிகளில் ஏலம் காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படும். ஏலத்தில் நிபந்தனைகளும் தாலுகாவாரியாக உள்ள கள், சாராயக் கடைகளின் பட்டியலும், புத்தக வடிவத்தில் கலெக்டர் அலுவலகம், கோட்டாட்சியாளர் அலுவலகம், மற்றும் தாலுகா அலுவலகம் ஆகிய இடங்களில் உரிய கிரயம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

## கள்ளுக் கடைகள்

| தாலுகாவின் பெயர். (1) | ஏலத்தேதி. (2) | ஏலம் விடப்படும் கடைகள். (3) | ஏலம் நடக்கும் இடம். (4) | ஏல விற்பனை அலுவலர். (5) |
|---|---|---|---|---|
| 1 திருச்சிராப்பள்ளி .. .. | 1—7—72 .. | 1 முதல் 30 .. | தாலுகா அலுவலகம், திருச்சி. | கோட்டாட்சியாளர், திருச்சி. |
| | 3—7—72 .. | 31 முதல் 60 .. | ஷை | ஷை |
| | 4—7—72 .. | 61 முதல் 84 .. | ஷை | ஷை |
| 2 கரூர் .. .. .. | 5—7—72 .. | 1 முதல் 30 .. | தாலுகா அலுவலகம், கரூர் .. | உதவி கலெக்டர், கரூர். |
| | 6—7—72 .. | 31 முதல் 60 .. | ஷை | ஷை |
| | 7—7—72 .. | 61 முதல் 84 .. | ஷை | ஷை |
| 3 குளித்தலை .. .. | 10—7—72 .. | 1 முதல் 30 .. | தாலுகா அலுவலகம், குளித்தலை. | ஷை |
| | 11—7—72 .. | 31 முதல் 62 .. | ஷை | ஷை |
| 4 மணப்பாரை .. .. | 12—7—72 .. | 1 முதல் 25 | தாலுகா அலுவலகம், மணப்பாரை. | ஷை |
| | 13—7—72 .. | 26 முதல் 43 .. | ஷை | ஷை |
| 5 உடையார்பாளையம் .. | 1—7—72 .. | 1 முதல் 30 .. | தாலுகா அலுவலகம், ஜெயங்கொண்டம். | கோட்டாட்சியாளர், அரியலூர். |
| | 3—7—72 .. | 31 முதல் 62 .. | ஷை | ஷை |
| 6 அரியலூர் .. .. .. | 4—7—72 .. | 1 முதல் 30 .. | தாலுகா அலுவலகம், அரியலூர். | ஷை |
| | 5—7—72 .. | 31 முதல் 55 .. | ஷை | ஷை |
| 7 பெரம்பலூர் .. .. | 6—7—72 .. | 1 முதல் 40 .. | தாலுகா அலுவலகம், பெரம்பலூர். | ஷை |
| | 7—7—72 .. | 41 முதல் 75 .. | ஷை | ஷை |
| 8 லால்குடி .. .. .. | 6—7—72 .. | 1 முதல் 40 .. | தாலுகா அலுவலகம், லால்குடி. | கோட்டாட்சியாளர், முசிறி. |
| | 7—7—72 .. | 41 முதல் 78 .. | ஷை | ஷை |
| 9 துறையூர் .. .. .. | 10—7—72 .. | 1 முதல் 30 .. | தாலுகா அலுவலகம், துறையூர். | ஷை |
| | 11—7—72 .. | 31 முதல் 56 .. | ஷை | ஷை |
| 10 முசிறி .. .. .. | 12—7—72 .. | 1 முதல் 30 .. | தாலுகா அலுவலகம், முசிறி .. | ஷை |
| | 13—7—72 .. | 31 முதல் 59 .. | ஷை | ஷை |
| 11 திருமயம் .. .. .. | 1—7—72 .. | 1 முதல் 35 .. | தாலுகா அலுவலகம், திருமயம். | துணை கலெக்டர், புதுக்கோட்டை. |
| | 3—7—72 .. | 36 முதல் 65 .. | ஷை | ஷை |
| 12 ஆலங்குடி .. .. | 4—7—72 .. | 1 முதல் 30 .. | தாலுகா அலுவலகம், ஆலங்குடி. | ஷை |
| | 5—7—72 .. | 31 முதல் 63 .. | ஷை | ஷை |
| 13 குளத்தூர் .. .. | 10—7—72 .. | 1 முதல் 20 .. | தாலுகா அலுவலகம், குளத்தூர்—கீரனூர். | ஷை |
| | 11—7—72 .. | 21 முதல் 43 .. | ஷை | ஷை |

## சாராயக் கடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 திருச்சிராப்பள்ளி .. .. | 14—7—72 .. | 1 முதல் 30 .. | தாலுகா அலுவலகம், திருச்சி .. | கோட்டாட்சியாளர், திருச்சி. |
| | 15—7—72 .. | 31 முதல் 55 | ஷை | ஷை |
| 2 லால்குடி .. .. .. | 17—7—72 .. | 1 முதல் 18 .. | தாலுகா அலுவலகம், லால்குடி. | கோட்டாட்சியாளர், முசிறி. |
| 3 முசிறி .. .. .. | 18—7—72 .. | 1 முதல் 25 .. | தாலுகா அலுவலகம், முசிறி .. | ஷை |
| 4 துறையூர் .. .. .. | 19—7—72 .. | 1 முதல் 21 .. | தாலுகா அலுவலகம், துறையூர். | ஷை |
| 5 பெரம்பலூர் .. .. | 20—7—72 .. | 1 முதல் 26 .. | தாலுகா அலுவலகம், பெரம்பலூர். | கோட்டாட்சியாளர், அரியலூர். |
| 6 உடையார்பாளையம் .. | 14—7—72 .. | 1 முதல் 22 .. | தாலுகா அலுவலகம், ஜெயங்கொண்டம். | ஷை |
| 7 அரியலூர் .. .. .. | 15—7—72 .. | 1 முதல் 25 .. | தாலுகா அலுவலகம், அரியலூர். | ஷை |
| 8 கரூர் .. .. .. | 17—7—72 .. | 1 முதல் 23 .. | தாலுகா அலுவலகம், கரூர் .. | உதவி கலெக்டர், கரூர். |
| 9 மணப்பாரை .. .. | 20—7—72 .. | 1 முதல் 28 .. | தாலுகா அலுவலகம், மணப்பாரை. | ஷை |
| 10 குளித்தலை .. .. | 21—7—72 .. | 1 முதல் 22 .. | தாலுகா அலுவலகம், குளித்தலை. | ஷை |
| 11 திருமயம் .. .. .. | 18—7—72 .. | 1 முதல் 23 .. | தாலுகா அலுவலகம், திருமயம். | துணை கலெக்டர், புதுக்கோட்டை. |
| 12 ஆலங்குடி .. .. | 19—7—72 .. | 1 முதல் 24 .. | தாலுகா அலுவலகம், ஆலங்குடி. | ஷை |
| 13 குளத்தூர் .. .. | 21—7—72 .. | 1 முதல் 25 .. | தாலுகா அலுவலகம், குளத்தூர்—கீரனூர். | ஷை |

தி. பா. பாரதி,
மாவட்ட ஆட்சித் தலைவர்.

(த. 14)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர் களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 12–7–1972 புதன்கிழமை பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3–30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிகப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : திருச்சி வடிகால் திட்டம்— இரண்டாம் நிலை— பகுதி 2— சுட்ட மண், வார்ப்பிரும்பு குழாய்களையும் தனி உறுப்பு களையும் பதித்து இணைத்தல், பிற அமைப்புகளையும் பொருத்துதல்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை : ரூ. 3,900 (ரூபாய் மூவாயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்).

இத் தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது, ஒரு வடிவில் திருச்சி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திருச்சி செயற்கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி.15, தில்லைநகர் மெயின்ரோடு, திருச்சி-18 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 10–7–1972 திங்கட் கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்** (த.கு.வ.வா.),
செயல் வட்டம், மதுரை-2.

(த. 11)

---

## பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணாசாலை, சென்னை-2.

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மேலாளர் (தொழில் நுட்பம்) பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணாசாலை, சென்னை-2-ல் உள்ள மேலாளர் (தொழில் நுட்பம்) அவர்கள் அலுவலகத்தில் 2–8–1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விவரம். | முன் வைப்புத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பாரங்கள் விற்பனைவரி உட்பட. ரூ. | முடிக்கும் காலம். |
|---|---|---|---|
| சென்னை-சைதாப்பேட்டையிலுள்ள துணை பணிமனை, மற்றும் பேருந்து நிலையத்தில் தார் சாலை, மற்றும் முள் கம்பி வேலி அமைத்தல். | 2,625 | 15·15 | ஒரு மாதம். |

ஒப்பந்தம் :—

ஒப்பந்தங்கள் மேலாளர் (தொழில் நுட்பம்), பல்லவா போக்கு வரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் மேற்கூறிய அதே தேதி யில் 2–8–1972 மணி 3-15-க்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைப் படங்கள் முதலியவற்றை நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்கு வரத்துக் கழகம், சென்னை-2-ல் உள்ள அலுவலகத்தில் மேற்கூறிய தொகையைக் கட்டி, கீழ்க்கண்ட தேதிகளில் (10–7–1972 முதல் 1–8–1972 வரை) எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை, “நிதி நிலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரி” பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களுக்குச் செலுத்தி, செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**பி. ஆர். சுப்பிரமணியம்,**
மேலாளர் (தொழில் நுட்பம்), பல்லவா போக்கு வரத்துக் கழகம், சென்னை-2.

(த.16)

---

## பொதுப்பணித் துறை

| ஷை | 17—7—1972 | 34 முதல் 63 கடைகள் முடிய (கடை எண். 34, 49, 51, 52, 55, 59 நீங்கலாக). | 24 | ஷை | ஷை |
| பொள்ளாச்சி .. | 18—7—1972 | 1 முதல் 59 கடைகள் முடிய (கடை எண். 8, 10, 14, 18, 20, 21, 24, 32, 34, 40, 46 நீங்கலாக). | 48 | தாலூகா அலுவலகம், பொள்ளாச்சி. | கோட்டாட்சித் தலைவர், பொள்ளாச்சி. |
| திருப்பூர் .. .. | 15—7—1972 | 1 முதல் 40 கடைகள் வரை (கடை எண். 12, 14, 15, 24 நீங்கலாக). | 36 | தாலூகா அலுவலகம், திருப்பூர். | ஷை |
| ஷை | 17—7—1972 | 41 முதல் 75 கடைகள் முடிய (கடை எண். 43, 54, 60, 66, 70, 72 நீங்கலாக). | 29 | ஷை | ஷை |
| உடுமலை .. | 20—7—1972 | 1 முதல் 61 கடைகள் முடிய (கடை எண். 4, 12, 14, 17, 18, 19, 21, 24, 27, 37, 39, 42, 44 நீங்கலாக). | 48 | தாலூகா அலுவலகம், உடுமலை. | ஷை |

ஜெ. சிவகுமார்,
மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை.

(த. 63)

---

## ஒப்பந்தப் புள்ளி

---

### வீட்டு வசதி வாரியம், சென்னை கிழக்குக் கோட்டம்

கீழ்க்கண்ட வேலைகளுக்காக, உறையின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்ட தனித் தனியான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 12—7—1972 மாலை 3 மணிக்கு மேற்படாதவாறு கீழே கையொப்பமிட்டவருக்கு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | சுமார் மதிப்பு. ரூ | கட்டுத்தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. ரூ. |
|---|---|---|---|
| 1 ∴போர்சோர் எஸ்டேட்டில் உள்ள ஒரு பிளாக்கில் 20 குடியிருப்புகள் அடங்கிய அரசாங்க வாடகை பிளாக்குகள் மேல் 2-வது மாடி கட்டுதல் (டி. பிளாக்குகள்) பிரிவு 1. | 4,31,000 | 6,470 | 15+ விற்பனை வரி. |
| 2 ∴போர்சோர் எஸ்டேட்டில் உள்ள ஒரு பிளாக்கில் 20 குடியிருப்புகள் அடங்கிய அரசாங்க வாடகை பிளாக்குகள் மேல் 2-வது மாடி கட்டுதல் (டி. பிளாக்குகள்) பிரிவு 2. | 4,31,000 | 6,470 | ஷை |
| 3 ∴போர்சோர் எஸ்டேட்டில் உள்ள ஒரு பிளாக்கில் 20 குடியிருப்புகள் அடங்கிய அரசாங்க வாடகை பிளாக்குகள் மேல் 2-வது மாடி கட்டுதல் (டி. பிளாக்குகள்) பிரிவு 3. | 4,31,000 | 6,470 | ஷை |
| 4 ∴போர்சோர் எஸ்டேட்டில் உள்ள ஒரு பிளாக்கில் 20 குடியிருப்புகள் அடங்கிய அரசாங்க வாடகை பிளாக்குகள் மேல் 2-வது மாடி கட்டுதல் (டி. பிளாக்குகள்) 8 பிளாக்குகள் பிரிவு 4. | 5,04,000 | 7,560 | 20+ விற்பனை வரி. |

ஒப்பந்தப் பத்திரங்கள், வரைபடங்கள், மற்றும் இதர விவரங்கள் சலான் மூலம் தொகையைச் செலுத்திக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் 28—6—1972 அன்று அல்லது அதற்குப் பிறகு காலை 11 மணிக்கு மற்றும் 2 மணியிலிருந்து பெறலாம். கீழே கையொப்பமிட்டவருக்கு ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க உரிமை உண்டு.

கே. சி. ரெட்டி,
நிருவாகப் பொறியாளர் (கிழக்கு).

(த. 48)

## பயிற்சி

### கல்வித் துறை

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குக் குறுகிய கால பி.டி. பயிற்சி வகுப்பு.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் அல்லது சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட்டினால் அதற்குச் சமமானது என்று கருதுகிற இதர பல்கலைக் கழகத்தில் பி.ஏ., பி.ஓ.எல்., அல்லது பி.எஸ்சி. தேர்வு பெற்ற செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்காக 4 மாத காலப் பயிற்சி வகுப்பு சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும், புதுக்கோட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரியிலும் 1972 நவம்பர் 20-ல் தொடங்கும். சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் மனுக்களைப் பெறக் கடைசித் தேதி 1972 ஆகஸ்ட் 9 ஆகும்.

முன்னாள் திருவாங்கூர் கொச்சி மாநிலத்திலும் ஆந்திரப் பிரதேசத்திலும் வழங்கப்பட்ட டி.எஸ்.எல்.சி. (செகண்டரி கிரேடு ஓராண்டு காலப் பயிற்சி) பயிற்சிக்குப் பின்பு தமிழ்நாட்டில் 5 ஆண்டுகளுக்குக் குறையாமல், அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் பணியாற்றியிருந்தால் சென்னை அரசினர் தேர்வுகள் ஆணையாளரால் வழங்கப்பட்ட செகண்டரி கிரேடு டி.எஸ்.எல்.சி.-க்கு இணையாகக் கருதப்படும்.

மனுதாரர்கள் செங்கல்பட்டு கருவூலத்தில் மனுக்கட்டணமாக **"XXII Education—F, General—(E) Miscellaneous—(iii) other items."** என்ற தலைப்பில் 0·50 காசு செலுத்திச் சலான் ரசீதை வேண்டுகோள் கடிதத்துடன் இணைத்து அச்சிட்ட மனுவைப் பெறுவதற்காக அனுப்பி வைக்க வேண்டும். இந்தக் கட்டணத்தை மணியார்டர் மூலமும் அனுப்பி வைக்கலாம் அல்லது முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை-15 அவர்களுக்கு கிராஸ் செய்யப்பட்ட போஸ்டல் ஆர்டராகவும் அனுப்பலாம் அல்லது கல்லூரியில் ரொக்கமாகவும் செலுத்தலாம். 1972 ஜூலை 1-க்கு முன் தேதியிட்ட போஸ்டல் ஆர்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படா. 9"×4" அளவுள்ள சுயவிலாசம் எழுதிய போதிய அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட உறை மனுவுக்கான வேண்டுதல் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**கே. ஆர். மாணிக்கம்,**
முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை.

(த. 29)

## ஒப்பந்தப் புள்ளி

### பால்பண்ணை வளர்ச்சித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், பால் காலனி, மாதவரம், சென்னை-51-ல் 20,'-0" விட்டமுள்ள கிணறு தோண்டும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்பத்திரங்கள், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை ஆணையர் அலுவலகம், பால் காலனி அஞ்சல், மாதவரம் சென்னை-51-ல் எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் 4-30 மணி வரை ஒப்பந்தப் புள்ளிக்கு ரூ. 2 (ரூபாய் இரண்டு மட்டும்) + விற்பனை வரி செலுத்திப் பெறுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 22-7-1972 மாலை 3-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

**என். ஹரிபாஸ்கர்,**
ஆணையர்.

மாதவரம் பால் காலனி,
சென்னை-51.

**(த. 25)**

## ஒப்பந்தப் புள்ளி

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை.

சென்னை-5

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கீழே கையொப்பமிட்டவரால் இந்த மாநிலத்தில் திருச்செந்தூர், தொழிற் பயிற்சி நிறுவனத்தின் ட்ரேட்ஸ் ஆப் மெகானிக் (மோட்டார் வாகனம்), டர்னர் மற்றும் வெல்டர்களுக்குத் தேவையான தொழில் செய்யும் கருவிகள் (Tools) மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்காக, 29-7-1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. தேவையானவைகளின் படிவம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5ல் ஒப்பந்தப்படிவத்தின் விலை மற்றும் விற்பனைவரி ரூ10.35க்கு கருவூல இந்திய ரிசர்வ் வங்கியின் ரிசிப்ட்ட சலானையும் விண்ணப்பத்துடன் வைத்து அனுப்பிப் பெறலாம். (தொகை திருப்பித் தரப்பட மாட்டாது).

ஒப்பந்தப் படிவத்தின் விலை மற்றும் விற்பனை வரியைத் தமிழ்நாடு அரசின் கணக்கில், ஒப்பந்தப்பத்திரத்தின் விலை ரூ. 10 மற்றும் விற்பனை வரி 35 காசு என்றும் சலானில் விவரமாகக் குறிப்பிட்டு **"XXII (a) Miscellaneous—Social and developmental organisation—Labour and Employment-Receipt from Craftsman Training Scheme—Miscellaneous receipts"** என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

வேறு வகையில் செலுத்தப்படும் தொகை ஒப்பந்தப் பத்திரங்களின் விலையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் பத்திரங்கள் 31-7-1972 காலை 11-00 மணிக்குத் திறக்கப்படும்.

**இயக்குநர்,**
வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி,
சென்னை-5.

(த. 53)

## ஏல விற்பனை

### எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை

வீணான மற்றும் உபயோகமற்ற அச்சு இயந்திரங்கள் மற்றும் ஸ்டோர்ஸ் சாமான்கள், அரசு அச்சகம், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1-ல் 12-7-1972 காலை 11.30 மணிக்கும், மத்திய சிறைச்சாலை அச்சகம், சென்னை-3-ல் 13-7-1972 காலை 11-30 மணிக்கும் பொது ஏலத்தில் விற்கப்படும்.

மற்ற விவரங்கள் மற்றும் ஏல அறிவிப்புப் பிரதிகளுக்கு, எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1-ல் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**ஜி. ரங்காராவ்,**
எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர்,
சென்னை-1.

(த. 66)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப் பணித்துறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திருநெல்வேலி-கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி-2 அவர்களால் 19-7-1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—கன்னியாகுமரி வட்டம், கொல்லங்கோடு அரசு உயர்நிலைப்பள்ளிக்கு இரண்டு அடுக்குக் கட்டடம் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை.—ரூ. 5,000.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.—ரூ. 20.

விற்பனை வரி.—0.70 காசு.

வேலை முடிக்க வேண்டிய காலம்.—12 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (திருப்பித்தரப்பட மாட்டாது) எந்தக் கருவூலத்திலாவது **" P. W. III O. R. Receipt "** என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டடக் கோட்டம், பாளையங்கோட்டை அவர் தம் கணக்கிலும், விற்பனை வரியை **"XXI S.T. b Receipts under State Sales Tax Act—General sales tax"** என்ற தலைப்பிலும் ஒரே சலானில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்த வடிவம் மற்றும் ஒப்பந்தப் பத்திரங்கள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ, மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப் பணித்துறை, திருநெல்வேலி-கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2 3-7-1972 முதல் 15-7-1972 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் மேலாளர் அவர்களுக்கு விண்ணப்பத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் விலை விற்பனை வரி செலுத்திய ரிசிப்ட் சலானை வைத்து அனுப்பிப் பெறலாம். குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரும் மனுக்கள் பொதுவாக கவனிக்கப்படமாட்டாது.

மற்ற விவரங்கள் இந்த அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுப் பணித்துறை,
திருநெல்வேலி-கன்னியாகுமரி வட்டம்,
திருநெல்வேலி-2.

(த. 65)

## ஒப்பந்தப் புள்ளி ரத்து

### பொதுப் பணித் துறை

வேலையின் பெயர்.—வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரிக்கு—அபிவிருத்தியும் கூடுதல் கட்டடமும் கட்டுதல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, வேலைக்காக 20-6-1972 ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி என நிர்ணயிக்கப்பட்டு அழைக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ரத்து செய்யப்படுகின்றன.

**ஆர். செல்வராசன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப் பணித் துறை, செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்.

(த. 83)

## தொழில் நுட்பக் கல்வித் துறை, கிண்டி, சென்னை-25

டிராஸ்தெடிக் மற்றும் ஆர்தெடிக் டிப்ளமா படிப்பு.

மேற்கண்ட படிப்பில் சேருவதற்கு தகுதிவாய்ந்த மனுதாரர்களிட மிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

படிப்பு விவரம்.—படிப்புக் காலம் மூன்று ஆண்டு. முதல் ஆண்டுப் படிப்பு மத்திய பாலிடெக்னிக், அடையார், சென்னை-20-ல் நடைபெறும். இரண்டாம் ஆண்டு மூன்றும் ஆண்டுப் படிப்பு அரசு பொதுமருத்துவமனை, சென்னையில் நடைபெறும்.

சேருவதற்கான தகுதி.

தமிழ்நாடு, தொழில் நுட்பக் கல்வி மாநில போர்டினால் நடத்தப்பட்ட தொழில்நுட்ப உயர்நிலைப்பள்ளிப் படிப்பில் இறுதியாண்டுத் தேர்வில் தேர்வு பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

எஸ்.எஸ்.எல்.சி.யில் அல்ஜீப்ரா மற்றும் ஜியோமிட்ரி அல்லது பௌதிகம் அல்லது இரசாயனம் அல்லது பொறியியல் எலெக்டிவ் பாடமாக எடுத்துத் தேர்வு பெற்றிருப்பதுடன் பல்கலைக் கழகப்படிப்புகளில் சேருவதற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது.

மேற்கண்டவற்றிற்குச் சமமாக தமிழ்நாடு செகண்டரி கல்வி போர்டினால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற தகுதிகள்.

அல்லது

ஆங்கிலோ-இந்தியன் உயர்நிலைப்பள்ளித் தேர்வில் அல்ஜீப்ரா, டிரிங்னோமெட்ரி, ஜியோமிட்ரி, பௌதிகம் மற்றும் இரசாயனம் ஆகிய வற்றில் ஏதாவது இரண்டை விருப்பப் பாடமாகப் படித்துத் தேர்வு பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழகப் படிப்புகளில் சேருவதற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

கணக்கு மற்றும் விஞ்ஞானத்துடன் மெட்ரிக்குலேசன் தேர்வு பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு.—இந்தப் படிப்பில் சேருவதற்கு வயது வரம்பு குறிப்பிடப்படவில்லை.

இந்தப் படிப்பில் சேருவதற்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மனுதாரர்கள் மட்டுமே கவனிக்கப்படுவார்கள். மத்திய அரசில் வேலை பார்ப்பவர்களின் குழந்தைகள், பதிவு செய்யப்பட்ட ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளில் வேலை பார்ப்பவர்களின் குழந்தைகள், தனியார் மற்றும் பொது, அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்களின் குழந்தைகள் விசயத்தில் இந்த மாநிலத்தைச் சேராதவர்களாக இருந்தாலும், அதைக் கவனியாது மனுதாரரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்த மாநிலத்தில் விண்ணப்பிக்கும்போது வேலை பார்ப்பவராக இருந்தால் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு வேலை கொடுத்தவரிடம் சர்ட்டிபிகேட் பெற்று விண்ணப்பத்துடன் அனுப்பி விண்ணப்பித்து மற்ற மனுதாரர்களைப் போலவே போட்டியில் கலந்து கொள்ளலாம்.

படிப்பின் நோக்கம்.—உறுப்பு இழந்தவர்களுக்குச் செயற்கை உறுப்பு இணைப்பதற்கு மருத்துவர்களுக்குத் தேவையான கிராப்ட்ஸ் மேன் மற்றும் டெக்னீசியன்களுக்குப் பயிற்சி அளித்தல்.

படிப்புக் கட்டணம் (Tuition Fees) :

படிப்புக் கட்டணம் ரூ. 180, ஆண்டுக்கு இரண்டு சமமான தவணைகளில் கட்ட வேண்டும்.

சிறப்புக் கட்டணம் ஆண்டுக்கு ரூ. 40.

சேரும்போது கட்டுத் தொகை ரூ. 10.

சாமான்கள் மற்றும் கருவிகள் இழத்தல் அல்லது உடைந்த போதலுக்காகக் கட்ட வேண்டும்.

மேற்கண்ட படிப்பில் சேர விரும்பும் மனுதாரர்கள் குறிப்பிட்ட படிவத்துடன் கிராஸ் செய்யப்பட்ட இந்தியன் போஸ்டல் ஆர்டர் ரூ. 3 "முதல்வர், மத்திய பாலிடெக்னிக், சென்னை-20 அவர்கள் பெறும் வகையில் இணைத்துப் பதிவுக் கட்டணமாக அனுப்ப வேண்டும். மனுப்படிவங்கள், "முதல்வர், மத்திய பாலிடெக்னிக், சென்னை-20 அவர்தம் அலுவலகத்தில் ரூ. 1 கிராஸ் செய்யப்பட்ட போஸ்டல் ஆர்டர் செலுத்திப் பெறலாம். மனுக்கள் முதல்வர், மத்திய பாலிடெக்னிக், அடையாறு, சென்னை-20-ல் 10—7—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்பப்படவேண்டும்.

இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி.
சென்னை-25.

(த. 22)

---

ஒப்பந்தப் புள்ளி

## சேலம் நகராட்சி

சேலம் நகரமன்றத்தில் உள்ள ஜன்னல்களுக்கும் நகரமன்றத் தலைவர் அறையில் உள்ள ஜன்னல்களுக்கும் கீழ்க்கண்ட அளவுகள்படி இயக்கும் வசதியுள்ள வேரியேஷன் பிளைண்ட் (Variation Blind) அலுமினிய தட்டிகள் பொருத்துவதற்கு 1—8—1972-ம் தேதிக்குள் ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகின்றன.

நகர மன்றம்.

| | | |
|---|---|---|
| 1. | 3'—11" அகலம்—6" உயரம். | 9 |
| 2. | 7'—11" அகலம்—6" உயரம். | 1 |

நகரமன்றத் தலைவர் அலுவல் அறை.

| | | |
|---|---|---|
| 1. | 6—3' அகலம்—5'—4" உயரம். | 1 |
| 2. | 6—3½' அகலம்—5'—4" உயரம். | 1 |

பி. ஹமீதலி,
ஆணையர்.

(த. 96)

---

வேலை வாய்ப்பு

## விருதுநகர் நகராட்சி

விருதுநகர், எஸ்.எஸ். சுப்பையா நாடார் நகராட்சி ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் நெசவுத் தொழில் நுட்ப ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர் நியமனம் செய்வதற்குத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

| தகுதி. | சம்பள விகிதம். |
|---|---|
| அரசு நெசவு நிறுவன சூப்ரவைசர் படிப்பு அல்லது வீவிங் இன்ஸ்ட்ரக்டர் படிப்பு போதனையில் ஒரு ஆண்டு அனுபவம்—குறைந்த பட்சக் கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. பூர்த்தி செய்திருக்கவேண்டும். | ரூ. 90—4—110—3—140 வழக்கமான அலவன்ஸ்களுடன். |

மனுக்கள் கல்வி மற்றும் தொழில், தகுதி, வயது மற்றைய முழு விவரங்களுடன். கீழே கையொப்பமிட்டவருக்கு 10—7—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்பி அத்துடன், ஆணையர், விருதுநகர் நகராட்சி அவர்களுக்கு ரூ. 10 மணி ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும்.

பி. புருசோத்தமன், பி.எஸ்சி.,
ஆணையர்.

(த. 69)

---

ஏல விற்பனை

## காவல்துறை

எம்.எஸ்.வி. 2302 லாரி ஒன்று போலீஸ் துணை ஆணையர் அலுவலகம், டிராபிக் மற்றும் லைசென்சிங், சென்னை-7-ல் 1972 ஜூலை 12, புதன்கிழமை காலை 11 மணிக்குப் பொது ஏலத்தில் விற்கப்படும்.

வாகனம் மேற்கண்ட இடத்தில் அலுவலக நேரம் காலை 10-30 மணி முதல் மாலை 5-00 மணி வரை பார்வையிடப்படலாம்.

விற்பனை நிபந்தனைப் பிரதிகள் போலீஸ் ஆய்வாளர் (Inspector of Police) டிராபிக் பிளானிங், போலீஸ் துணை ஆணையர் அலுவலகம், டிராபிக் மற்றும் லைசென்சிங், சென்னை-7-ல் பெறலாம்.

காவல் துணை ஆணையர்,
டிராபிக் மற்றும் லைசென்சிங்.

(த. 84)

---

ஒப்பந்தப் புள்ளி

## சிறு தொழில் கழகம் லிமிடெட்

தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள 32, உட்ஸ் சாலை, சென்னை-2

பி.டி சோல் (B. T. Sole) பெரிய கட்பீஸ் இ.டி.பப், மற்றவைகள் டான்சி லெதர் ஒர்க்ஸ், பெரம்பூர், சென்னை-12-ல் எந்த நிலையில் இருக்கிறதோ அதே நிலையில் விற்பதற்கு 17—7—1972 அன்று காலை 11-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்கள் மேற்பார்வையாளர், டான்சி லெதர் ஒர்க்ஸ், பெரம்பூர், சென்னை-12-ல் ரூ. 5·85 காசு மேற்கண்ட யூனிட்டின் மேற்பார்வையாளர் அவர்களிடம் நேரில் பணமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ செலுத்தி பெறலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள் " பி.டி. சோல், ஈ.ஐ.பப் மற்றவைகள் பெரிய கட்பீசுகள் வாங்குவதற்கு 17—7—1972 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி " என்று மூடி முத்திரையிட்ட உறையில் குறிப்பிட்ட மேற்பார்வையாளர், டான்சி லெதர் ஒர்க்ஸ், பெரம்பூர், சென்னை-12 அவர்களுக்கு 17—7—1972 காலை 11-00 மணிக்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 17—7—1972 மதியம் 12-00 மணிக்கு டான்சி லெதர் ஒர்க்ஸ், பெரம்பூர், சென்னை-12-ல் திறக்கப்படும்.

நிருவாக இயக்குநர்.

(த. 54)

## வேலை வாய்ப்பு

### திருநெல்வேலி-கன்னியாகுமரி மாவட்டங்களில் தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்வீஸில் ஸ்பெசலிஸ்ட் ஆசிரியர்கள் நியமனம்

திருநெல்வேலி தலைமைக் கல்வி அலுவலர் அலுவல் வரம்பிலுள்ள பல்வேறு வகைப் பதவிகளுக்கு நேரடி நியமன முறையில் நியமனத்துக்காக ஆண், பெண் மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப் படுகின்றன.

| தொடர் எண்ணும் வேலையின் பெயரும் | எதிர் பார்க்கப் படும் காலி இடங்கள் |
|---|---|
| 1. உடல் பயிற்சி ஆசிரியர்கள் .. .. .. | 4 |
| 2. தையல் ஆசிரியர்கள் .. .. .. | 3 |
| 3. தமிழ் பண்டிட், கிரேடு 2 .. .. .. | 3 |
| 4. ஓவிய ஆசிரியர்கள் .. .. .. .. | 8 |

இந்த வேலைக்குரிய தகுதியும் சம்பள விகிதமும் வருமாறு :—

உடற்பயிற்சி ஆசிரியர் சம்பள விகிதம் ரூ. 210–5–245–10–325 தமிழ்நாடு அரசினரின் உடல் பயிற்சி ஆசிரியர்கள் தேர்வில் அயர் கிரேடு அல்லது லோயர் கிரேடு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

தையல் ஆசிரியைகள் சம்பள விகிதம் ரூ. 210–5–245–10–325 எஸ்.எஸ்.எல்.சி. பூர்த்தி செய்தவராகவும் தையல் வேலைகள் ஆடை செய்தல் ஆகியவைகளில் குருப் சர்டிபிகேட் டெக்னிகல் ஆசிரியைப் பயிற்சி சர்டிபிகேட் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி. யுடன் தொழிற்பள்ளிச் சான்றிதழ் தொழில் நுட்ப ஆசிரியர் சான்றிதழ் பெற்றவராக இருக்க வேண்டும்.

தமிழ் பண்டிட் கிரேடு—2. சம்பள விகிதம் ரூ. 210–5–245–10—325, தமிழ் மொழியில் (1) ஓரியன்டல் டைட்டில். (2) பண்டிதர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் அல்லது சீனியர் பேசிக் கிரேடு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். (தமிழ்நாடு அரசினர் நிறுவனங்கள் வழங்கும் சான்றிதழ்கள்).

ஓவிய ஆசிரியர்கள் சம்பள விகிதம் ரூ. 210–5–245–10–325. ஓவியத்தில் அயர்கிரேடு உள்ள தொழில் நுட்ப ஆசிரியர் சான்றிதழ் இருக்கவேண்டும்.

வயது : 1972 ஜூலை 1ஆம் தேதியில் 30 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்கலாகாது. இராணுவம் கடற்படை ஆகியவைகளிலிருந்து படைக்கலைப்பினால் அனுப்பப்பட்டவர்கள், 1972 ஜூலை 1-ல் 40 வயது நிறைவு பெறுமல் இருக்குமானல் அவர்களும் மனுச் செய்யலாம். இந்த அறிவிப்பில் உள்ள இணைப்பில் உள்ள வடிவத்தில் இருக்க வேண்டும். இந்த அறிவிப்பு அரசிதழில் வெளியான 15 நாட்களுக்குள் திருநெல்வேலி தலைமைக் கல்வி அலுவலருக்கு மனுக்கள் வந்து சேர வேண்டும்.

பொதுக் கல்வி, தொழில் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, ஆகியவைகளின் சான்றிதழ் அசல் சான்றிதழ்கள் மனுவுடன் இணைத்து அனுப்பப் படவேண்டும். அசல் சான்றிதழ்கள் இல்லாத மனுக்கள் நிராகரிக்கப் படும்.

1972-ல் மே 1-க்கு முன் இல்லாத வகையில் மதிப்பிற்குரிய பிரமுகர்களிடமிருந்து இரண்டு நன் நடத்தைச் சான்றிதழ்கள் வாங்கி அனுப்ப வேண்டும். ஏற்கெனவே அரசுப் பணியில் அல்லது தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோர் தங்களுடைய தற்போதைய நிருவாகிகள் மூலமே மனுக்களை அனுப்பி வைக்க வேண்டும். ஒவ்வொரு மனுதாரும் அரசுக் கருவூலத்தில் "XXII Education E. general Miscellaneous other items" என்ற தலைப்பில் செலுத்தி அசல் சலானை மனுவுடன் இணைத்து அனுப்ப வேண்டும். இப்படிக் கட்டப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

கீழே கண்ட வகை மனுதாரர்கள் கட்டணம் செலுத்தவேண்டிய தில்லை:

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பழங்குடி மக்கள் பிற்பட்ட வகுப்பினர்-எந்தப் பல்கலைக் கழகத்திலாவது இண்டர் மீடியட் தேறியிருந்தாலும் மேலே சொல்லப்பட்ட தகுதிகளை எந்தப் பல்கலைக் கழகத்திலிருந்தாவது பெற்றிருந்தாலும் வருவாய்த்துறையில் டிப்டி தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாதவரிடமிருந்து தாங்கள் குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதற்குச் சான்றிதழ் பெற்று அனுப்ப வேண்டும்.

போர்ப்பணியாற்றியவர்களானல் ஆட்கலைப்புச் சான்றிதழ் காட்டப்பட வேண்டும். மனுதாரர்களுக்கு நேர் காணல் பேட்டி அளித்து திருநெல்வேலி தலைமைக் கல்வி அலுவலர் நியமனத்துக்காக மனுதாரர்களைத் தெரிந்தெடுப்பார்.

அழைக்கும்போது தங்கள் சொந்தச் செலவில் நேர் காணல் பேட்டிக்கு வரத் தயாராக இருக்க வேண்டும். இப்படித் தெரிந்தெடுத்து நியமனம் பெறுவதைக் கொண்டு, பணியில் நிரந்தரமாக அமர்த்திக் கொள்வதற்குப் பாத்தியதை இருப்பதாகக் கருதலாகாது.

திருநெல்வேலி தலைமைக் கல்வி அலுவலர் அல்லது வேறு அலுவலர் ஆகியோரிடம் சிபாரிசு போன்றவைகளைக் கொண்டுவர முயற்சி செய்வோர், காரணம் எதுவும் கூறப்படாமல் இந்த நியமனத்திற்குத் தகுதியற்றவராக்கப்படுவர்.

இதில் குறிப்பிடப்பட்ட தகுதிகள் இல்லாதவர்கள் மனுச் செய்ய வேண்டாம். மனுக்கள் இதர அசல் சான்றிதழ்கள் அடங்கிய உறையின் மீது "........... வேலைக்கான மனு" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்வீஸ் ஸ்பெசலிஸ்ட் ஆசிரியர்கள் வேலைக்கு நியமனம் பெறுவதற்கான மனு :—

1 எந்த வேலைக்கு மனுச் செய்யப்படுகிறது என்ற விவரம்.
2 மனுதாரர் பெயர் (கொட்டை எழுத்துக்களில்).
அ. ஆணு ? பெண்ணு ?
ஆ. திருமணம் ஆனவரா? ஆகாதவரா ?
3 தகப்பனர் பெயரும் தொழிலும்.
4 படித்த பள்ளிகள்.
5 தாய் மொழி.
6 1. சமயம், சாதி, வகுப்பு (புள்ளி விவரங்கள் கருதி).
2. மனுதார் தாழ்த்தப்பட்ட வகுப்பை அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவரா? அல்லது கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவரா? (விவரம் தருக).
7. பிறந்த தேதி (ஆங்கில ஆண்டு).
8 அ. பொதுக் கல்வித் தகுதி.
ஆ. தொழில் அல்லது தொழில் நுட்பக் கல்வித் தகுதி, ஆண்டு சான்றிதழின் வகுப்பு அல்லது கிரேடு குறிப்பிடப்பட வேண்டும்.
9 உயர்நிலைப்பள்ளிக் கல்வியில் கற்ற மொழி.
10 முன் அனுபவம்.
11 விளையாட்டு, தேசிய மாணவர் படை மற்றும் இதர உடல் நலப் பயிற்சிகளில் மனுதாரரின் ஈடுபாடு.
12 முகவரி முழு விவரம்.
13 தற்போதைய அல்லது முன்பு வகித்த வேலைகளின் விவரம், வாங்கிய சம்பளம், நியமனத் தேதி, வேலையை விட்டு விலகிய தேதி, வேலையிலிருந்து நீங்கக் காரணம் குறிப்பிடப்பட வேண்டும்.
14 ரூ. 10 கட்டணம் கட்டியதற்குச் சலான் எண், தேதி, எந்தக் கருவூலத்தில் செலுத்தப்பட்டது என்ற விவரம்.

உறுதி மொழி.

.....................ஆகிய நான் மேலே கண்ட விவரங்கள் நான் அறிந்தவரை உண்மையானவை என்று உறுதியளிக்கிறேன்.

மனுதாரர் கையொப்பம்.

ஜி. மகாதேவன்,
தலைமைக் கல்வி அலுவலர், திருநெல்வேலி.

(த. 57)

## விற்பனை

### பழைய டிராக்டர்கள்

விவசாயத்துறை மாவட்டப் பொறியியல் பிரிவு, மதுரை.

வீணை மற்றும் பழுதடைந்த (Condemned and Cannibalised) டிராக்டர்கள் உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு), டி.பி.கே. சாலை, மதுரை-11 அவர்களிடம் எந்த நிலையில் இருக்கிறதோ அப்படியே வாங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் படிவம் மற்றும் இதரப் பத்திரங்கள் உதவி வேளாண்மைப் பொறியாளர் அலுவலகம் (ஆய்வு), மதுரையில் எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை நேரில் பணமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ ரூ. 3-05 காசு செலுத்திப் பெறலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 19—7—72 மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும்.

வீணை டிராக்டர்கள் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பார்வையிடப்படலாம்.

டி. டி. ஏ. ஜெயசீலன்,
உதவி வேளாண்மைப் பொறியாளர்
(ஆய்வு), மதுரை-11.

(த. 87)

## ஒப்பந்தப் புள்ளி

### சேலம் நகராட்சி

பசச்பட்டியல் லேயிங் வாட்டர் மெயின்களுக்கு 3" விட்டமுள்ள ஏ.சி. (அல்லது) சி.ஐ. (அல்லது) பி.வி.சி. பைப்புகள் மற்றும் ஸ்பெசல்ஸ் சுழாயிசி வால்வு (Sluice Valve) வழங்குவதற்கு, நகராட்சிப் பொறியாளர், சேலம் அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

மதிப்பீட்டுத் தொகை : ரூ. 12,000.

மற்ற விவரங்களுக்கு நகராட்சிப் பொறியாளர், சேலம் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

பி. ஹமீது அலி,
ஆணையர்.

(த. 78)

## அரசு காச நோய் சானடோரியம், தாம்பரம், சென்னை-47

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் 1-8-1972 முதல் 30-11-1972 முடிய உள்ள காலத்திற்கு அல்லது வேறு குறிப்பிடப்படும் தேதியிலிருந்து, அரசு காச நோய் சானடோரியம், தாம்பரத்திற்கு மருந்துகள் (**Medicines drug etc**) வழங்க, மருத்துவ மேற்பார்வையாளர், அரசு காச நோய் சானடோரியம், தாம்பரம் அவர்களால், 15-7-1972 மாலை 2-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். தேவையான பொருட்களில் ஒப்பந்த வடிவம் நிபந்தனைப் பிரதிகள் மற்றும் ஒப்பந்தப் படிவங்கள் மருத்துவ மேற்பார்வையாளர் அரசு காச நோய் சானடோரியம் தாம்பரம் அவர்களிடம் பெறலாம். ரூ. 2 (ரூபாய் இரண்டு மட்டும்) விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவிகிதம் +5 சதவிகிதம் சர்சார்ஜ் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா அல்லது எந்த அரசுக் கருவூலத்திலாவது, சென்னை அரசின் கணக்கில் "**XXIII Medical Superintendent Government Tuberculosis Sanatorium, Tambaram J. Mise other receipts**" என்ற தலைப்பிலும் விற்பனை வரி சர்சார்ஜ் ஆகியவற்றை "**XII Sales Tax receipts under the Sales Tax Act General Sales Tax**" என்ற தலைப்பிலும் செலுத்தப்பட வேண்டும். ரிசர்வ் பேங் ஆப் இந்தியாவில் செலுத்தியதற்கான ஒரிஜனல் சலான் கொடுக்கப்பட வேண்டும். கருவூலத்தில் பணம் செலுத்தியிருந்தால் சலானுடைய நம்பர், தேதி, ஒப்பந்ததாரரின் பெயர், பணம் செலுத்தப்பட்ட கருவூலத்தின் பெயர் ஆகியவற்றை ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் குறிப்பிட வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகள், மருத்துவ மேற்பார்வையாளர், அரசு காச நோய் சானடோரியம், தாம்பரம் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு: ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியும், ஒப்பந்தப் புள்ளியின் மொத்த மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்படுமானல் வருமான வரி பாக்கி இல்லாததற்கான (**Clearance**) சர்ட்டிபிகேட்டும், அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் நேசனலிட்டி சர்ட்டிபிகேட்டும் ஒப்பந்தப் புள்ளிப் பிரதிகள் மற்றும் தேவை பொருட்களின் ஒப்பந்தப் வடிவப் பிரதிகள் ஆகியவற்றை இணைத்து ஒப்பந்ததாரர் அனுப்பியிருக்க வேண்டும்.

டாக்டர் வி. ரெங்கசாமி பி.எஸ்.சி,எம்.டி டி.டி.டி.
மருத்துவ மேற்பார்வையாளர்.

(த. 77).

## மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், மின்சார வாரியத்தின் சார்பிலும் மேட்டூர் மின் திட்ட மேற்பார்வையாளரால் 30-9-1972 பிற்பகல் 3 மணிவரை மேட்டூர் மின் திட்ட மத்திய பண்டகசாலையிலிருந்து கீழ்க்கண்ட உபயோகமற்ற பொருட்களை வாங்குவதற்கான தனித்தனி மூடி முத்திரையிடப்பட்ட குத்தகை சீட்டுகள் வரவேற்கப்படுகின்றன.

(1) பலதரப்பட்ட பழுதடைந்த இரும்பு சாமான்களும் காலியான உபயோகப்படுத்தப்பட்ட நிர்யணமற்ற பொருட்களும்.

(2) லோக்கா (நீராவி) ஸ்பேர்சுகளும், லோக்கா பாதை சாமான்களும்

(3) ஜீ.ஐ. குழாய்களுக்கும் (பைப்புகள்) கான்டிட் குழாய்களுக்கும் பொறுத்தமான இணைப்பு சாமான்களும்

ஒவ்வொரு குறிப்பிற்கும் தனித்தனியான குத்தகை சீட்டு.. ..............வாங்குவதற்கு என்று உரையின் மேல் எழுதப்பட்ட குத்தகைகளை அனுப்ப வேண்டும்.

குத்தகை நிபந்தனைகள் பற்றிய பிரிதியும், குத்தகையும் படிவங்களும், பொருட்களின் விவரங்கள் அடங்கிய பிரிதியும் பெருவதற்கு ரூபாய் ஐந்து மட்டும் (திருப்பித்தவரக்கத்தக்கதல்ல) ஒவ்வொரு குறிப்பிற்கும் பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ மேட்டூர் மின் இயக்கத்திட்ட தலைமைக் கணக்காயர் (செலவினம்) அவர்களிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பண அஞ்சல் மூலமாக பெற விரும்புவோர் தங்களுக்கு எந்த பிரதிவேண்டும் என்பதை மிகத் தெளிவாக குறிப்பிட்டனுப்ப வேண்டும்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 23-9-1972 குத்தகை நிபந்தனைகளும் பிரதியும் சாதாரண அஞ்சல் சான்று மூலமாக அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் தவறினலோ அல்லது காலதாமதமாக வந்து சேர்ந்தாலோ மின்சார வாரியம் பொறுப்பேற்காது. குத்தகைப் படிவங்கள் மாற்றத்தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு குத்தகையோ அல்லது எல்லா குத்தகைகளையுமோ எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகைத்தாரர்களுக்கிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவர்.

ரூபாய் 500 (ரூபாய் ஐந்து நூறு மட்டும்) கட்டுத்தொகையாக ஒவ்வொரு குறிப்புக் குத்தகைக்கும் மேட்டூர் மின் திட்ட தலைமை கணக்காயரிடம் நேரில் செலுத்தி ரசீது பெற்றோ அல்லது செட்யூல் வங்கியில் செலுத்தப்பட்ட பண மாற்றலையோ குத்தகை பிரிதியுடன் இணைத்து அனுப்பவேண்டியது. பணமாற்றோலையோ அல்லது இவ்வலுவலகத்தில் டேவணித்தொகை செலுத்தியதற்கான ரசீதோ இணைக்கப்படாத குத்தகை தாள்கள் தள்ளுபடி செய்யப்படும்.

குறிப்பிட்ட நாளில் குறித்த நேரத்தில் வந்திருக்கும் குத்தகைத் தாள்கள், குத்தகைதாரர்கள் முன்னிலையில் 30-9-1972 தேதி பிற்பகல் 4.00 மணியளவில் திறக்கப்படும்.

குத்தகை நிபந்தனைகளும், குத்தகைபிரதியும், குத்தகைத் தாளும் 30-8-1972ம் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.
(த. 103)

## கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்காக, நிருவாகித்தல் மற்றும் வழங்குவதற்காக, கீர்த்திபெற்ற கம்பனிகளிடமிருந்து கீழே கையொப்பமிட்டவரால் 12-7-1972 மாலை 4.00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 4.30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். முழு விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விண்ணப்பித்துப் பெறலாம்.

1. நீர் வழங்கு தலைமை நிலையத்தில் பம்பிங் பிளான்டுகளைப் பழுது பார்த்தல் மற்றும் முழுமையாகச் சீர்படுத்துதல்.

வேலையின் மதிப்பு—ரூ. 9,000.
கட்டுத் தொகை—ரூ. 450.

2. 48" சீலிங் பேன்கள் வழங்குதல்—
சுமார் தேவைகள்—11 எண்ணிக்கை.
கட்டுத் தொகை—ரூ. 150.

3. சாலை வேலைக்கு ஆர். சி. 3 பிட்டுமன் (bitmen) வழங்குதல்
சுமார் தேவை—5 மெட்ரிக் டன்.
கட்டுத் தொகை—ரூ. 200.

4. நீர் வழங்கு தலைமை நிலையத்தில் பம்புகள் மற்றும் மோட்டார்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் வழங்குதல்.

வழங்க வேண்டிய சுமார் மதிப்பு.—ரூ. 5,000.
கட்டுத் தொகை .—ரூ. 250.

கே. ஏ. சுப்பிரமணியம்,
ஆணையர்.

(த. 68)

## திருச்சிராப்பள்ளி நகராட்சி

600 நைட் சாயில் டிரம்கள் (**Night Soil Drums**) வழங்குவதற்காக, நகராட்சி ஆணையர் அவர்களால், அவர்தம் அலுவலகத்தில், 17-7-1972 மாலை 3.30 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் மாதிரிகள் நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களிடம் விண்ணப்பித்துப் பெறலாம்.

டி. கோவிந்தராஜன்.
ஆணையர்.

(த. 102)

## பொள்ளாச்சி நகராட்சி மின் துறை

சிங்கில் பேஸ் ஹவுஸ் சர்விஸ் கனெக்சன் **K.W.Hr.** மீட்டர்கள் வழங்குவதற்கு, 15-7-1972 மாலை 4.00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மாதிரி மற்றும் ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் நகராட்சி மின் பொறியாளர் அவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

ஆணையர்.

(த. 101)

# ஒப்பந்தப் புள்ளி

## தேசிய நெடுஞ்சாலை வேலைகள்

(மதுரை கோட்டம்)

தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காக அவர்களுடைய சார்பில், கீழே குறிப்பிட்டுள்ள வரிசை எண் 1 முதல் 9 வரையுள்ளவேலைகளுக்கான, அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள், கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை மதுரை-2, பி. டி. இராசன் சாலை, மதுரை-2, விலாசத்திலுள்ள அலுவலகத்தில் 12—6—1972-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் **3-30** மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையிலும், மேலும் வரிசை எண், 10 முதல் 26 வரையுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள் உதவிப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, திருநெல்வேலி நிர் 1, அன்புத் தெரு, முருகன் குறிச்சி திருநெல்வேலி விலாசத்திலுள்ள உட்கோட்ட அலுவலகத்தில் 14—7—1972-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-20 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டு அதே நாட்களில் பிற்பகல் 3-3 மணிக்குக் கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை மதுரை அவர்களால் அதே அலுவலகங்களில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். (1) | கட்டுத் தொகை. (2) ரூபாய். | ஒப்பந்தப் புள்ளி கிடைக்கு மிடம். (3) |
|---|---|---|
| 1. மதுரை—கன்னியகுமரி சாலை கி.மீ. 59—62-ல் உள்ள சாலையை அகலப்பத்தி பலப் படுத்ததுல். | 8,000 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2 அலுவலகம். |
| 2. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 62—65-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப்-படுத்துதல். | 8,000 | ஷை |
| 3. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 65—68-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 8,200 | ஷை |
| 4. மதுரை—கன்னியகுமரி சாலை கி. மீ. 68—71-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 9,150 | ஷை |
| 5. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 71—74-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 7,700 | ஷை |
| 6. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 74—77-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 6,500 | ஷை |
| 7. மதுரை—கன்னியகுமரி சாலை கி. மீ. 105—108-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 9,350 | ஷை |
| 8. மதுரை—கன்னியகுமரி சாலை கி. மீ. 108—111-ல் உள்ள சாலையை அகலப்பத்தி பலப் படுத்துதல். | 6,800 | ஷை |
| 9. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 111—115-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 9,350 | ஷை |
| 10. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 134—138-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 10,750 | உதவிப் பொறியாளர், (தேசிய நெடுஞ்சாலை) திருநெல்வேலி-2, அலுவலகம். |
| 11. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 138.8—142.8 -ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 10,550 | ஷை |
| 12. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 142.8—146.4-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல். | 10,000 | ஷை |
| 13. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 170—173-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 8,200 | ஷை |
| 14. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 173—177-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 9,750 | ஷை |
| 15. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 177—181-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 8,700 | ஷை |
| 16. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 183—186-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 8,250 | ஷை |
| 17. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 186—189-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 9,050 | ஷை |
| 18. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 189—192-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 9,950 | ஷை |
| 19. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 192—195-ல் உள்ள -சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 9,050 | ஷை |
| 20. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 195—198-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 6,950 | ஷை |
| 21. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 198—200-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 6,150 | ஷை |
| 22. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 200—203-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 8,050 | ஷை |
| 23. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 213—216-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 8,500 | ஷை |
| 24. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 216—219-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 9,500 | ஷை |
| 25. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 219—221-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 5,900 | ஷை |
| 26. மதுரை—கன்னியாகுமரி சாலை கி. மீ. 221—224-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல். | 8,000 | ஷை |

ஒப்பந்த நிபந்தனை, விவர நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியன அடங்கிய ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.70 வீதம் செலுத்தி, எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதின் மூலம் வரிசை எண். 1 முதல் 9 வரையுள்ள வேலைகளுக்காக கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, மதுரை-2ல் உள்ள அலுவலகத்தில் 5—7—1972-ம் தேதி முதல் 11—7—1972-ம் தேதி வரையிலும்,வரிசை எண். 10 முதல் 26 வரையுள்ள வேலைகளுக்காக உதவிப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை, திருநெல்வேலி-2ல் உள்ள அலுவலகத்தில் 7—7—1972-ம்தேதி முதல் 13—7—1972-ம் தேதி வரையிலும் எல்லா அலுவலக நாட்களில அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மாற்றிய வடிவமைப்பு கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுளுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, மதுரை அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்ட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ் நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்ல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் கோரண்டிகளும், டிமாண்ட் டிராப்ட்களும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன் வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

(த. 93)

மு. பெருமாள்,
கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, மதுரை-2.

## ஒப்பந்தப் புள்ளி

### பெரியகுளம் நகராட்சி

கீழ்க்கண்ட தென்னை மற்றும் இதர மரங்களின் பலன்களை 1972–73-ம் ஆண்டுக்கு ஏலம் உறுதி செய்த நாளிலிருந்து 1973-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய அனுபவித்துக் கொள்ளும் பாத்தியதைக்கு, 15—7—1972ம் தேதி சனிக்கிழமை மாலை 4-00 மணிக்குள் ஆணையர் அவர்களிடம் கொடுக்க கோரப்படுகிறது. ஷெ ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 4-30 மணிக்கு ஆணையரால் திறக்கப்படும்.

| குத்தகை விவரம். | பொறுப்புத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1. நகராட்சி தங்கும் விடுதியிலுள்ள 21 தென்னை மரங்களின் மகசூல் உரிமை. | 25 |
| 2. கீழ வடகரை கம்போஸ்ட் டிப்போ ட.ச. 1985/1 என் இடத்திலுள்ள 7 தென்னை மரமும், ஒரு பனை மரமும், நகராட்சி தினசரி காய்கறி மார்க்கெட்டிலுள்ள ஒரு இலவமரம் ஆகியவற்றின் மகசூல் உரிமை. | 25 |

இது சம்பந்தமாக மற்ற விவரங்களை 8—1—1972ம் தேதி மதுரை மாவட்ட அரசுச் செய்தித்தாள் தனிச்சேர்ப்பில் பிரசுரிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளி அறிக்கையிலிருந்தும், இந்நகராட்சி அலுவலகத்தில் நேரிலும், எழுதிக் கேட்டும் தெரிந்து கொள்ளலாம்.

ஜோ. சுருளிராஜ், எம்.ஏ.,எல்.பி.,பி.டி.,
நகராட்சி ஆணையர்.

(த. 97)

## ஒப்பந்தப் புள்ளி

கோவை நகராட்சி

கோவை சிதம்பரம் பூங்காவிலுள்ள சிறுவர் ரயில் பாதைக்குத் தேவையான சுமார் 1600 அடி நீளமுள்ள தண்டவாளம் சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 26—7—1972 மாலை 3 மணி வரை ஆணையாளரால் பெற்றுக் கொள்ளப்படும்.

மற்ற விரவங்கள் நிபந்தனைகளுக்கு ரூ. 2–06 செலுத்தி நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்

(த. 95)

## ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் பெண்களுக்கும், குழந்தைகளுக்குமான மருத்துவமனைக்கு "எல்" வடிவமுள்ள கட்டடமும், குடும்பக் கட்டுப்பாடு திட்டக் கட்டடமும் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 10—8—1972 வரை நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. 10—8—1972 மாலை 3–00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாளில் மாலை 3–15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 26—7—1972 முதல் 8—8—1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

மா. செல்வராஜன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. ப. து.)
செங்கற்பட்டு—வட ஆர்க்காடு பெருவட்டம்.

(த. 94)

## ஒப்பந்தப் புள்ளி

### கிராமப் பணித்துறை
### பாம்பன் வட்டம்

ந. க. எண். 8533/72/வ3-3. தேதி 19—6—1972.

தமிழ் நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரசு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் 12—7—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலை விவரம்.—முத்துப்பேட்டை பீமிசல் சாலையில் கி. மீ. 74/4 (மைல் 46/4)ல் பாலம் கட்டுதல்.

முன் வைப்புத் தொகை.—ரூ. 11,850/

நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்.—தனிக் கோட்டப் பொறியாளர் (நெ.) திருமானூர் பால வேலை, தஞ்சாவூர்.

ஒப்பந்தங்கள் 12—7—1972 அன்றே மாலை 3–30 மணிக்கு திறக்கப்படும்

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள் பத்திரங்கள், நமூனக்கள், வரை படங்கள் முதலியவற்றை தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை) திருமானூர் பாலவேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25-90 செலுத்தி 3—7—1972 முதல் 11—7—1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பத்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை தனிக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்க கருவூலத்திலேனும் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அவர்கள் பெயரில் ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லு சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையன்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 92)

## ஒப்பந்தப் புள்ளி

### அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை

மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனைக்கு 1–10–1972-ம் தேதி முதல் 31–3–1973-ம் தேதி முடிய தேவையான மருந்து வகைகள், அறுவைச் சிகிச்சைக் கருவிகள், எக்ஸ்ரே மருந்துகள் ஆகியவற்றை ஒப்பந்த முறையில் வாங்குவதற்கான விலைப்பட்டியல், மூடிய முத்திரையிடப்பட்ட நிலையில் மருத்துவமனை முதல்வர் (டீன்) அவர்களால் 31–7–1972-ம் தேதி மாலை 2.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், விநியோகம் செய்ய வேண்டிய மருந்துகள் கருவிகள் பட்டியல், ஒப்பந்த படிவங்கள் ஆகியவற்றை மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை முதல்வர் அவர்களுக்கு, காசோலை மூலமாகவோ, அல்லது அலுவலகத்தில் நேரிலோ விலை ரூ. 5, ரூ. 5.20 (ரூபாய் ஐந்தும் காசுகள் இருபதும்) (படிவத்தில் விலை ரூ. 5, விற்பனை வரி சர்சார்ஜ் ரூ. 0.20) மட்டும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த படிவங்களைக் கோரும் விண்ணப்பத்துடன் சுயமுகவரியுடன் கூடிய ரூ. 3.50 மதிப்புள்ள அஞ்சல் வில்லையும் 0.05 மதிப்புள்ள அகதிகள் புனர்வாழ்வு அஞ்சல் வில்லையும் ஒட்டப்பட்ட நீண்ட 14"×10" அளவு உள்ள சதுர உறையும் அனுப்பவேண்டும். அளவு குறைந்த உறைகளில் படிவங்களை அனுப்ப இயலாது.

முதல்வர்,
அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை

(த.86)

# அஞ்சலகச் சேமிப்பு வங்கி மூலம்
# சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு — 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



தமிழ்நாடு அரசு
சிறு சேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது

## தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்



கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப்பிரச்சினை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்திப் புதிய சக்தி புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.

DR. S. K. [redacted]

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்

**டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.S., A.M.I.H.**

**பழனி சித்தர் வைத்தியசாலை (REGD.) பழனி, S.I.**

**போன் : 16** **தந்தி : சித்தர்**

சென்னை கிளை ஆபீஸ் :

**41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1**

**போன்: 21448**

## அதிசய நீர் ஊற்று நிபுணர்

குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும், (பழைய கிணற்றில் போரிங், குழி இறக்குதல்) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களையெல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அவைகளிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடம் கண்டுபிடித்துக் குறித்துக் கொடுக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய்க் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2 : 3 என்ற விகிதப்படி மூவாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு:— 25 காசு ஸ்டாம்ப் அனுப்புக.

கே. கந்தசாமி,
நீர் ஊற்று நிபுணர்,
கணபதி (அஞ்சல்),
கோயம்புத்தூர் - 6.

தொலைபேசி எண் : 31912.

# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



**தி என்பீல்டு இந்தியா லிமிடெட்**
**சென்னை-19**

PDSEI-1513TM

## கோதையாறு நீர்மின் திட்டம்

1. தமிழ் நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அதன் முக உறையின் மேல் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர் கோதையாறு நீர்மின் திட்டம், 34-ஏ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7 என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தின் கீழ்க்கண்ட வேலைக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியில் மாலை 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அவைகளை அதே நாளில் மாலை 4.00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

| எண். | குறிப்பிடுகை எண். | வேலையின் பெயர். | ஒப்பந்தப் புள்ளி விலை (விற்பனை வரி உட்பட). | கட்டுத் தொகை ரூபாய். | ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளும் கடைசித் தேதி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | கே. சி. 315 | கோதையாறு மேல் தங்கலில் உள்ள குட்டியாறு அணையில் பிளாக்குகள் நெ. III-ல் Ch. 72.5 முதல் Ch. 157.50 முடிய அணைக்கட்டு +4227.00 மட்டம் வரை கட்டுமான வேலை (Building Masonry) செய்தல். | ரூபாய். 10.35 | ரூபாய். 12,000 | 6-7-1972. |

2. ஒப்பந்த செட்டுகளின் நகல்களை (மாற்றத் தக்கவை அல்ல) குறுறிப்பிட்டுள்ள அதன் விலையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இத்தொகை திருப்பித் தரமாட்டாது.

3. இவ்வலுவலகத்தின் மனுபாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும் குறிப்பிட்ட நேரத்திற்குப்பிறகு வரும் ஒப்பந்தங்களையும், கட்டுத் தொகை (Earnest Money deposit) ரசீது இணைக்கபடாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் (Cheques) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் டிராப்டை (Demand Draft) முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் ஒப்பந்தப்புள்ளிகளுடன் அனுப்பக்கூடாது.

4. தாமதமாக அனுப்பப்படும் ஒப்பந்தங்கள், குறிப்பிட்ட நிபந்தனைகள் படி அல்லாத முழுமை பெறாத ஒப்பந்தப்புள்ளிகள், கட்டுத் தொகை கட்டப்படாத ஒப்பந்தங்கள் மேற்படி கட்டுத்தொகை கட்டாததின் காரணத்துடனும் வேறு வேலைகளுடன் கட்டுத் தொகை கட்டியதை இணைத்துக்கொள்ள கூறப்படும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. மேலே குறிப்பிட்டுள்ள வேலையை காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையே அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமே நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்கு பூரண உரிமையுண்டு.

6. ஒப்பந்தப் பிரிதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில்உண்டாகும் காலதாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர்மின் திட்டம்,
34-ஏ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7.

(த. 85)

## விழுப்புரம் நகராட்சி

20 எம். எம்., 15 எம். எம். லிட்டர் அளவுள்ள நீரளவுக் கருவி (Water Meters) நேராக அளவு அறிந்து கொள்ளும் வகையில் (Direct Reading) வழங்குதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் நகர சபை ஆணையரால் 12—7—1972 மாலை 4-00 மணி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

F. O. R. விழுப்புரம் என்று ரேட்ஸ் தெளிவாக குறிக்கப் படவேண்டும். ஆர்வ ஈட்டுத் தொகை ரூ. 325 கட்டப்படவேண்டும். ஏனைய தனிப்பட்ட பொதுவான ஒப்பந்த நிபந்தனைகள் விண்ணப் பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

நகரசபை, விழுப்புரம்

பி. ஐ. பத்மநாபமேனன்,
ஆணையர்.

(த. 74)

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.